# பூங்காற்று புதிதானது

## சித்ரா பாலா

**1**

"இன்னுமா பிளைட் சென்னை வந்து சேர்ந்திருக்காது. அரைவல் டைம் எட்டுன்னு சொன்னீங்களேப்பா. மணி இப்ப ஒன்பதேகால். இன்னும் அண்ணனை காணோமேப்பா" என்று அலுத்தபடி பத்தாவது முறையாக வாசலுக்கு வந்து வீதியை எட்டிப் பார்த்தாள், பிரியா.

"எத்தனைவாட்டிம்மா ரோட்டை எட்டிப் பார்ப்ப... பிளைட் இந்நேரம் வந்து சேர்ந்திருக்கும். ஏர்போர்ட்லேயிருந்து வீட்டுக்கு வர முக்கால்மணி நேரமாவது ஆகுமில்லையா... இரண்டு வருஷம் பொறுத்தவளுக்கு பத்து நிமிடம் பொறுக்க முடியாதா..." என்றபடி ஐம்புலிங்கம் பதினான்காவது முறையாக கார் வருகிறதா என்று ஆவலாக எட்டிப் பார்த்துவிட்டு பிறகு யோசனையுடன் சோபாவில் மனைவியின் பக்கத்தில் அமர்ந்தார்.

"பிரியா எவ்வளவு நேரம் வாசலிலேயே நிற்பே... கால் வலிக்கப் போவுது... உள்ளே வந்து உட்காரு" என்று ஒரு கால் மாற்றி ஒரு கால் போட்டு நின்றுகொண்டிருந்த மகளை அருகில் அழைத்தார், லெட்சுமி.

மகன் இரண்டு வருடம் கழித்து வருகிறானே என்ற சந்தோஷத்தில் அவனுக்குப் பிரியமான அச்சு முறுக்கை செய்து வைக்க ஆசைப்பட்டு, பரணில் இருந்த அச்சுக் குழலை எடுக்க ஸ்டூலில் ஏற முயற்சித்ததில் தவறி தரையில் விழுந்து கால் சுளுக்கி கட்டோடு அமர்ந்திருந்தார், லெட்சுமி.

"இங்க உட்கார்ந்து எப்ப வருவான் எப்ப வருவான்னு பார்த்துகிட்டு இருக்கறதுக்கு ஏர்போர்ட் போயிருக்கலாமில்லப்பா..." என்று வாசலில் நின்றபடியே குரல் கொடுத்தாள், பிரியா.

"உங்கம்மா காலை உடைச்சுக்காம இருந்திருந்தா போயிருக்கலாம். இவன்தான் நேரம் காலம் தெரியாமல் காலை உடைச்சு வைச்சிருக்காளே..."

"என் கவலையே வேற... இவன் எவளையாவது ஒரு வெளி நாட்டுக்காரியை கூட கூட்டிட்டு வந்தா நான் என்ன செய்வேன்.



நினைச்சா பக்குபக்குன்னு இருக்கு" என்று லெட்சுமி தன் கவலையை வெளியிடவும் வீதியில் கார் வரும் சத்தம் கேட்டது.

"ஹய்யா... அண்ணன் வந்தாச்சு..." என்று முகம் சந்தோஷத்தில் விரிய கத்தியவள், காரில் இருந்து அண்ணனுடன் இன்னொருவன் இறங்குவதை கண்டவுடன், அம்மாவை நோக்கி குறும்பாக–

"அம்மா... அண்ணன் கூடவே யாரையோ வெள்ளைக்காரியை கூட்டிட்டு வந்திருக்கான்" என்று சொல்லிவிட்டு வாசலை தாண்டி ஓடினாள்.



**த**ஞ்சை மாவட்டம் மேலைக்கடம்பூரில் உள்ள கோவிலில் இருக்கும் பிள்ளையார் சற்றே சாய்ந்த நிலையில் அமர்ந்திருப்பார்.

"ஐயய்யோ... நான் நினைச்சது நடந்துபோச்சே... இனிமே நான் என்ன செய்வேன். வெள்ளைக்காரியை நான் எப்படி என் மருமகளாக ஏத்துக்கறது. தாமுவுக்கு ஏன் இப்படி அறிவு போச்சு. இதை நான் எங்கபோய் சொல்வேன். இனிமே நான் இந்த வீட்டிலே இருக்கமாட்டேன். வரட்டும், அவள் முழியை தோண்டி கையிலே திணிக்கிறேன்" என்றாள்.

"சின்னகுட்டி..." என்ற வார்த்தை நொடியில் உதட்டில் இருந்து வெடிக்க, வேகமாக இரண்டு எட்டு எடுத்து வைத்து, கண்கள் விரிய, மூக்கு சிவக்க ஓடிவந்த தங்கையின் நெற்றியில் ஆசையுடன் முத்தமிட்டான், தாமோதரன்.

தங்கையின் பின்னாலேயே அப்பாவைக் கண்டதும், "அப்பா..." என்றபடி கண்கள் கலங்க, வேகமாக சென்று கட்டிப் பிடித்துக் கொண்டான்.

நீண்டநாட்கள் கழித்து தரிசித்த அப்பாவை விட மனமில்லை அவனுக்கு.

இரண்டு வருடங்களாக மகனைப் பிரிந்திருந்த ஏக்கத்தில் இருந்தவருக்கு, இப்போது கண்முன் கண்டதும் எதற்கென்றே புரியாமல் கண்களில் நீர் துளிர்த்தது. தன்னை அடக்கும் முயற்சியாக, அவனுடைய தோளைத் தட்டிக் கொடுத்து "நல்லாயிருக்கியாப்பா..." என்று கேட்டபடி விலகினார்.

அதற்குள் தாமோதரனின் தோளில் தொங்கிய பிரியா, உணர்ச்சி மயமான சூழ்நிலையை மாற்றுவதற்காக–

"உள்ளே வாண்ணா... உன்கிட்டே நிறைய பேசணும்... வா வா" என்று கையை பிடித்து இழுக்கத் தொடங்கினாள்.

"சின்னகுட்டி... கொஞ்சம் இளைச்சாப்பல தெரியறியே ஒழுங்கா சாப்பிடறதில்லையா" என்று அவள் நடைக்கு ஈடுகொடுத்தபடி பேசினான் தாமோதரன்.

"ஹய்... நான் குண்டடிச்சிருக்கேன். நீங்கதான் இளைச்சி போயிருக்கீங்க..."

"பழிக்கு பழியா" என்று சிரித்தவன், "அம்மா எங்கே வாசல்லே கூட காணோம்... என்னைப் பார்க்க ஓடிவந்திருப்பாங்களே... என்ன விசயம்?" என்று நெற்றி சுருங்க கேள்வி கேட்டான்.

"கால்லே லேசா சுளுக்கு. அதனால் உட்கார்ந்திருக்காங்க" என்று அவனை கலவரப்படுத்த நினைக்காமல் சுருக்கிச் சொன்னாள், பிரியா.

"என்னது சுளுக்கா? அம்மாவுக்கா?" என்று கேட்டபடி வாசலில் இருந்த இரண்டு படியையும் ஒரே தாவலாக தாவி, "அம்மா... அம்மா..." என்று கூவியபடி வந்து நின்றான் அவன்.

அதுவரை உலகத்தில் உள்ள எல்லா வசைகளையும் வெள்ளைக்காரியின் மேல் பொழிந்தபடி அமர்ந்திருந்த லெட்சுமி, மகனை கண்டதும் வெள்ளைக்காரியை மறந்தார்.

ஆர்வத் துடிப்புடன் மகனைத் தழுவ எழும்ப முயற்சித்து முடியாமல் மீண்டும் சோபாவில் அமர, இதனைக் கண்ட தாமோதரன் ஓடிச் சென்று அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்தான்.

பிறகு முத்தங்கள் மாறி மாறி பொழியப்பட்டது. அம்மா என்று மகனும், மகனே என்று தாயும் உருகிப் போனார்கள்.

ஜம்புலிங்கத்தின் கனைப்புக்குரல் கேட்டதும் உலகிற்கு வந்த லெட்சுமிக்கு வெள்ளைக்காரியின் நினைவும் வந்தது.

கண்கள் சிவந்து கலங்க, மகனைக் கோபத்தால் பார்ப்பதாக பாவனைச் செய்து, முடியாமல் குரல் கரகரக்க, "எங்கேடா அவள்..." என்று கேட்டார்.

வந்ததும் வராததுமாக அம்மா கேட்ட கேள்வியில் ஒன்றும் புரியாமல் இவன் முழிக்க, பிரியாவிற்கு சிரிப்பு பொத்துக்கொண்டு வந்தது.

"யாரும்மா... என்ன விசயம்... எவள்...?" என்று குழம்பிப்போய் இவன் கேட்க—

"அதான் அந்த வெள்ளைக்காரி, உன் பொண்டாட்டி, நீ இப்ப கூட்டிக்கிட்டு வந்திருக்கியே அந்த பெண்ணை..." என்று லெட்சுமி விளக்கிச் சொல்ல—

அம்மா சொன்னவற்றை கேட்டதில் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டவன், அம்மாவின் காரணமற்ற பயத்தை போக்குவதற்காக,

"அம்மா... நீங்க எனக்கு எப்ப கல்யாணம் செய்து வைச்சீங்க... பொண்டாட்டியை கூட்டிட்டு வரதுக்கு... எனக்கு கல்யாணம் நடந்தா அது நீங்க சொல்ற பொண்ணாதான் இருக்கும். வீண்



கவலையை விடுங்க..." என்று தைரியம் சொன்னான்.

சட்டென்று முகத்தை தூக்கி வைத்துக்கொண்டார் லெட்சுமி.

"பொய் சொன்ன வாய்க்கு போஜனம் கிடைக்காது."

"அம்மா நான் எதுக்கு உங்க கிட்டே பொய் சொல்றேன்..." என்று பதட்டத்தில் அம்மா தன்னை தவறாக எண்ணுகிறார்களோ என்ற கவலையில் வினவினான், தாமோதரன்.

"உன்னை சொல்லலை தாமு... இந்த பிரியா வர வர ரொம்ப வால்தனம் பண்றா... அவள்தான் நீ வெள்ளைக்காரியோட கார்லே இருந்து இறங்குறதா சொன்னாள்" என்று மகனின் கையை தூக்கி தன் கன்னத்தில் வைத்தபடி பேசினாள், லெட்சுமி.

"வந்ததும் அம்மாகிட்டே நான் திட்டு வாங்கவில்லைன்னா தூக்கம் வராதே உனக்கு" என்றபடி, தனக்கு பக்கத்தில் சோபா கைபிடி மீது உட்கார்ந்துகொண்டிருந்த பிரியாவை அடிக்க கை ஓங்க, அவள் நொடியில் ஜம்புலிங்கத்தின் பின்புறம் போய் நின்று பல்லைக் காட்டினாள்.

அதுவரை நடந்த கூத்தை, அமைதியுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த புதியவன், "இதில் யார் மீதும் தவறு இல்லை தாமு... என்னைப் பார்த்தால் ஒரு பெண் பிள்ளையைப் போல் இருந்திருக்கிறது உன் தங்கைக்கு" என்று கம்பீரக் குரலில் சிறிது கேலி இழையோட பேசினான்.

அதுவரை தன் அண்ணனிடம் மட்டுமே, முழு கவனத்தையும் செலுத்திய பிரியா, புதியவன் குரல் கேட்கவும் திரும்பி அவனை முழுமையாகப் பார்த்தாள்.

அவனுடைய தோற்றத்தில் அசந்துபோய் இமை மூட மறந்து நின்றாள்.

ஆனாலும் அவன் பேசிய பேச்சின் பொருள் புரிய லேசாக தடுமாறினாள் பிரியா.

அம்மாவிடம் விளையாட்டாக ஏதோ சொல்லப்போக, இவள் தன்னை வேண்டுமென்றே கேலி செய்கிறாள் எனறு தவறாக நினைத்துவிட்டானோ? மன்னிப்புக் கேட்க வேண்டுமோ? இது என்ன தர்மசங்கடமான நிலை. அறிமுகமே சரியில்லையே? இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ? என்று சின்ன விசயத்தை பெரிய விசயமாக்கி மனசுக்குள் போட்டுக் குழம்பினாள், பிரியா.

"அம்மா வசதியா சாயறதுக்கு இன்னொரு தலையணை கொண்டுவா பிரியா" என்று அப்பாவின் குரல் உலுப்ப, மெல்ல ஹாலில் இருந்து

முந்திரிக்கொட்டையின் ஓடுகளை காரம் உள்ள சாராயத்தில் ஊறவைத்தால் ஒட்டிலிருந்து எண்ணெய் சுரக்கும். இந்த எண்ணெயைத் தடவினால் பாதத்தில் ஏற்படும் வெடிப்புகளும், புண்ணும் குணமாகும்.

நகர்ந்து படுக்கை அறைக்குள் நுழைந்தாள்.

பிரியா தலையணையுடன் ஹாலுக்குள் நுழைவதற்குள், அவனுடைய அறிமுகபடலம் முடிந்துவிட்டிருந்தது.

விக்னேஷ்வரன் தாமுவுடன் அமெரிக்காவில் இரண்டு வருடம் படித்தவனாம். சென்னையில் இருந்து இன்னொரு விமானம் பிடித்து மதுரைக்கு தன் வீட்டிற்கு போகவேண்டி இருந்ததால், தாமு அவனை வலுக்கட்டாயமாக ஒரு வாரம் எங்கள் வீட்டில் தங்கிவிட்டுத்தான் போகவேண்டும் என்று அழைத்து வந்திருக்கிறானாம்.

ஜம்புலிங்கத்திற்கு விக்னேஷ்வரனைப் பார்த்தவுடன் மிகவும் பிடித்துவிட்டது.

எப்பேர்பட்டவரையும் அடிபணிய வைக்கும் ஒரு கம்பீரம் விக்னேஷ்வரிடம் இருந்தது.

பிரியா வந்தவுடன் அவளையும் அவனுக்கு அறிமுகப்படுத்தினான், தாமோதரன்.

"சின்னகுட்டி... மீட் மை பெஸ்ட் பிரண்ட் விக்கி... விக்னேஷ்வரன்..."

"அலோ..." என்று மிக வசீகரமாக புன்னகைத்தான் அவன். அவள் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை என்று புரிந்து நிம்மதியடைந்தாள் பிரியா.

"நீ சின்னகுட்டி... சின்னகுட்டி... என்று தங்கை புராணம் பேசுவதைக் கேட்டு, குட்டிப்பெண்ணா இருப்பாள்ன்னு நினைச்சேன். ரியலி ஐ ஆனால் உண்மையிலேயே ஒரு தேவதையா இருப்பாள்னு நான் நினைக்கவில்லை" என்று வெளிப்படையாக விக்னேஷ்வரன் பேச குப்பென்று பிரியாவிற்கு சிவந்தது முகம்.

நல்லவேளையாக லெட்சுமி குறுக்கிட்டு பேசவும், பிரியா தன்னை நிலைப்படுத்திக்கொண்டாள்.

"எப்பவும் இவன் இப்படித்தான் சின்னகுட்டி... சின்னகுட்டின்னு ரொம்பத்தான் கொஞ்சிட்டு இருப்பான். இவளும் என் செல்லண்ணா அப்படின்னு கழுத்தை கட்டிட்டு திரிவா... சண்டைன்னு ஒன்று வரும்பாரு... அப்ப இவங்க அடிச்சுக்கறத பார்க்கணுமே... சின்ன பிடாரின்னு இவன் திட்ட, எருமைமாடு, பன்னி அப்படின்னு இவள் பதிலுக்கு கத்த சகிக்காது... விக்கி தம்பி..."

"சின்னகுட்டி... உன்னை நான் பிடாரின்னு சொல்லியிருக்கேனா?" என்று நம்பமுடியாதவன் போல் கேட்ட தாமோதரன், "அப்படின்னா என்னன்னு கூட எனக்குத் தெரியாதே" என்று கைகளை விரித்தான்.

"எருமைமாடு, பன்னின்னா என்னதும்மா... சாப்பிடற ஸ்வீட்டா..." என்று அறியாதவள் போல் அம்மாவிடம் கேட்ட பிரியாவும், தாமுவும் ஒரே சமயத்தில் 'பக்' என்று சிரித்தார்கள். இருவரும் சண்டை போட்டுக்கொண்டால் இதைவிட மோசமாய் திட்டிக்கொள்வார்கள்.

ஆனால் எல்லாம் சின்ன சின்ன விஷயத்திற்காக வளரும் சின்ன சண்டைகள்தான். வளரும் வேகத்திலேயே பொசுக்கென்று வடிந்து சமரசமாகிவிடுவார்கள்.





**உ**லக அழகி ஐஸ்வர்யா ராய் நடிப்பைவிட கண்தானம் பற்றிய பிரசாரத்தில் அதிக ஈடுபாட்டுடன் செயல்பட்டு வருகிறார். ஏற்கனவே ஐஸ்வர்யா தன் கண்களை தானமாக கொடுக்க சம்மதித்திருக்கிறார். இப்பொழுது ஐஸ்வர்யாவே கண்தானம் செய்யும்பொழுது நாம் ஏன் கண்தானம் செய்யக்கூடாது என்று நிறைய பேர் கண்தானம் செய்ய சம்மதிக்கிறார்கள்.

**கொசுறு:** ஐஸ்வர்யா ராய் விரைவில் சென்னையில் குழந்தைகள் காப்பகம் ஒன்றைத் தொடங்க இருக்கிறார். அதற்கான தீவிர முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

---

அண்ணன் என்றாலே உயிரையே கொடுத்துவிடும் அளவுக்கு தாமுவின் மேல் பாசம் வைத்திருந்தாள் பிரியா. தாமுவும் அப்படியே.

பேச்சு இப்படி அப்படி என்று வளர்ந்து கடைசியில் தாமோதரன் அமெரிக்காவைப் பற்றி, தன்னுடைய அனுபவங்களை பற்றி சுவாரசியமாக சொல்லிக்கொண்டு போனான்.

விக்னேஷ்வரின் பார்வை அடிக்கடி தன்மேல் படறுவதை நன்றாகவே உணர்ந்தாள், பிரியா. அண்ணன் பேசியதில் பாதி அவள் காதில் விழவேயில்லை.

## 2

**ம**தியானம் சாப்பாட்டிற்கு பிறகு ஜம்புலிங்கம் அலுவலகத்திற்கு கிளம்பிவிட்டார்.

லெட்சுமி களைப்பாக இருக்கிறது என்று தன்னுடைய அறையில் படுத்துவிட்டார்.

> உலகத்தில் உள்ள பெரும்பாலான பெண்கள் கருக்கலைப்பை அதிகம் நாடுகின்றனர். நான்கு பெண்கள் கருவுற்றால் அதில் ஒரு பெண் கருக் கலைப்பை நாடுகின்றாள் என்று ஒரு கருத்துக்கணிப்பு கூறுகிறது.

"என்னண்ணா வீட்டிலே இருந்தா கும்பகர்ண தூக்கம் போடுவீயே... அதையெல்லாம் விட்டாச்சா..." என்று பிரியா சிரித்தவண்ணம் கேட்க,

"தொட்டில் பழக்கம் அவ்வளவு சீக்கிரம் விட்டுடுமா என்ன? சின்ன தூக்கம் போடப்போறேன்... சரியா அஞ்சு மணிக்கு வந்து எழுப்பிடும்மா" என்றாள்.

"உங்க பிரண்ட் உங்கள மாதிரி தானா? அவரை எங்கே? உங்களுக்கு முன்னாலேயே தூங்கியாச்சா?" என்று விக்னேஷ் பற்றி அறியும் ஆசையில் பிரியா கேட்டாள்.

"ஊகூம்... அவன் நான் மத்தியான தூக்கம் போட்டாலே திட்டிட்டு இருப்பான். ரூம்லே புத்தகம் வாசித்துக்கிட்டு இருக்கான். நீ இப்ப என்ன பண்ணப்போறே சின்னகுட்டி..."

"கொஞ்சம் சமையல் வேலையிருக்கு அண்ணா... அதை முடிச்சிட்டு வாஷிங்மெஷின்லே துணி போடணும்..."

"அம்மாவுக்கு கால்லே கட்டு போட்டவுடன் உனக்குத்தான் நிறைய வேலையாயிடுச்சு... இரு இன்னைக்கு என்னை ஒரு 4 மணி போல எழுப்பி விட்டுடு... நான் வந்து உனக்கு துணி துவைச்சுத் தரேன்..." என்றபடியே அவன் நகர்ந்து தன்னுடைய அறைக்குள் அடியெடுத்து வைத்தான்.

பிரியா சமையல் அறைக்குள் போய் வேலை செய்யத் தொடங்கிய அரை மணி நேரத்திற்குள் விக்னேஷ்வரன் அவள் முன்னே வந்து நின்றான்.

"இங்கே வேஸ்ட் பாக்ஸ் எங்கே இருக்கு?" என்று கையில் இரண்டு வாழைப்பழத் தோலையும், காலி கோக் கேனையும் வைத்துக்கொண்டு கேட்டான்.

திடீர் என்று அவன் குரல் கேட்கவும், திடுக்குற்று வெட்டிக் கொண்டிருந்த வெங்காயத்தை அப்படியே போட்டுவிட்டு திரும்பினாள் பிரியா.

அவனைப் பார்க்கையில் அவன் குரல் கேட்கையில் அவளையும் அறியாமல் நெஞ்சு பூரிப்படைந்தது. ஆனால் தன்னை நிதானித்துக் கொண்டு, "நான் போட்டுடறேன் என்கிட்ட கொடுங்க" என்று அவன் கையில் இருந்த வேஸ்ட்டைப் பார்த்து கையை நீட்டினாள், பிரியா.

"நோ நோ... நீங்க சொல்லுங்க எங்கே போடணும்னு நான் போட்டுடறேன், என்றபடி அவன் கையை நகட்டினான்.

ஒரு கணம் அவனை இமைக்காமல் பார்த்த பிரியா பிறகு, பின்கட்டில்




# தினத்தந்தி

DAILY THANTHI

வழங்கும்

## மணப்பந்தல்

ஒவ்வொரு புதன் அன்றும் வெளிவருகிறது.

நீங்கள் விரும்பும் மணமகன் / மணமகள் தேர்ந்தெடுக்க படித்து பயன் அடையுங்கள்.

**விளம்பரம் செய்ய பாதி விளம்பர கட்டணம்தான்.**

**50% சலுகை**

விளம்பரங்களைப் பதிவு செய்ய அணுகவும்: தினத்தந்தி 46, ஈ.வி.கே. சம்பத் சாலை, சென்னை-600 007. போன்: 5387731. [illegible] (Inner Ring Road) [illegible] சென்னை—600 040. Ph: 6264726. 159/1-C, [illegible] N.V.N. நகர், [illegible] சென்னை—600 041. 4, [illegible] சென்னை—600 045. [illegible]: 4861425, 4985525. [illegible] 5324612, 6422852, [illegible] 5220928, 4338746, 4333987, [illegible] 4839018, 4801687, [illegible] 4895591, 4895583, [illegible] 2384527, [illegible] 5960812, 543583, [illegible] 6380508, 6283355, [illegible] 5510192, 5511832, [illegible] 5941608, 5941513, 6419588. [illegible] 8228687, 8220708, [illegible] 4330771, 4338776, [illegible] 4414252, 4906687. 6282646, [illegible] 8265837, 8225092, [illegible] 4827742, 4828458, 4828713, 4827032. [illegible] 6448700. [illegible] 2451770.

இருந்த நீல நிற குப்பைக் கூடை

நடந்து சென்று குப்பையை போட்டுவிட்டவன் உடனே திரும்பி தன்னுடைய அறைக்குச் செல்லவில்லை.

“காலையில் இருந்து கிச்சனிலேயே இருக்கீங்களே... கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கலாமில்லையா? திரும்பவும் என்ன பண்ணிக்கிட்டு இருக்கீங்க” என்று பிரியாவைப் பார்த்து கேட்கவும் செய்தான்.

“எனக்கு இந்த மரியாதையெல்லாம் வேண்டாம். உங்களைவிட சின்ன பெண்தானே... சும்மா நீ என்றே சொல்லுங்க” என்றவள் தொடர்ந்து, “வெஜிடபிள் ரோல் பண்ணப்போறேன். அண்ணனுக்கு ரொம்ப பிடிக்கும். நீங்களும் சாப்பிடுவீங்கதானே” என்று மீண்டும் வெங்காயத்தை வெட்ட கத்தியை எடுத்துக்கொண்டே பேசினாள்.

“தாமு நல்லா தூங்கறான். போர் அடிச்சிடுச்சு... நானும் உனக்கு ஹெல்ப் பண்ணட்டுமா” என்று சுலபமாக ஒருமைக்கு தாவிய விக்னேஷ்வரன், அவளிடம் அனுமதியை எதிர்பாராமல் மெல்ல அவள் கைபிடித்து கத்தியை எடுத்துக்கொண்டு அலட்டாமல் வெங்காயத்தை வெட்டினான்.

அவ்வளவுதான் பிரியாவிற்கு கன்னம் சிவந்துபோயிற்று. அவனுடைய திடீர் ஸ்பரிசத்தால் அலைப்புற்ற மனசை நிலைப்படுத்த சரியாக ஒரு நிமிடமானது பிரியாவிற்கு.

“ஐயோ... நீங்க எங்க கெஸ்ட்... இந்த வேலையெல்லாம் செய்யக் கூடாது. பிளீஸ்... கத்தியைக் கொடுங்க” என்று கெஞ்சிப் பார்த்தாள்.

ஆனால் அவனோ புன்னகை மாறாமல் தன்னுடைய வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்தான்.

இவன் ஒரு காரியம் பற்றி நினைத்துவிட்டால் அதை முடிக்கும் வரை ஓயமாட்டான் என்று முதன்முதலில் பிரியா அவனின் குணாதிசயங்களில் ஒன்றைத் தெரிந்துகொண்டாள்.

வெங்காயம் வெட்ட வெட்ட அவனைப் பற்றி ஒவ்வொரு விவரங்களாய் சொல்லிக்கொண்டிருந்தான்.

தான் ஒரே பிள்ளையாய் செல்லமாய் வளர்ந்ததைப் பற்றி, தன் தந்தை இறந்த திடீர் அதிர்ச்சியை பற்றி, தன் தந்தை விட்டுவிட்டு சென்ற தொழிற்சாலையை மீண்டும் தான் தொடங்கியதைப் பற்றி இரண்டு வருடங்கள் தன்னுடைய பெரியப்பாவின் வசத்தில் தொழிலை விட்டுவிட்டு தொழிலை பெரிதாக்க எண்ணி வெளிநாட்டில் போய் கற்றுவந்ததைப் பற்றி தன்னுடைய அலுவலகத்தை சென்னைக்கு மாற்றி தன் முழு கவனத்தையும் இனி அதில் செலுத்தப்போவது பற்றி என்று அவனைப் பற்றி ஒவ்வொன்றாய் சொல்லிக்கொண்டு போனான்.

பிரியாவின் காதுகள் கூர்மையாக அவன் பேசுவதையே கேட்டாலும் கை வேகத்தில் வெஜிட்டபிள் ரோல் செய்வதற்கு ஏற்ற வேலைகளை செய்துகொண்டுதான் இருந்தது.





வெங்காயம் வெட்டி முடித்தவுடன், ஒரு குஷன் மோடாவை டைனிங் ஹாலில் இருந்து நகட்டி அதில் அமர்ந்து அவளிடம் பேச்சு கொடுத்துக் கொண்டிருந்தான் விக்னேஷ்வரன்.

> **ச**மையல் செய்யும்போது சூடுபட்டுவிட்டால், உடனடியாகத் தேனை எடுத்துத் தடவிவிட்டால் குணம் உடனே தெரியும்.

அவளும் வெங்காயத்தை வதக்கி, வேகவைத்த காய்கறிகளையும் மசாலாவையும் அதில் கலந்து மேலும் நன்கு வேகவைத்து இறக்கினாள்.

வட்டமாக பரப்பி வைத்திருந்த மைதா மாவை மெல்லிய பட்டைகளாக வெட்டி, சுருளாக்கி, அதனுள் காய்கறி கலவையை அடுக்கி, மின்சார ஓவனில் ஒவ்வொன்றாக எடுத்து வைத்தாள்.

ஏனோ, அன்று அவள் மிகுந்த சந்தோஷத்தில் இருந்தாள்.

காலம் பூரா அவன் பேச பேச இவள் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் போல் இருந்தது.

சரியாக நான்கு மணிக்கு அலாரம் அடித்ததுப் போல் எழுந்த தாமோதரன் குரல் கொடுத்தபடி நேராக சமையல் அறைக்குள் வந்தான்.

“சின்னகுட்டி, துணி எல்லாத்தையும் எடுத்து போடு. நான் வாஷிங் மெஷின்லே போடறேன்” என்றவன் அங்கு மோடாவில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தவனை கண்டவுடன் “அட” என்று அதிசயித்தான்.

பிரியா வெஜிடபிள் ரோல் தயாராகிக்கொண்டிருக்கிறது என்று தாமோதரனிடம் சொல்லவும்,

“எவ்வளவு காலமாச்சு... ருசியா வெஜிடபிள் ரோல் சாப்பிட்டு” என்று சப்பை கொட்டிக்கொண்டு சமையல் அறை மேடையில் ஏறி உட்கார்ந்தான்.

மேடையில் கையை ஊன்றிக்கொண்டே விக்னேஷ்வரனைப் பார்த்து, “என்ன விக்கி, உனக்கு எங்க வீடு பிடிச்சிருக்கா?” என்று கேட்க,

விக்னேஷ்வரன் பிரியாவை அர்த்தத்துடன் ஒரு பார்வை பார்த்து “ரொம்ப பிடிச்சிருக்கு” என்றான்.

அவன் பார்த்த பார்வையும், பேசிய பாவனையும் பிரியாவிற்கு ஆயிரம் கதைகள் சொன்னது.

மனசில் மில்லியன் கணக்கில் கற்பனை கோட்டைகள் நொடியில் உருப்பெற்று பெரிதாக எழும்பி நின்றன.

தன்னுடைய முகச்சிவப்பை மறைப்பதற்காக திரும்பி ஓவனின் கதவை திறந்து, வெஜிடபிள் ரோல் வெந்திருக்கிறதா என்று கவனித்தாள்.

தாமோதரன் இந்த பாவனை, செய்கைகளை கவனித்ததாக தெரியவில்லை.

அதற்குள் வெஜிடபிள் ரோல் தயாராக வெந்துவிட பிடி கொண்டு ஒவ்வொன்றாக 'ஓவனில்' இருந்து எடுத்தாள்.

தொட்டுக்கொண்டு சாப்பிட சாஸ்ஸும் புதினா துவையலையும் ரோல்



கருவுற்ற பெண்களுக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது மாதத்தில் குமட்டல், வாந்தி ஏற்படும். இதை மசக்கை என்கிறோம். எனவே மசக்கையான பெண்கள் உணவை ஒரே நேரத்தில் அதிகமாக சாப்பிடுவதைவிட குறைத்து, பிரித்து சாப்பிட்டால் வாந்தி குமட்டல் குறையும். குறிப்பாக எண்ணெய் பொருட்களை குறைக்க வேண்டும்.

மீது ஊற்றி சின்ன தட்டில் எடுத்துவைத்து இருவரிடமும் கொடுத்தாள்.

"சின்ன குட்டி, இனிமே என்ன பண்ணப்போறதா உத்தேசம். பி.எஸ்சி. முடிச்சாச்சு. எதுக்கு அப்ளை பண்ணி இருக்கே" என்று தாமோதரன் வெஜிடபிள் ரோலை சுவைத்துக் கொண்டே கேட்க,

"எம்.பி.ஏ.க்கு அப்ளை பண்ணியிருக்கேன். அதுதான் படிக்கணும்னு ஆசை. அது முடிச்சுட்டு வேலைக்குப் போகணும். சும்மா வேலைக்கு போனோம் பணம் சம்பாதிச்சோம்னு இருக்கறது எனக்கு பிடிக்கலைண்ணா. சேலஞ்ஜிங் ஜாப் பண்ணணும்..."

"வாவ் ... இந்தக்காலத்து கேர்ள்ஸ் எல்லாம் செம வேகம்தான். இப்படிதான், தங்களோட வாழ்க்கை பற்றி முதல்லேயே யோசிச்சு தீர்மானம் பண்ணிடணும் சின்ன குட்டி! ஐ லைக் திஸ்" என்று பரிகாசக் குரலில் "சின்ன குட்டி" என்று அழுத்தம் கொடுத்து விக்னேஷ்வர் பேச,

பிரியாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "உங்களுக்கு நான் ஒன்றும் சின்னகுட்டி இல்லை கால் மீ பிரியா" என்று பட்டென்று சொன்னாள். ஆனால் முகமோ தக்காளி போல் சிவந்துபோயிற்று.

"டேய் கல்யாண மாப்பிள்ளை... உனக்கு என்ன தலைவிதி? வேணும்னே ஏண்டா போய் அவள்கிட்டே வாய் கொடுக்கறே" என்று தாமு இன்னமும் புன்னகை மாறாமல் பிரியாவையே பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷ்வரனைப் பார்த்துக் கேட்டான்.

நெஞ்சில் சுரீர் என்று வலித்தது பிரியாவிற்கு.

மெல்ல மெல்ல தன் வசத்தை அவனிடம் இழுத்துக்கொண்டிருந்த



# உங்கள் கணவர்...!

பெண்களே! உங்கள் நட்சத்திரப்படி உங்களுக்கு வரப்போகும் கணவர் எப்படிப்பட்டவராக இருப்பார்... கருப்பா சிவப்பா? தொழிலா உத்யோகமா? அரசாங்க வேலையா, சாதாரண வேலையா? கலகலப்பானவரா சிடுமூஞ்சியா? சிக்கனக்காரரா செலவாளியா? கட்டுமஸ்தானா ஓமக்குச்சியா? அழகானவரா? சுமாரானவரா? வளர்த்தியானவரா குள்ளமானவரா? இவைகளில் எப்படிப்பட்டவர் உங்களை கைப்பிடிக்கப் போகிறார் என்பதை நாங்கள் முன்கூட்டியே சொல்லிவிடுகிறோம். நீங்கள் மனதில் நினைத்திருப்பவருக்கும் இதற்கும் ஒத்துப்போகிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.



ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு நட்சத்திர ராசிக்காரருக்கான பலன்களை வெளியிடுகிறோம். இந்த இதழில்......

## 26. உத்திரட்டாதி

தனக்கு வரப்போகிற கணவர் இப்படித்தான் இருப்பார் என தனக்குள்ளே கோட்டை கட்டிவைத்திருக்கும் பெண்களுக்கு மத்தியில் இந்த ராசிக்காரர்கள் வித்தியாசமானவர்கள். வரப்போகிறவரைப் பற்றி துளிகூட கற்பனை செய்யாமல் இருப்பார்கள். யார் தலையில் என்ன எழுதியிருக்கிறதோ அதன்படிதான் நடக்கும் என்ற வைராக்கியத்தோடு இருப்பார்கள். ஆனால் உங்களுக்கு உங்க நட்சத்திரப்படி பார்த்தால் கண்நிறைஞ்ச கணவர்தான் கிடைப்பார். நீங்களே ஆச்சரியப்பட்டு போய்டுவீங்க. ஆள் சும்மா கமல் மாதிரி அட்டகாசமாகத்தான் இருப்பார். சொந்தத் தொழில் என்றாலும் கைநிறைய சம்பாதிப்பார். உங்களுடைய கைகளிலும் நாலு காசு புரளும். உங்களுக்கு தேவையானதை குறிப்பறிந்து வாங்கித் தந்து குதூகலிக்க வைத்துவிடுவார். மொத்தத்துல உங்க வாழ்க்கை ரொம்ப ரம்மியமாகவே இருக்கும். வசதி வாய்ப்புகள் நாளுக்குநாள் பெருகுமே தவிர குறையாது. நீங்களும் கணவர் மீது உயிரையே வைத்து இருப்பீங்க. உங்களுடைய ஒற்றுமையைப் பார்த்து மற்றவங்க பொறாமைப்படுவாங்க.. அதனால் தினமும் திருஷ்டி சுற்றிப்போட்டால் நல்லது. குழந்தைச் செல்வம் ஓகோவென்று இருக்கும்.

பிரியா "கல்யாண மாப்பிள்ளை" என்ற ஒரு சொல்லில் கலங்கிப் போனாள்.

இவ்வளவு நேரம் அவனைப் பற்றிய விவரம் அத்தனையும் சொன்னவன் கல்யாண விசயத்தைப் பற்றி மூச்சுவிடாதது மனசை கலக்கியது.

"கல்யாண மாப்பிள்ளையா?" என்று புரியாத தொனியில் அவள் வேதனையை அடக்கிக்கொண்டு அண்ணனை கேட்க, பதில் சொல்ல முந்திக்கொண்டான் விக்னேஷ்வரன்.

"நான் படிப்பு முடிச்சுட்டு வந்தவுடன் கல்யாணம் அப்படின்னு அம்மா லெட்டர் போட்டு இருந்தார்கள். அதை இவனிடம் சொல்லி விட்டேன். அதிலிருந்து இப்படித்தான் சொல்லிகிட்டு இருக்கான்" என்று விக்னேஷ்வரன் அவளையே குறுகுறு என்று பார்த்துக்கொண்டு சொல்ல,

அதுவரை இழுத்து பிடித்து வைத்திருந்த மூச்சை அப்பாடி என்பது போல் சின்ன சத்தத்துடன் பிரியா வெளியிட,

அதன் காரணத்தை உணர்ந்த விக்னேஷ், அவளைப் பார்த்து அழகாக அரிசி பல் வரிசை தெரிய சிரித்தான்.

அந்த கணத்தில் பிரியா தன் உள்ளத்தை அவனிடம் பறிகொடுத்தாள்.

## 3

அதன்பிறகு வந்த ஐந்து நாட்களும் பிரியாவிற்கு சொர்க்கத்தில் சஞ்சரிப்பது போல இருந்தது.

கை விரலில் இரகசியமாக அணிந்திருந்த சின்ன மோதிரத்தை ஆசையுடன் வருடினாள்.

அவளுக்கு பிரியமான விக்னேஷ்வரன் அணிவித்த மோதிரம் அல்லவா அது. ஆசையிராதா என்ன?

அவன் மோதிரத்தை கொடுத்த அந்த நாள் பிரியாவின் வாழ்வில் மறக்கமுடியாத சுபநாள்.

அன்று விக்னேஷ்வரனின் நினைவுகளை அசைப்போட்டுக்கொண்டு தன்னுடைய அறையில் அலமாரியை குடைந்துகொண்டிருந்தவள் முன், முகத்தை தீவிரமாக வைத்துக்கொண்டு திடீர் பிரவேசமாக வந்து நின்றான் விக்னேஷ்வரன்.

வழவழா குழகுழா என்று எதையும் பேசாமல் நேராக விஷயத்திற்கு வந்தான்.

"பிரியா! உனக்கு என்னை திருமணம் செய்துகொள்ள சம்மதமா?" என்று கம்பீரமான குரலில் சிறிதும் அச்சு பிரளாமல் திடீர் என்று கேட்கவும் பிரியா திகைத்துப் போனாள்.

> மனசாட்சிக்குப் பயந்து நட... உலகம் உன்னைக் கொண்டாடாமல் விடாது!
>
> —பாஹிஸ்டன்.

அவள் அமைதியுடன் பதில் கூறாமல் இருப்பதைக் கண்டு "பிரியா..." என்று இவன் அழுத்தம் கொடுத்து பரபரப்புற்று அழைக்க,

நாணி மெல்ல குனிந்த பிரியா, சம்மதம் என்கிறார்போல தலையை ஆட்டினாள்.

அவளுடைய நாணத்தை கண்டவனுக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. அப்பாடா என்று நிம்மதியாகவும் இருந்தது.

"அப்பா... அம்...மா கிட்...டேயும்..." என்று திக்கி பிரியா பேச,

"மதுரை போனவுடன் அம்மாவிடம் சொல்லி முறைப்படி அப்பா அம்மாவிடம் பேசச் சொல்கிறேன். பெரியவர்களே இதைப்பற்றி கலந்து பேசிக்கொள்ளட்டும்" என்றவன் அவள் கரத்தை பற்றி தன் கையிலிருந்த மோதிரத்தை அவள் விரல்களில் அணிவித்தான்.

அவன் ஸ்பரிசத்தில் நெஞ்சு படபடவென்று அடித்துக்கொண்டது.

விக்னேஷ்வரன் அவளுடைய கரத்தை, முகத்துக்கு நேராக உயர்த்தி விரல்களில் தன்னுடைய இதழ் பதிக்கவும், வெட்கத்தில் பிரியாவின் இளம் கன்னங்கள் குளிர்ந்தன.

இமைக்க மறந்துபோய் விக்னேஷ்வரன் அவளையே பார்த்தான்.

அதன்பின் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் பிரியா, பொன்னேடுகளில் பொறித்து வைக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகள் என்று பூரித்துப்போனாள்.

கனவு கதாநாயகனே வாழ்க்கை நாயகனாகிப் போனானே... யாருக்கு கிடைக்கும் இந்த பாக்கியம் என்று வானத்தில் சிறகடித்துப் பறந்தவளுக்கு மதுரையில் நல்ல அடி கிடைத்தது.

உயர உயர மகிழ்ச்சி வெள்ளத்தில் சிறகடித்து பறந்தவளின் சிறகு இரண்டும் இவ்வளவு உயரத்தில் பட்டென்று வெட்டுபட பொத்தென்று தரையில் விழுந்தாள், பிரியா.

மதுரைக்கு போகாமல் இருந்திருக்கலாமோ, இந்த அசிங்கமான உண்மை புலப்படாமல் போயிருக்குமே என்று ஆசை கொண்ட நெஞ்சம் சில சமயம் எண்ணிப் பார்ப்பதுண்டு.

வாழ்க்கையில் பட்ட முதல் அடியாயிற்றே அது. மறக்கக்கூடிய விஷயமா அது?

"பிரியாவும், தாமுவும் மதுரையை பார்த்ததே இல்லையாம். மூன்றே நாளில் என்னோட முழு ஊரையும் சுற்றிக் காட்டிவிட்டு கொண்டுவந்து விட்டுடறேன்" என்று லெட்சுமியிடமும், ஜம்புலிங்கத்திடமும் அனுமதி பெற்றான் விக்னேஷ்வரன்.

லெட்சுமியின் காலும் ஓரளவுக்கு குணமாகிவிட பிரியாவும்,

தாமுவும் விக்னேஷ்வரனுடன் சந்தோஷமாக மதுரைக்கு பயணமானார்கள்.

மதுரையில் விக்னேஷ்வரனின் வீடு மிகப் பெரியதாய் இருந்தது. பிரியாவிற்கு வீட்டை பழக்கப்படுத்திக்கொள்ள முழுசாய் ஒருநாள் ஆனது.

வீட்டின் அமைப்பு கொஞ்சம் பழங்காலத்து மாடலாக இருந்ததால் பிரியாவிற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. தனக்கு என்று கொடுத்திருந்த அறையைவிட்டு வெளியே வந்து ஒரு கூடத்தில் நின்று வேடிக்கை பார்த்துவிட்டு மீண்டும் தன்னுடைய அறைக்குள் போகவேண்டுமென்றால்கூட தவித்துப்போனாள்.

அவ்வளவு பெரிய வீடு, விக்னேஷ்வரின் பாட்டனார் பெரிய ஜமீன்தார் என்று அங்குள்ள வேலைக்காரன் பேச்சுவாக்கில் சொன்ன போதுதான் பிரியாவிற்கு விக்னேஷ்வரன் மிகப் பெரிய பணக்காரன் என்பதும் தெரியும்.

அது ஒரு கூட்டுக் குடும்பம். அதனால் வீடு நிறைய ஆட்கள் எப்போதும் இருந்தவண்ணம் இருந்தனர். விக்னேஷ்வரன் தந்தை விக்னேஷ்வரனின் பதினாறு வயதில் இயற்கை எய்தினார்.

அதன்பிறகு அவன் தாயார் எதிலும் பிடிப்பு அற்று, தெய்வம், கோயில் என்று கடவுள்மேல் பக்தி செலுத்தலானார். வருடத்தில், முக்கால்வாசி நாட்கள் யாத்திரை என்று கடவுள் ஷேத்திரங்களுக்கு கிளம்பிடுவார்.

விக்னேஷ்வரனின் பெரியப்பா குடும்பமும் இந்த பெரிய வீட்டில் தான் வசித்தது. அவருக்கு நான்கு பெண்கள், ஒரு மகன். நான்கு பெண்களுக்கும் கல்யாணம் முடித்து மாப்பிள்ளைகளை வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக்கொண்டார். அவர்களின் குழந்தைகள் நண்டும், சிண்டுமாய் அங்கும் இங்குமாய் ஓடிக்கொண்டு இருப்பதால் வீடு கல்யாண வீட்டைப்போல் எப்பொழுதும் கலகலவென்று இருந்தது. கடைசி மகன் கல்யாணத்திற்கு தயாராக இருந்தான். அவனுக்கும் விக்னேஷ்வரன் வயதுதான் இருக்கும்.

பிரியா எல்லோரிடமும் நன்றாக ஒட்டிக்காண்டாள். எல்லோரை யும் அவளுக்குப் பிடித்திருந்தது.

பின்னே விக்னேஷ்வரனின் குடும்பம் அவளின் குடும்பம் இல்லையா?

விக்னேஷ்வரன் பிரியாவையும் தாமோதரனையும் காரில் அழைத்துக்கொண்டு மதுரையை ஒரு இடம் பாக்கி இல்லாமல் சுற்றிக் காட்டினான்.

திருமலை நாயக்கர் மஹாலை பார்த்து அசந்துபோனாள் பிரியா.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலை பார்த்தவுடன் அங்கிருந்து நகரவே விருப்பமில்லை.

தமிழ்நாட்டின் அழகெல்லாம் அங்கேதான் பொதிந்திருப்பதைப் போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.

சில சமயங்களில் தாமோதரன் கால் வலிக்கிறது, நான் காரில் போய் உட்கார்ந்துக்கறேன். நீங்க ரெண்டு பேரும் சுற்றிப் பார்த்து விட்டு வாங்க என்று நகர்ந்து கொண்டான்.

அண்ணன் கண் பார்வையில் இருந்து மறைந்தவுடன் பிரியா வின் சங்கோஜம் பறந்துவிட்டது.

விக்னேஷ்வரின் கையோடு தன் கையைக் கோர்த்துக் கொண்டு சந்தோஷமாக எல்லா வற்றையும் ஆவலாகர் பார்த்தாள்.

வெகு இனிமையாக ஒரு வாரப் பொழுது ஒரு நிமிடமாக கழிந்துவிட்டது.

அன்று அண்ணனும், விக்னேஷ்வரனும் தங்கள் தோழனை பார்க்க என்று பொள்ளாச்சிக்கு சென்றபோது, அவளும் கூடவே சென்றிருந்தால் இவ்வளவு துன்பம் ஏற்பட்டு இருக்காதோ?

அவளின் விதி இப்படி ஒரு அவலமான கோணத்தில் திரும்பியிருக்காதோ? விக்னேஷ் வரனை பற்றிய உண்மை தெரியா மலேயே போய் இருந்திருக்குமோ? விதியை என்னவென்று சொல்ல...

விக்னேஷ்வரின் காதலி என்று கையில் குழந்தையுடன் பிரியாவிடம் விவரம் சொன்ன பெண்ணை கண்டதும் பேய் பிடித்தவள் போல முழித்து, யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு வீட்டுக்கு வந்து அங்கு கடவுள் செயல் போல உடனே வந்து சேருமாறு எம்.பி.ஏ., அட்மிஷன் கார்டு இடைக்க, கடவுள் எனக்கு

## பேயன் வாழை

**கா**சநோய், சளி உள்ளவர்கள் தினசரி இரண்டு பேயன் வாழைப்பழம் சாப்பிட்டு வந்தால் நல்ல குணம் கிடைக்கும். உணவில் துளசி டீ, முசுமுசுக்கை இலை இட்லி, தூது வளைக்காய் வற்றல், முருங்கை பிஞ்சி சூப் சேர்க்கவும்.

## சீமை அத்தி

**பெ**ண் மலடு உள்ளோர் தினசரி இரவு படுக்கும்போது இரண்டு சீமை அத்திப்பழம் சாப்பிட்டு பால் சாப்பிடவும். உணவில் முளைகட்டிய வெந்தயம், பச்சைப்பயிறு, செம்பருத்தம்பூ தோசை சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

## நாயுருவி

**யா**னைக்கால் உள்ளவர்கள் 200 மில்லி நீரில் பத்து கிராம் நாயுருவி வேர் போட்டு, கொதிக்க வைத்து கசாயம் செய்து வடிகட்டி காலை, மாலை வெறும் வயிற்றில் தொடர்ந்து மூன்று நாள் குடித்து வந்தால் குணமாகும்.

மகாத்மா காந்திஜி வலியுறுத்தும் புற்றுமண் சிகிச்சை நல்ல பலன் தருகிறது. கரையான் புற்று மண்ணை நீர்விட்டு குழைத்து, தினசரி பகலில் வீக்கத்தின் மேல் தடவி, காய்ந்ததும் கழுவி விடவும்.

உணவில் துளசி டீ, கொள்ளு கஞ்சி, பப்பாளிக்காய் கூட்டு, கருணைக்கிழங்கு குழம்பு, முள் முருங்கையிலை அடை சேர்க்கவும்.

—மூலிகை மருத்துவ நிபுணர்,
தேலூர் ஜி. மணிவாசகம்



விதித்திருப்பது இதுதான் என்று அப்பாவுடன் அடித்துப் பிடித்துக்கொண்டு டெல்லி வந்தாள்.

காலேஜ் ஹாஸ்டலிலேயே தங்குவதற்கான வசதியையும், பெண்ணின் பாதுகாப்பையும் திருப்தியுடன் கவனித்துவிட்டு ஜம்புலிங்கம் இரண்டு நாளில் சென்னை திரும்பினார்.

என்னவானாலும் விக்னேஷ்வரன் முகத்தில் முழிக்கவே கூடாது என்கிற பிடிவாதம் அவளுக்கு இருந்தது.

சொல்லாமல் கிளம்பியதற்கு அண்ணனிடம் சாரி சொல்லி கடிதம் அனுப்பினாள்.

விக்னேஷ்வரனைப் பற்றி ஒரு வரிகூட அதில் குறிப்பிட வில்லை. முதல் ஒரு வாரமும் பிரியாவிற்கு ஒன்றும் ஓட வில்லை. பித்துபிடித்தவள் போல் எதிலும் ஒன்றாமல், சதா சிந்தனையிலேயே கழித்தாள்.

தன்னுடன் தன் அறை யிலேயே தங்கியிருந்த சக தோழியின் பெயரைகூட அவள் அறிய ஆசைப்படவில்லை. ஆனால் அந்த பெண் கீதா ஆசையுடன் பிரியாவின் நட்பை விரும்பி இடை இடையே ஏதோ பேசியது பிரியாவிற்கு கேட்ககூட இல்லை.

உலகமே பிடிக்காமல் போனது பிரியாவிற்கு.

அவனே வாழ்க்கை என்று முழுவதுமாக நம்பியிருந்த வளுக்கு அந்த நம்பிக்கை பொய்த்துப்போனது. ஜீரணிக்க முடியவில்லை.



## அஜீத் ரசிகர் மன்றம்!

அஜீத்குமார் ஒவ்வொரு மாதமும் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையை தன்னுடைய ரசிகர்களுக்காக ஒதுக்கிவிடுகிறார். பல ஊர்களில் இருந்தும் ரசிகர்கள் அவரை பார்க்க வருகிறார்கள். ரசிகர்களை சந்திப்பதற்காகவே அபிராமபுரத்தில் ஒரு அலுவலகம் திறந்திருக்கிறார். அங்குதான் அஜீத் ரசிகர்களை சந்தித்து வருகிறார்.

அஜீத்குமாருக்கு தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா என்று பல மாநிலங்களிலும் ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. இதுவரை மொத்தம் 26 ஆயிரம் ரசிகர் மன்றங்கள் இருக்கின்றன. "வாலி" படத்துக்கு முன்பு வெறும் 12 ஆயிரமாக இருந்த ரசிகர் மன்றம் இப்போது 26 ஆயிரமாக வளர்ந்திருக்கின்றன. அகில இந்திய அஜீத் ரசிகர் மன்றத் தலைவராக ராஜா என்பவர் இருக்கிறார்.

**ப**ச்சைப்பசேலென்று இருக்கும் வேப்பமரத்தின் இலைகள் திடீரென்று வெளுத்து உலரத் தொடங்கினால் விஷக் காற்றால் உண்டாகும் வெக்கை நோய்கள் பரவும் என்று முன்கூட்டியே தெரிந்து கொள்ளலாம்.

நாட்கள் மெல்ல நகர்ந்தது.

அன்று காலேஜ்ஜில் இருந்து ஹாஸ்டல் ரூமிற்கு நான்கு மணிக்கு வந்தவளிடம் கீதா ஒரு கவரை நீட்டினாள்.

"இன்று போஸ்ட்டில் வந்தது பிரியா" என்றவள் தொடர்ந்து "நானும், அனியும் இன்னைக்கு புக் எக்ஸிபிஷனுக்குப் போறோம். நீயும் வரியா பிரியா" என்று அழைப்பு விடுத்தாள்.

சென்னையில் இருந்து வந்து இந்த ஹாஸ்டலில் சேர்ந்து பத்து நாளாகியும் பிரியாவால் கலகலப்புடன் யாருடனும் பழக முடியவில்லை.

எத்தனையோ விஷயங்களில் சாமர்த்தியமாக நடந்தவளுக்கு வாழ்க்கையின் மிக முக்கியமான விஷயத்தில் ஏமாந்துவிட்டது சகிக்க முடியாத அவமானமாக இருந்தது.

"அவுட் ஆப் சைட் இஸ் அவுட் ஆப் மைண்ட்" என்று எண்ணி சென்னையைவிட்டு ஓடோடி டெல்லி வந்துசேர்ந்தவளின் மனசிலிருந்து அவனுடைய நினைவுகளை அழிக்க முடியவில்லை.

ஆனால் அவன் பெயரை கேட்டவுடன் கிளுகிளுக்கும் மனசு இப்பொழுது கசந்துபோனது மட்டும் நிஜம்.

எப்படி அண்ணன் இவனிடம் சிநேகம் வைத்தான் என்பதே அவளுக்கு பெரிய ஆச்சரியம்.

"பிரியா உன்னிடம் ஒன்று கேட்கலாமா? நானும் இந்த பத்து நாளா உன்னை கவனிச்சுகிட்டுதான் வரேன். அப்படி என்ன ஒரே விரக்தி எதையோ பறிகொடுத்துட்டாப்ல" என்று குரலில் அன்புடன் வினவினாள் கீதா.

"நான் உன்கிட்டே வந்து சொன்னேனா, ரொம்ப விரக்தியா இருக்கு அதை பறிகொடுத்துட்டேன் இதை பறிகொடுத்துட்டேன்னு. உன் வேலையை பார்த்துட்டு போ. நான் அந்த புக் எக்ஸிபிஷனுக்கு உன்னோட வரல்லை. துன்புறுத்தாதே" என்று எரிந்துவிழுந்தாள் பிரியா.

பரிதாபமானதொரு பார்வையில் கீதா நகருவது பார்வையில் பட பிரியாவிற்கு தன் மீதே ஆத்திரம் வந்தது.

இதுநாள் வரை யாரிடமும் எதற்கும் கோபித்து, எரிந்து விழுந்து மற்றவர்களை கவலைக்குள்ளாக்கும் பழக்கம் பிரியாவிடம் இருந்ததில்லை. அதனால் கீதாவின் முகவாட்டம் அவளை சங்கடப்படுத்தியது.

கீதாவிடம் மன்னிப்புக் கேட்க தூண்டியது. ஆனால், அதற்கும் கண்களில் இருந்து அவன் ...

தன்னுடைய நடத்தைக்கு மன்னிப்பு கேட்டுவிட வேண்டும் என்று உறுதி செய்தாள்.

'அவனுடைய நினைவுகளால் நான் மட்டும் பாதிக்கப்படவில்லை, பிறரையும் பாதிப்புக்குள்ளாக்குகிறேன்" என்று மெல்ல முணுமுணுத்தபடி தன்னுடைய அறைக்குள் நுழைந்தாள்.

கைப்பையை மேஜையில் வைத்துவிட்டு மாற்றுடையை அலமாரியில் கிடைத்ததை எடுத்துக்கொண்டு குளியலறைக்குள் சென்றாள். பிறகு அங்கிருந்த மூங்கில் சேரை பேனுக்குகீழ் நகர்த்தி டேபிளில் வைத்திருந்த கவரை நிதானமாக "யார் அனுப்பியிருப்பார்கள்" என்று எண்ணியபடி கவரை கிழித்தாள்.

அழகிய வண்ண காகிதத்தில் "என்ன விஷயம், ஏன் திடீரென்று" என்ற ஒரே வரி ஆங்கிலத்தில் அழகாக அச்சிடப்பட்டு அதன்கீழ் விக்னேஷ்வரன் என்று கையொப்பம் இடப்பட்டிருந்தது. அதை படித்தவுடனேயே, முகம் சிவந்தது, பிரியாவிற்கு. பெரிய யோக்கியன் கேள்வியைப் பார் கேள்வியை என்று சிடுசிடுத்து காகிதத்தை கசக்கி உருத்தெரியாமல் கசக்கி விட்டெறிந்தாள்.

அடுத்த ஐந்து நாட்களில் மீண்டும் ஒரு கடிதம் விக்னேஷ்வரனிடம் இருந்து பிரியாவிற்கு வந்தது. "என் மேல் என்ன கோபம்? புரியவில்லை. உன்னிடம் இருந்து பதிலை எதிர்பார்த்தேன்" என்று எழுதியிருந்த அதை சுக்குநூறாய் கிழித்துப் போட்டாள், பிரியா.

அதன்பிறகு இதோ,

அவளை தேடிக்கொண்டு, ஹாஸ்டலுக்கு வந்து நிற்கிறான்.

## 4

**யா**ரோ அவளைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கீதா வந்து சொல்லவும் யாராகயிருக்கும் என்று ஆச்சரியமாக இருந்தது பிரியாவிற்கு.

அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பிரியா, கீதாவிடம் மன்னிப்பு கேட்க, இயற்கையிலேயே அருமை பெருமையான குணத்துடன் இருந்த கீதா, மன்னிப்பை ஏற்று உடனேயே பிரியாவுடன் ஒட்டிக்கொண்டாள்.

இந்த சிறிய காலத்திற்குள் ஒருவரின் குணாதிசயங்களை ஒருவர் உணர்ந்து ஏறத்தாழ இரண்டும் ஒத்துப்போக, உயிர் பிரியாத் தோழிகளாயினர் இருவரும்.

ஆனாலும் பிரியாவிற்கு தான் ஏமாற்றப்பட்ட விஷயத்தை உயிர் தோழியிடம்கூட பகிர்ந்துகொள்ள முடியவில்லை.

"பிரியா! சீக்கிரமா போ. இல்லாட்டி நம்ம ஹாஸ்டல் லைலாக்கள், அட இதோ பார் நம்ம மஜ்னு என்று உன்னோட மன்மதனை

கொத்திக்கொண்டு போய்விடப் போகிறார்கள்" என்று கீதா பிரியாவை கிண்டலடிக்க—

யாராயிருக்கும் என்ற ஆவலில் பரபரப்புடன் கதவை தாண்ட கால் வைத்த பிரியா சட்டென்று காலை உள்ளிழுத்துக்கொண்டாள்.

"வந்திருக்கிறவன் எப்படி இருப்பான் என்று அவனுடைய உருவ அமைப்பை சொல்" என்று முகத்தை தீவிரமாக்கிக்கொண்டு கேட்க—

சிரித்தபடி கண்சிமிட்டினாள் கீதா.

"ஏய் விளையாடாதே கீத்து. ஐ எம் சீரியஸ்."

"சரிப்பா சொல்றேன். உயரம் ஆறடியிருக்கும். நிறம் நல்ல சிகப்பு, அப்புறம் கண் செம சார்ப், தென் மூக்கு" என்று சொல்ல ஆரம்பித்தவளை தடுத்து,

விக்னேஷ்வரனை தவிர இந்த வர்ணனைகள் யாருக்கும் பொருந்தாது என்பது தெரிந்து வெடித்தாள் பிரியா.

"கீத்து... நான் பார்க்க முடியாதுன்னு போய் சொல்லு."

"கீழே அவனைப் பார்க்க கியூவே நிக்குது. நீ என்னடான்னா இப்படி சொல்றே?"

"பிளீஸ்... ஐ டோண்ட் வாண்ட் டு சி தட்...." என்று ஆத்திரத்தில் மூச்சுவாங்க பிரியா பேசுவதை சற்று அதிசயத்தோடு பார்த்த கீதா பிறகு ஒன்றும் பேசாமல் மெல்ல நகர்ந்தாள்.

பிரியா சொன்னதை அப்படியே விக்னேஷ்வரனிடம் வந்து சொன்னாள் கீதா.

வரவேற்பு ஹாலில் இருந்த சோபாவில் அமர்ந்து அங்கிருந்த புத்தகத்தில் கண்களை ஓட்டிக்கொண்டிருந்தவன், கீதா சொன்னதைக் கேட்டு கண்களை சுருக்கினான்.

கீதாவிற்கு அவனைப் பார்க்கையில் பாவமாக இருந்தது. இவர்களுக்குள் என்ன விஷயமாக இருக்கும் என்று அறியும் ஆசையும் வந்தது.

ஒரு நிமிடம் யோசித்தவன் பிறகு ஒரு காகிதத்தை எடுத்து, "என்னை பார்க்க பிடிக்காததற்கு என்ன காரணம் என்பதை சொல்" என்று ஆங்கிலத்தில் தெளிவாக எழுதி கீதாவிடம் நீட்டினான்.

"பதில் வாங்கி கொண்டுவாருங்கள். பிளீஸ்" என்று பணிந்து சொன்னான்.

பார்க்க நல்லவனாகத்தான் தெரிகிறான். இவனிடம் பிரியாவிற்கு என்ன வெறுப்பாக இருக்கும் என்று எண்ணியபடி கடிதத்தை வாங்கி கொண்டுவந்து பிரியாவிடம் காட்டினாள்.

அதை படித்த பிரியா, "கண்ட கண்டவர்களுக்கு காரணத்தை சொல்ல முடியாது. இனிமேல் என்னை தொடர்புகொள்ள முயற்சிக்காதீர்கள்" என்று வேகமாக கிறுக்கி கீதாவின் கையில் திணித்தாள்.

பிரியாவின் பதிலை படித்த விக்னேஷ்வரனுக்கு கோபம் சுறுசுறுவென்று ஏறியது.

தெளிவற்று ஏதோ முணுமுணுத்தவன், கை முஷ்டி இறுக சோபாவில் சாய்ந்து உட்கார்ந்து தன்னை நிதானித்தான்.

"இடியட்... திடீர்னு என்ன ஆச்சு இவளுக்கு..." என்று தன்னை அறியாமல் வாய்விட்டு கோப குரலில் சொல்லியபடி எழுந்தான்.

அவனையே பார்த்துக்கொண்டிருந்த கீதா, "என்ன சொன்னீங்க..." என்று புரியாமல் கேட்க.

தன் நினைவில் மூழ்கியவன், திடுக்குற்று "நத்திங் தாங்க்ஸ் ஃபார் யூ" என்று தங்களிடையே தூது போனவளுக்கு கடினமான குரலில் பதில் சொல்லிவிட்டு கோபமாக வெளியே நடந்தான்.

நாட்கள் பல உருண்டோடியது. பிரியாவும் மெல்ல மெல்ல சகஜ நிலைக்கு திரும்பிக்கொண்டிருந்தாள். படிப்பும் சற்று சுவாரசியமானது.

"பிரசென்டேஷன்... பிராஜக்ட் வொர்க், ரோல் பிளே என்று சிந்திக்கக்கூட நேரமிருக்காமல் படிப்பு புயல் வேகத்தில் சென்றது. ஆசையுடன் தேர்ந்தெடுத்த பாடமாகையால் பிரியா அதில் ஒன்றிப்போனாள்.

படிப்பு, படிப்பு, படிப்பு இதைவிட்டால் வேறு நினைப்பே இல்லை பிரியாவிற்கு.

ஹாஸ்டல், காலேஜ் லைப்ஃரரி என்று அவளுடைய வட்டம் சுழன்றுகொண்டே இருந்தது.

விக்னேஷ்வரனால் அடைந்த ஏமாற்றம் மட்டும் இரவு நேர தனிமையில் அவளை வாட்டியது.

முதல் வருட லீவிற்கும் பிரியா சென்னை வர மறுத்தாள். அம்மா, பிராஜக்ட் வொர்க் இருக்கு. இதுக்கு நிறைய டேட்டாஸ் கலெக்ட் பண்ணணும். டெல்லியில் இருந்தால்தான் சுலபமாக பண்ணமுடியும் என்று அதற்கும் ஒரு காரணத்தை உருவாக்கி உறுதியாக இருந்தாள்.

இங்கு விக்னேஷ்வரனுக்கோ ஏகப்பட்ட பிரச்சினைகள் அவனுடைய தொழிலில் போட்டி ஏகப்பட்டதாக இருந்தது.

மதுரையில் இருந்து செய்வதைவிட தலைநகரான சென்னையில் அதனை விரிவடைய செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதைக் கண்டு தொழிலின் மொத்த அமைப்பையும் சென்னைக்கு மாற்றினான்.

சிட்கோவில் ஒரு ஏக்கர் வாங்கி போட்டான்.

அதில் ஆறே மாதத்தில் வேக வேகமாக பிளாஸ்டிக் மோல்டிங் தொழிற்சாலை எழும்பியது. தன்னுடைய அலுவலகத்தை மவுண்ட் ரோட்டிற்கு கொண்டு வந்தான். ஆனால் வீடு எடுத்து தனியே தங்குவதற்கு ஜம்புலிங்கமும், லெட்சுமியும் விடவேயில்லை. அவர்களின் அன்பு வேண்டுகோளை விக்னேஷ்வரனால் ஏற்றுக்கொள்ளாமலும் இருக்க முடியவில்லை.

காரணம் பிரியா, பிரியா.

திருக்கழுக்குன்றம் கோயிலில் திருபுரசுந்தரி அம்மனுக்கு ஆண்டில் ஆடிப்பூரம், பங்குனி உத்திரம், நவராத்திரியில் நவமி ஆகிய மூன்றுநாள் மட்டுமே முழு அபிஷேகம் செய்யப்படுகிறது. தினந்தோறும் பாதபூஜை மட்டுமே நடைபெறுகிறது.

அவ்வளவு எளிதில் அவனால் அவளை மறக்க முடியவில்லை. மறக்கவும் முடியாது. அவளின் மாறுபட்ட நடவடிக்கையின் காரணம் என்ன ஏது என்று புரியாமல் குழம்பினான். காரணத்தை அறியாமல் அவன் அங்கிருந்து நகர்வதாகவும் இல்லை.

ஏற்று நடத்திய தொழிலோ அசாத்திய நிலையில் முன்னேறியது.

அது ரொம்ப கஷ்டம். இந்த ஏற்றுமதி ஆர்டர் கிடைக்கவே கிடைக்காது என்று நினைத்ததெல்லாம் அவனுடைய முயற்சியில் கைகூடி வாழ்க்கையில் பல படிகள் முன்னேறி விக்னேஷ்வரனுக்கு பிரியா புரியாத புதிராக இருந்தாள்.

ஜம்புலிங்கமும், லெட்சுமியும் மகளை பார்த்து வர டெல்லிக்கு ஒருமுறை சென்று வந்தார்கள்.

மகள், மிகத் தீவிரமாக படிப்பில் கவனம் கொண்டு இருப்பதைக் கண்டு அந்த பெற்றோருக்கு பெருமிதம் தாளவில்லை.

அவள் ஆழ்ந்து மூழ்கி இருந்த படிப்பு ஒரு முடிவுக்கு வந்து அவளை மீண்டும் சென்னைக்கு கொண்டுவரத்தான் செய்தது.

## 5

பிரியா, தன்னுடைய இரண்டு வருட கால படிப்பை முடித்து, சென்னைக்கு திரும்பி நாள் ஒன்றானது.

இந்த இரண்டு வருடத்தில் விக்னேஷ்வரன் அடிக்கடி வீட்டிற்கு வந்து உறவை வலுப்படுத்தியிருந்தது புரிந்தது.

அவனுடைய வருகையின் காரணம் பிரியா அறியாததா?

நயவஞ்சக உள்ளம் படைத்த விக்னேஷ்வரனின் சுயஉருவம்தான் வெளிச்சத்திற்கு வந்துவிட்டதே.

தூண்டிலில் பிடிப்பட்டு தப்பிய மீன் மீண்டும், சிக்குமா? என்று தூண்டிலோடு அடைக்காப்பது ஒரே எரிச்சலாக இருந்தது.

அம்மா மூச்சுக்கு முன்னூறு தரம் 'விக்கி விக்கி' என்று பாசத்தை கொட்டுகையில் அவனுடைய அயோக்கியத்தனத்தை அவரிடம் சொல்ல நெஞ்சு பொங்கும்.

ஆனாலும் ஒருபுறம் அண்ணனின் உயிர்தோழனைப் பற்றி புகாரிடுவதற்கும் மனம் வரவில்லை.



சரி அப்படி புகார் சொல்வதென்றாலும் என்னவென்று சொல்லுவாள். நான் விக்கியை காதலித்தேன் அம்மா, ஆனால் அவனுக்கு கல்யாணமாகாமலேயே குழந்தையிருக்கிறது. அவள் மேல் உயிரையே வைத்துக்கொண்டு என்மேல் பிரியம் இருக்கறாப்பிலே நடிப்பு வேறு என்றா?

"நீ மனசை தறிகெட்டு அலையவிட்டுவிட்டு அவன்மேல் என்ன புகார்டி..." என்று அம்மா கேட்டுவிட்டால்? கேட்கமாட்டார்கள்... ஆனால் கேட்டுவிட்டால் தன்னால் தாங்கிக்கொள்ள முடியாது என்று தெரிந்து வாயை இறுக மூடிக்கொண்டாள்.

இவள் வந்து சேர்ந்த இரண்டாம் நாள் காலையிலேயே விக்னேஷ் ஆர்ப்பாட்டமாக வந்து சேர்ந்தான்.

"விக்கி, வாப்பா... இப்பதான் உன்னை நினைச்சுட்டு இருந்தேன். உனக்கு ஆயுசு நூறு" என்றபடி முகம் எல்லாம் சிரிப்பாக வரவேற்றாள், லெட்சுமி.

"மதுரையிலே இருந்தாலும் உங்க நினைப்புதான் ஆண்ட்டி... திடீர்னு உங்க கையால சப்பாத்தி சாப்பிடணும்னு தோணிச்சி... உடனே கிளம்பியாச்சு" என்று கையில் இருந்த சின்ன பிரீப்கேஸை கீழே வைத்தபடி லெட்சுமியிடம் சொல்ல, லெட்சுமி பூரித்துப் போனாள். ஆனாலும், "ஆமா அப்படித்தான் சொல்லுவ... ஆனா வீட்டிலேயே இருக்கிறது கிடையாது. டிபனையும் ஒழுங்கா சாப்பிடறது கிடையாது. ஒரு சப்பாத்தி சாப்பிட்டா அது பெரிய விசயம். உடனே ஆபீஸுக்கு ஓடிடற... பேசறதுக்கு மட்டும் குறைச்சலே இல்லே..." என்று சுணங்கினார்.

அதைக் கேட்டு மெல்ல சிரித்தவன், பின் அங்கிருந்த சோபாவில் உட்கார்ந்து "ஆண்ட்டி இப்பதான் சென்னையில் நாங்கள் அலுவலக கிளை திறந்திருக்கோம். அதனால நிறைய வேலை. யாரையும் ஆபீஸ்லே முழுசா நம்பமுடியறதில்லை. நான்தான் எல்லாத்தையும் பார்க்கவேண்டியிருக்கு. சரி அதைவிடுங்க. அங்கிள் எங்கே? இன்னும் தூங்கிட்டு இருக்காங்களா?"

"காலையிலேயே ஒரு கேஸ் விஷயமா வக்கீலைப் பார்க்கணும்னு கிளம்பிட்டாங்க... விக்கி உனக்கு தெரியுமா... பிரியா வந்திருக்கா..." என்று தானும் ஒரு சோபாவில் அமர்ந்தபடி பேசினார், லெட்சுமி.

"பிரியா" என்றவுடன் அவன் கண்களில் மினுக்கென்று தோன்றி மறைந்த ஆவலை கவனிக்கத் தவறவில்லை லெட்சுமி.

அதே சமயம்–

"யாரோ வந்தமாதிரி சத்தம் கேட்டதே. யாரும்மா வந்தது?" என்று ஈரத்தலையை சிவப்புநிற டர்க்கி டவலால் முறுக்கியபடி வந்தாள் பிரியா.

சோபாவில் கால்மேல் கால்போட்டு வசதியாக அமர்ந்திருந்தவனைக் கண்டதும் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது பிரியாவிற்கு.



பரமவிரோதியை பார்ப்பது போல் கண்களில் குரோதத்துடன் "இங்கே ஏன் வந்தாய்?" என்பது போன்ற பாவனையில் அவனை உறுத்து நோக்கினாள்.

அப்படி அவனை நோக்கியவளின் கண்கள் இரண்டு வருடத்தில் அவனுடைய உருவத்தில் தோன்றியிருந்த சிறுசிறு மாற்றங்களை படம்பிடித்தன.

முகத்தில் முதிர்ச்சி தென்பட்டது. நெற்றியில் அழுத்தமாக இரண்டு கோடுகள் தென்பட்டன. சிவந்திருந்த உடம்பு சிறிது கருத்திருந்தது. நெற்றி சிறிது மேல்பக்கமா ஏறியிருந்தது.

ஆனால், அவ்வளவு மாற்றங்களும் அவனுடைய தோற்றத்தை மேலும் வசீகரமாக காட்டுவதை அறிந்து எரிச்சலடைந்தாள் பிரியா.

பெண்ணின் அழகு மிளிர, புத்தம் புது மலராக அந்த ஹாலையே ஒளியூட்டிக் கொண்டு அலட்சியமாக நோக்கி பிரியா நிற்கவும், 'நேராக ஒரு பார்வை எனக்கு என்னதான் ஆயிற்று' என்பது போல் அழுத்தமாக பார்த்தான். பிறகு சாதாரணமாக "அலோ..." என்று உரைத்தான்.

அம்மா தன்னை கவனிப்பதை உணர்ந்து பிரியாவும் தன்னுடைய வெறுப்பை காட்டிக் கொள்ளாமல் பதிலுக்கு ஒரு "அலோ"வை கஷ்டப்பட்டு சொல்லி முகத்தை சுழித்தாள்.

சகஜம்போல் காட்டிக்கொள்ள விக்னேஷ், "என்றைக்கு எக்ஸாம் முடிந்தது. ரிசல்ட் எப்ப வரும் பிரியா..." என்று கேட்க—

அம்மா முன்னிலையில், அவனிடம் அமைதியை காட்டவேண்டும் என்றெண்ணியிருந்த பிரியா, பெரிய கொம்பனைப் போல் அவன் பேசவும், நிதானத்தை இழந்தாள்.

"அது வரும்பொழுது வரும். அதைப் பற்றி உங்களுக்கு விளக்கி சொல்ல வேண்டிய அவசியம் இல்லை" என்று



**நா**வல்பழம் சாப்பிட்டால் பசியைத் தூண்டும் என்றாலும் கப்பென சளிபிடிக்க வைக்கும் தன்மையுடையது. டான்சிலுக்கும், டைபாயிடு காய்ச்சலுக்கும் இந்த நாவல்பழமே மூலகாரணம். ஆனால் நாவல் கொட்டையானது பழத்தால் ஏற்படும் கெடுதலை முறித்துவிடும்.

நாவல்பழம் சிறுநீரை பெருக்கும். ஆனால் கொட்டை சிறுநீரைக் கட்டி அதிகம் போவதை தடுக்கும். அத்துடன் சிறுநீரில் உள்ள சர்க்கரையையும் குறைத்துவிடும். ரத்தத்தை சுத்தியும் செய்யும். சர்க்கரை வியாதிக்கு நாவல் கொட்டை மிகமிக நல்லது.

சுள்ளென்று எரிந்து விழுந்தாள்.

இரண்டு வருடங்களாக சற்று அடங்கியிருந்த கசப்பான நினைவுகள் அவனைப் பார்த்த மாத்திரத்தில் பொங்கி எழுந்தது.

அவள் பேச்சில் காயப்பட்டவனைப் போன்று கண்களை சுருக்கி, புருவத்தை உயர்த்தி விக்னேஷ் அவளைப் பார்க்கவும்,

ஆகா என்ன ஒரு அப்பாவித்தனமான பார்வை, இதை எல்லாம் நம்பி மயங்கி விழ நான் ஒன்றும் பழைய பிரியா இல்லை என்று மனதுள் கருவினாள், பிரியா.

விக்னேஷ்வரனின் பார்வையில் என்னவெல்லாமோ நொடிப் பொழுதில் கனவுகண்ட லெட்சுமியின் கனவுகள் பிரியாவின் பேச்சை கேட்டவுடன் கலைந்துபோனது.

அவளின் முறைகேடான பேச்சை கண்டிக்கும்வகையில், "பிரியா..." என்று முகம் சுறுக்கி பெயரில் அழுத்தம் கொடுத்து அழைக்க–

தன் தவறை உணர்ந்து, "சாரிம்மா..." என்று முணுமுணுத்து விட்டு உள்ளே மின்னலென மறைந்தாள் பிரியா.

"ஒருநாளும் பிரியா, இந்த மாதிரி துடுக்கா பேசமாட்டா விக்கி... இன்னைக்கு என்ன வந்துட்டதோ அவளுக்கு... நீ ஒன்றும் மனசில வைச்சுக்காதே விக்கி... நான் அவள்கிட்டே விசாரிக்கிறேன்..." என்று விக்னேஷ்சை பார்த்து கவலையுடன் லெட்சுமி சொல்ல,

அதுவரை அமைதியுடன் பிரியா சென்ற 'திக்'கையே பார்த்துக் கொண்டிருந்தவன், பளீரென்று சிரிப்புக்குத் தாவினான்.

"இது ஒன்றும் பெரிய விசயம் இல்லை. என்மேல் சின்ன கோபம் அதனாலத்தான் இப்படி துடுக்கா பதில் சொல்லிவிட்டு போறா... நாளைக்கு சரியாயிடுவா... அதை விடுங்க இப்ப எனக்கு சப்பாத்திசெஞ்சு தரப்போறீங்களா... இல்லையா அதைச் சொல்லுங்கள்" என்றான் உரிமையுடன்.

உடனே சோபாவில் இருந்து எழுந்துவிட்டார் லெட்சுமி.

"உனக்கு இல்லாமலா... சரியா பதினைஞ்சு நிமிடத்திலே ரெடி பண்ணிடறேன் பார்.. ஆனா ஒரு கண்டிஷன்... நீ குறைஞ்சது ஆறு சாப்பிடணும்... சரியா..." என்று சொன்னபடி அவன் தலையில் செல்லமாய் கைவைத்து தலைமுடியை கிண்டியபடி நகர்ந்தார் லெட்சுமி.

"ம்ம்...மா... ஆண்ட்டி நீங்க போடற சைஸ்லே நாலு சாப்பிட்டாலே வயிறு புல் ஆயிடும். ஆறெல்லாம் முடியாதப்பா..."


"ஊகும்... அதெல்லாம் எனக்கு தெரியாது. ஆறுதான்" என்று சமையல் அறையை நோக்கி நடந்தார்.

காலை டிபன் சாப்பிட்ட கையோடு விக்னேஷ் அலுவலகம் சென்றுவிட்டான்.

வீட்டில்

ஆரம்பித்துவிட்டார்.

"விக்கி ஒன்றும் சாதாரணமான ஆளில்லை. செல்வ சீமான் வீட்டுப்பிள்ளை. சென்னை வந்தால் நம்ம வீட்டிலேதான் தங்கறான். ஏன் தெரியுமா? தாமு, நான் அப்பா எல்லாம் ரொம்ப அவன் கிட்டே கேட்டுக்கிட்டோம். நல்ல பிள்ளை. நாங்க சொன்னவுடன் சரின்னுட்டான். அவன் நினைச்சா தங்கறதுக்குன்னு பெரிய பைவ் ஸ்டார் ஓட்டல்ல ரூம் எடுத்து தங்க முடியும். ஆனா செய்யவில்லை. ஏன் தெரியுமா? நம்ம வீட்டிலே எல்லார் மேலேயும்




எலெக்ட்ரானிக் பொருட்களை தயாரிப்பதில் ஜப்பானியர்களுக்கு நிகர் ஜப்பானியர்கள்தான். ஒவ்வொருவரும் போட்டி போட்டு எதையாவது புதுமையாக தயாரித்து சாதனைபுரிவார்கள். படத்தில் இருப்பது எலெக்ட்ரானிக் பொம்மை என்று நினைத்துவிடாதீர்கள்.

தினசரி நமக்குத் தேவையான சத்துணவுகளை எந்த அளவு நாம் உட்கொண்டு உடம்பை கட்டுப்பாட்டுடன் ஊளைச்சதை போடாமல்– பெருத்துவிடாமல் கட்டுக் கோப்பாக பாதுகாப்பது என்பதைக் கணிப்பதற்கென்றே ஒரு கால்குலேட்டரை கண்டுபிடித்திருக்கிறார்கள். படத்திலிருக்கும் 'டெருமி என்டோ' என்ற பெண்தான் இந்த கால்குலேட்டரை கண்டுபிடித்திருக்கிறார். பார்ப்பதற்கு ரொட்டி அளவில்தான் இருக்கிறது. ஜப்பானில் உள்ள மக்டோனால் என்ற உணவகத்தில் சாப்பிட வருகிறவர்களுக்கு இந்த கால்குலேட்டரை வழங்குகிறார்கள். இதனுடைய விலை இந்திய ரூபாய்ப்படி ரூ. 900 ஆகும்.

*–இளசை ஜமால், ரியாத்.*

அவ்வளவு பாசம். நம்ம மனசை நோகடிக்க கூடாதுங்க
நல்லெண்ணெம். நீயானால்...."
"நம்ம வீட்டிலே ஓசி... ஓட்டல்லே... பணம் கட்டவேண்டா
அதான்" என்று உதட்டை வளைத்து இளக்காரமாக சொல்ல—
"இது என்ன எக்குதப்பான பேச்சு... உன்னை தனியா
படிக்கட்டுமேன்னு டெல்லிக்கு அனுப்பியிருக்கக்கூடாது. பேச்
ஒரு மாதிரியாத்தான் இருக்கு. ஹாஸ்டலுக்கு அனுப்பினா நல்ல பழக்
வழக்கங்கள் கூடவா மாறும். நான்கூட உங்கப்பாகிட்டே பெண்ணை
தனியா அனுப்ப வேண்டாம்னு தலைபாடா அடிச்சுக்கிட்டேன்.
அவர்தான் அனுப்பினாதான் தைரியமான பொண்ணா வளருவா
உலகத்தை பற்றி புரிஞ்சுப்பா... தன்னம்பிக்கை வரும் அது இது என்
சொல்லி என்னை தடுத்திட்டார். இப்ப நீ பேசினதை உங்கப்ப
கேட்டிருக்கணும்..."

அன்பு வார்த்தை பேசி, ஒழுக்கமுடையவன் போல் நடித்
எல்லார் மனசையும் கலைத்தவனின் உண்மை சொரூபத்தை
முகத்திரையை கிழிக்கவேண்டும் என்று பிரியா மனசு பரபரக்
ஆனால் அது அண்ணனை அவமானப்படுத்தும்வகையில் போ
முடியுமோ என்று எண்ணி தன்னை அடக்கினாள்.

ஆனால் அம்மா பேச்சை கேட்க கேட்க இனி விக்னேஷ்வரன் பற்
தான் என்ன சொன்னாலும் நம்பமாட்டார்கள் என்றே தோன்றியது.

"ஒன்று சொல்றேன் கேட்டுக்கோ பிரியா... அப்பா உன்கிட்டே
சொல்லவேகூடாதுன்னு சொன்னார். ஆனா நீ இப்படி பேசறதை
கேட்டுட்டு என்னால வாயை பொத்திகிட்டு இருக்க முடியவில்லை
நல்லா கேளு... அப்பாவுக்கு... அப்பாவுக்கு..." என்று வேகமா
ஆரம்பித்தவருக்கு அதற்குமேல் பேச்சு எழும்பாமல் கண்க
கலங்கியது. இருந்தும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு, எப்ப
யும் சொல்லியே தீருவேன் என்பதுபோல்,

"நீ டெல்லியில் இருக்கும்போது, ஒரு நாள் காலையிலே பேப்ப
படிச்சிக்கிட்டு இருக்கும்போது அப்பாவுக்கு திடீர்ன்னு ஹார்ட்
அட்டாக் வந்துச்சு... தாமுவும் வேலைக்குன்னு லண்டன் போய் ஒ
மாசம் இருக்கும். எனக்கு என்ன பண்ணறதுன்னே தெரியவில்லை
அவர் துடிக்கறதை பார்த்து 'ஹோனு' மனசு கதற வாய்விட்டு அழுதேன்
நினைச்சுப் பார்... அம்மா தனியாள் என்ன செஞ்சிருப்பேன்னு
எனக்கு யாரை தெரியும். சொல்லும்மா...வீட்டுக்குள்ளே ராணி மாதி
வளைய வரத்தான் தெரியும். நல்லவேளையா, என்னோட மாங்கல்
பாக்கியம்தான் காரணம். கடவுள் மாதிரி விக்கி டாக்சியிலேயிருந்
இறங்கினான்.

உடனே நிலைமையை புரிஞ்சுகிட்டு அதே டாக்சியிலே அப்பாவை
தூக்கி வைச்சு ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போய் பெரிய பெரி
டாக்டரையெல்லாம் பார்த் மட்

# வெளியே வா...!

ஓ... தீவிரவாதியே
உன் உடலில்
என்ன ஓடுகிறது?

எங்கள்—
ரத்தத்தில்
வேறுபட்டவனே...

உன் இருவிழிகளையும்
இதயத்தையும்
இரும்பாக்கி
கொண்டவனே...

உயிர்களை
உணவாக
உண்ணுகிறவனே...

இரத்த தாகம்
கொண்டவனே...

பிஞ்சுகளின்
பீதிகளை
பார்த்தாயா?

புதிய
பள்ளியறையில்
புகுந்தவர்களின்
பிரிவின்
இரத்தக்கண்ணீரை
பார்த்தாயா?

உன் உயிரை
பணயம் வைத்து
பயணிகளாக
வந்தவர்களின்
உயிரையும்— ஏன்
பணயம் வைக்கிறாய்?

உன்
தாய் அங்கு
இருந்திருந்தால்
உயிர்களுக்கு
விலை பேசுவாயா?

அப்போது— உன்
மனம் எப்படி
துடிதுடிக்கும்?

துடித்தோம்...
நாங்கள்
துடித்தோம்...

நான்கு திசையும்
துடித்துப்போனது
நாளும்
பொழுதும்


பரிதா பானு

இரத்தக்கண்ணீர்
விட்டது...

தினம் தினம்
உன்
எரிமலை
எண்ணத்தை
கேட்டு கேட்டு
எரிந்துபோனோம்.

வேதனையில் தினம்
நீந்தி தவித்து
போனோம்.

வாழ்க்கையை
விட்டுவிட்டு
மோச கொள்கைக்காக
ஏன் வாழ்கிறாய்?

வா... வந்து
எங்களோடு
ஒரு மணி நேரம்
வாழ்ந்துப் பார்...

இளம் பிஞ்சுகளின்
இதயத்துடன்
இணைத்து பார்...

கூடபிறந்தவர்களின்
பாசத்தில்
பிணைத்து பார்...

பெற்றோர்களின்
அன்பில்
வாழ்ந்து பார்...

அப்போதுதான்
வாழ்க்கையின்
அர்த்தம் புரியும்...

பாசத்தின்
பிணைப்பு புரியும்...

பாசக்கயிராக
பிணைந்துயிருக்க
வேண்டிய
நீ...

பாஷக்கயிராக
இருக்கிறாயே...

வெறிப்பிடித்த
வேங்கையே
வா... வெளியே...
உன்
கூண்டுவிட்டு!

*—கே. பரிதா பானு,*
*சேலம்.*

இல்லை... ஒரு மூலையில் அழுது வடிந்துகொண்டிருந்த என்னை யும் தேற்றி பத்து நாள் எங்க கூடவே இருந்து, அப்பா எழுந்து உட்காரத் தொடங்கியவுடன்தான், தன்னோட வேலையைப் பற்றி யோசிக்கவே தொடங்கினான். அவன் மட்டும் சமயத்திலே உதவி செய்யாமல் இருந்திருந்தா... நீ அப்பாவை மட்டுமில்லை... என்னையும் உயிரோட பார்த்திருக்க முடியாது" என்று கண்களில் நீர் வழிய லெட்சுமி அழுது வடிய—

பிரியா கால்களை மடித்து, கைகளால் முகத்தை மூடி விசும்பத் தொடங்கினாள்.

அவள் அழுவதைப் பார்த்தவுடன் லெட்சுமி தான் உட்கார்ந்திருந்த மூங்கில் சேரில் இருந்து எழும்பி பிரியாவின் அருகே வந்து நின்று தலையை கோதினாள்.

"இப்படி பயந்துபோய் அழுவே அப்படின்னுதான் அப்பா உன்கிட்டே சொல்ல வேண்டான்னார்... தெய்வம் மாதிரி வந்து உதவி செய்த

# நாய் இறைச்சி!



**வடக்கு** வியட்நாமில் நாய் இறைச்சிக்கு கடும் கிராக்கி. அதுவும் மழைக்காலம் என்றால் வியட்நாமில் மக்கள் நாய் இறைச்சியை விரும்பிச் சாப்பிடு கிறார்கள். வியட்நாமில் நிறைய நாய் இறைச்சி உணவு விடுதிகள் காணப்படுகின்றன. அப்படி ஒரு நாய் இறைச்சி உண விடுதிக்குத்தான் ஒருவர் நாய்களை கூண்டில் அடைத்து சைக்கிளில் ஏற்றி செல்கிறார். ஒரு விடுதி யில் ஒரு நாளைக்கு நா

விக்கியை எடுத்தெறிந்து பேசியதும் எனக்கு தாங்கலைம்மா..."

"அம்மா என்னை மன்னிச்சிடுங்கம்மா" என்று அழுகையினூடே பிரியாவின் குரல் பலவீனமாக ஒலித்தது.

"என் தங்கம், உன்னோட குணம் எனக்குத் தெரியும்மா? யாரையும் கடிந்து பேசக்கூட உனக்கு தெரியாதே. ஆனா புதுசா விக்கி மேலே எரிஞ்சு விழுந்ததைப் பார்த்ததும் தாங்க முடியவில்லை. என்ன எதற்குன்னு விளங்கவே இல்லை. என்னம்மா" என்று கேள்வி கேட்க—

அதற்கு பதில் சொல்ல தைரியமில்லாதவளாயிருந்தாள் பிரியா.

ஆபத்தான காலத்தில் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் மிகப்பெரிய உதவி செய்தான் என்று கேட்டவுடன் பிரியாவிற்கு விக்னேஷ்வரன் மேல் அப்படி ஒன்றும் பாசம் பொங்கி எழுந்து ஓடவில்லை.

மாறாக அவன்மேல் வெறுப்புதான் வளர்ந்தது. எல்லாம் வெளிவேஷம். பெண்ணை வளைத்துப்போட செய்கிற சூழ்ச்சி... நாடகம் என்று அசட்டை செய்தாள்.

காதல் என்று சொல்லி தன் மனசை கலைத்து, நிர்மூலமாக்கி இருக்கும் அவனை மன்னிக்கத் தயாராகயில்லை, பிரியா.

அம்மா அப்பாவின் அன்பை பெற்றவனிடம் தான் பட்டும்படாமலும் ஒதுங்கியிருப்பதே நலம் என்ற முடிவோடு அவன் இருந்த பக்கம் தலைவைத்துக் கூட படுக்காமல் ஒதுங்கினாள், பிரியா.

## 6

**அ**ன்று தன்னுடைய தோழிக்கு திருமணம் என்று பிரியா காலையிலேயே கிளம்பத் தயாரானாள்.

"ஏன் பிரியா... உன்னோட பிரண்ட் திவ்யாவுக்கு வேற கல்யாண மண்டபமே கிடைக்கவில்லையா... ஊருக்கு ஒதுக்குபுறமா இருக்கே... நீ எப்படி போவே அப்பாவை லீவ் போட சொல்லி உன்னை காரில் கூட்டிக்கிட்டுப் போக சொல்லட்டுமா?" என்று லெட்சுமி, பட்டுச் சேலையில் தங்க விக்ரகம் போல் தோன்றிய மகளை பெருமை பொங்க பார்த்துக்கொண்டு கேட்க—

"ஆட்டோ பிடிச்சுட்டு போறேன்ம்மா... அப்பாவை எதற்கு சின்ன விஷயத்துக்கு எல்லாம் டிஸ்டர்ப் பண்றீங்க" என்றபடி போட்டிருந்த பாசிபயறு நிற பட்டுச்சேலைக்கு மேட்சாக பச்சைக்கல் பதித்த மெல்லிசான மாலையை அணிந்துகொண்டாள்.

"அம்மா ரொம்ப கிராண்டா இருக்கா" என்று கண்ணாடியில் தன்னுடைய உருவத்தை பார்த்துக்கொண்டே கேட்டாள், பிரியா.

சேலை சரிகையில் பளபளத்தது. அளவான அலங்காரத்தில் முகம்

பளிச்சிட்டது. நீண்ட கூந்தலை தளர தளர பின்னியிருந்தாள். கைகளில் இரண்டு தங்க வளையலுடன் பச்சை நிற கண்ணாடி வளையல்களை அணிந்திருந்தாள். பச்சைக்கல் ஜிமிக்கி அவள் தலையசைக்கும் போதெல்லாம் கன்னத்தோடு கொஞ்சி கொஞ்சி இரகசியம் பேசின.

சாதாரணமாகவே பிரியா சேலை கட்டமாட்டாள். முழு நேரமும் சுரிதார்தான். என்றாவது அம்மா இஷ்டப்பட்டால், சிநேகிதிகள் வற்புறுத்தினால்தான் சேலை உடுத்தலாமா? என்று யோசிப்பாள்.

சேலையில் தான் பிறருடைய கவனத்தை கவர்கிறோம் என்று உணர்ந்து பெரும்பாலும் சேலை கட்டுவதை தவிர்த்தாள், பிரியா.

இன்றும் சேலை கட்டியது. அம்மாவின் வற்புறுத்தலால்தான்.

“கிராண்ட்டா ஒன்றும் இல்லை பிரியா... பூ வாங்கி வைச்சேன் எடுத்துட்டு வர்றேன் தலையில் வைச்சுக்கோ” என்றபடி நகர்ந்தாள் லெட்சுமி.

ஒன்பது மணி கல்யாணத்திற்கு வீட்டில் இருந்து ஏழே முக்காலுக்கு கிளம்பினாள்.

வீட்டு வாசலிலேயே ஆட்டோ கிடைத்துவிட்டதால் கஷ்டம் ஒன்றும் தெரியவில்லை.

கல்யாண வீட்டில் பிரியாவின் சிநேகிதிகள் நிறைய பேர் வந்திருந்தார்கள்.

பிரியாவை பார்த்ததும் எல்லோரும் ஆவலுடன் தங்கள் அருகில் இழுத்துக்கொண்டு பேசினார்கள்.

“டெல்லிக்கு போனப்பிறகு ஒரு லெட்டர் போட்டியா எங்களுக்கு. டெல்லி போனவுடன் பி.எஸ்.சி. பிரெண்ட்ஸ் எல்லாரையும் உடனே மறந்தாச்சு அப்படித்தானே பிரியா” என்று அனு கேட்க—

“உன்கிட்டேயிருந்து பதிலையே காணுமேன்னு நான் பயந்துட்டேன் தெரியுமா? எங்கே நம்ம அழகு ராணியை யாராவது கடத்திட்டாங்களோன்னு நினைச்சேன்” என்று சுனந்தா சொல்ல.

“ப்ச்... கிண்டலடிக்காதே... லெட்டர் போட்டாதான் உங்க நினைப்பு எனக்கு இருக்குன்னு அர்த்தமா? உங்களை பத்திதான் நான் எப்பவும் நினைச்சுகிட்டு இருப்பேன்” என்று பிரியா பதில் சொன்னாள்.

எங்கே டெல்லி போனதிலிருந்து ஒருவனைப் பற்றிய நினைவுகள் தான் அவளை கொன்றுகொண்டிருந்ததே இதில் தோழியைப் பற்றி நினைப்புக்கு இடம் எங்கே இருந்தது.

“சரி சரி மன்னிச்சோம்” என்று அகல்யா கண் அடித்தபடி சிரித்தாள்.

“நம்ம திவ்யாவோடது லவ் மேரேஜ் தெரியுமா பிரியா... இவள் நாம படிக்கும்போதே சின்ன சின்ன லீவுக்கெல்லாம் பாட்டி தாத்தா பார்க்க போறேன்னு மதுரைக்கு ஓடிடுவாயில்லை. அது பாட்டி தாத்தா இல்லை... பக்கத்து வீட்டில் இருக்கும் பார்த்தசாரதியை பார்க்கத்தான்

“ஆனாலும் அவள் ரொம்ப கிரேட் பிரியா... நாலு வருடம் காதலிச்சு வீட்டில் உள்ளவங்க சம்மதத்தோடு கல்யாணம் செய்யறாப் பாரு... ம்ம்ம்... எல்லா அம்மா அப்பாவும் இப்படி இருந்துட முடியுமா?” என்று பெருமூச்செறிந்தாள்.

“அதுக்கு நீ ஏண்டி பெருமூச்சு விடறே... நீயும் காதல் வலையில் விழுந்திட்டியா... அப்பா அம்மா வேண்டாங்கறாங்களா, சொல்லு, நான் வேணா உனக்காக அப்பா அம்மாகிட்டே பேசி பார்க்கட்டுமா” என்று ரொம்ப கரிசனம் போல் அனுவை பார்த்து ஜனனி கேட்டு சிரிக்க—

பிறகு ஆளாளுக்கு ஏதேதோ புதிது புதிதாக பேச, சிரிப்பும் கும்மாளமுமாக பிரியாவுக்கு நேரம் போனதே தெரியவில்லை. இடையில் கல்யாண பெண்ணிடம் கொஞ்சம் வம்புகள் செய்தார்கள். பிரியாவை பார்த்தவுடன் திவ்யாவிற்கு தலைகால் புரியவில்லை. “நான் சொல்லுவேனில்லை... பிரியா... அவள்தான் இது” என்று பக்கத்தில் நின்ற கணவனிடம் இரண்டுமுறை சொல்லியிருப்பாள். பிரியாவை தன் தோழி என்று சொல்லிக்கொள்ள அவளுக்கு பெருமையாக இருந்தது.

திவ்யாவின் காதல் விஷயம் முன்பு இருந்தே பிரியாவிற்கு தெரியும். பழகும் காலத்தில் ஒன்றுவிடாமல் பிரியாவிடம் சொல்லிவிடுவாள் திவ்யா.

பின் தோழியர் யாவரும் மேடையில் இருந்து இறங்குகையில், “பிரியா இதுதான் நம்ம திவ்யாவோட ஹஸ்பெண்ட்... அந்த பார்த்தசாரதியோட பாஸ் என்று ஒயிட் அன்ட் ஒயிட்டில் வெகு வசீகரமாக கொஞ்சம்கூட அலட்டல் இல்லாத தோரணையில் விக்னேஷ்வரன் மேடைபுறமாக பெண் மாப்பிள்ளையை வாழ்த்துவதற்காக செல்வதைக் கண்டதும் ‘சீ’ என்றிருந்தது பிரியாவிற்கு.

பெண்களை பொழுதுபோக்கு அம்சமாக நினைப்பவனெல்லாம் தன் தோழிக்கு வாழ்த்துச் சொல்லப் போகிறானே என்று கடுப்பாக இருந்தது.

அவன் கண்ணில் படாதவாறு பிரியா சிநேகிதிகள் கூட்டத்தில் தன்னை மறைத்துக்கொண்டாள்.

நமக்கு காய்ச்சல் வருகிற நேரங்களில் எல்லாம் தண்ணீர்த் தாகம் அதிகமாக எடுக்கும். எவ்வளவு தண்ணீர் குடித்தாலும் தாகம் அடங்காது. எனவே அந்த மாதிரி நேரங்களில் சாத்துக்குடி, ஆரஞ்சு, எலுமிச்சை சாறு, இளநீர் அருந்தினால் தாகம் அடங்கும். உதடுகள் காய்ந்து வறண்டு இருந்தால் எலுமிச்சை சாறில் சிறிது கிளிசரீன் கலந்து உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் ஈரப்பதத்துடன் இருக்கும்.

> **தே**நீர் தயாரித்து, பில்டரில் எஞ்சியுள்ள தூளுடன் எலுமிச்சைச் சாறு கலந்து, தலைக்குத் தேய்த்துக் குளித்தால் தலைமுடி மிருதுவாகவும் பளபளப்பாகவும் இருக்கும்.

பார்த்தசாரதி விக்னேஷ்வரனை கண்டவுடன் பந்தலில் இருந்து இறங் அவனை கைபிடித்து கூட்டிவந் தன்னுடைய இளம் மனைவிக்கு பெரு யுடன் அறிமுகப்படுத்தினான்.

இந்த கல்யாணமே விக்னேஷ்வரனி உதவியால்தானே அட்டகாசமாக நட கிறது. அந்த நன்றி பார்த்தசாரதிக் இல்லாமலா போகும்.

தாய் தந்தையற்ற அனாதைக்கு எ மகளை கொடுக்கமாட்டேன். காதலாவது கத்திரிக்காயாவது என் பார்த்தசாரதிக்கு திவ்யாவை மணம் புரிந்து தர மறுத்துவிட்டார்.

திவ்யாவின் மேல் உயிரையே வைத்திருந்த பார்த்தசாரதி அவ எனக்கு இல்லாவிட்டால் நானே இல்லை என்று எழுதிவிட் தூக்கமாத்திரையின் உதவியுடன் தற்கொலைக்கு தயாரானான்.

விக்னேஷ்வரனுக்கு எப்பொழுதும் பார்த்தசாரதியின் மேல் த பிரியம் உண்டு. கடைநிலை ஊழியனாக அப்பாவிடம் வேலைக் அமர்ந்தவன், அப்பாவின் பிரியம் பெற்று, சொந்த முயற்சியில் படித் தங்கள் அலுவலகத்திலேயே பெரிய பொறுப்புக்கு உயர்ந்தவனிட தனியான கவனிப்பும் இருந்தது.

பார்த்தசாரதியின் தற்கொலை முயற்சியை உணர்ந் அதிர்ச்சியடைந்த விக்னேஷ்வரன், அவனிடம் காரணத்தை கேட் அறிந்தபோது, உள்ளூர தன்னுடைய நிலையையும் எண்ணி சிரித் கொண்டான்.

பிறகு திவ்யாவின் தந்தையிடம் பார்த்தசாரதி சார்பாக பே அவர்களின் திருமணத்திற்கு சம்மதம் வாங்கினான். பொதுவாகவே விக்னேஷ்வரன் பேச்சில், ஒரு கம்பீரமும், நாசுக்கும் ஆளை அடித்து போட்டுவிடும் நயமும் இருக்கும்.

திவ்யாவின் அப்பா மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன கல்யாணத்திற்கான சம்மதத்தை தெரிவித்தார்.

இது எல்லாம் நடந்து ஒரு மூன்று மாதம் இருக்கும்.

“பிரியா என்ன இப்படி ஒளிஞ்சு நின்னு அவனையே பார்த்துகிட் இருக்கே” என்று அனு பிரியாவின் தோளை மெல்லத் தட்டினாள்.

அப்போதுதான் விக்னேஷ்வரனை தான் இமைக்காமல் பார்ப்ப உணர்ந்து தன்னையே கடிந்துக்கொண்டாள்.

“இல்லே அனு... எங்கயோ பார்த்தமாதிரி ஞாபகம் அந்த முகம் ங்கேன்னு யோசிச்சுகிட்டு இருக்கேன்” என்று மென்று விழுங்கினா பிரியா.

சிறிதுநேரத்திற்கெல்லாம்

தன் தோழிகளுடன் இயல்பாக கூட பேச முடியாமல் அவனுடைய வரவு, தன்னை சங்கடபடுத்துகிறது என்று அறிந்து கோபமானாள்.

மேலும் அங்கேயே இருக்கப் பிரியபடாமல் கல்யாண சாப்பாடு முடிந்தவுடன் கிளம்பத் தயாரானாள்.

“அப்ப சாயங்காலம் இருக்கமாட்டியா பிரியா...” என்று எல்லோரும் ஒரே குரலில் ஏக்கமாக கேட்டார்கள்.

“இல்லை... ரிசப்சன் முடிச்சு போகணும்னா இருட்டாயிடும். உங்களுக்குன்னா பரவாயில்லை... வீடு கிட்ட... என்னால தனியா போகமுடியாது” என்று அவர்களிடம் விளக்கமாக சொல்லிவிட்டு மண்டபத்தை விட்டு வெளியே வந்தாள் பிரியா.

விக்னேஷ்வரனுக்கு முன், வீட்டிற்கு சென்றுவிட வேண்டும் என்ற துடிப்புடன், சாலையில் கால் வைத்தவளுக்கு நெஞ்சு திடுக்கென்றது. சென்னையைவிட்டு வெகுவாக தள்ளியிருந்த அந்த சாலையில் ஜன நடமாட்டத்தையே காணோம். சாலை வெறிச்சென்று கிடந்தது. ஆட்டோ இருக்கும் சுவடே தெரியவில்லை. வானத்தில் திடீரென்று மேக கூட்டங்கள் கரும் யானைக் கூட்டத்தைப் போல தபதபவென்று வந்துகொண்டிருந்தது.

மீண்டும் வானத்தை பார்த்தாள் பிரியா. மழை வருவதற்குரிய எல்லா அறிகுறிகளும் தெரிந்தன.

சாலையின் இருபுறங்களும் நன்கு அடர்ந்த மரங்கள் வளர்ந்திருந்தன. சற்று தள்ளி ஒருபுறமாக பஸ் ஸ்டாப்பையும் நிழற்குடையையும் கண்டவள், சரி ஆட்டோ வரவில்லை. என்றால் போகிறது. இரண்டு பஸ் மாறி போய்விடலாம் என்று எண்ணி அவசரமாக காலை எட்டி வைத்து பஸ் ஸ்டாப்பை அடைந்தாள்.

பஸ் வரும்பாட்டைக் காணோம். அவ்வப்போது சென்ற இரண்டு சக்கர வாகனங்கள், ஏதோ மோகினி பிசாசை பார்ப்பது போல் ‘ஆ’ என்று பார்த்துக்கொண்டே சென்றார்கள்.

இருந்தார்போல் மழை சடசடவென்று கொட்டியது. காற்றும் வேகமாக வீசியது. அவ்வளவு நேரமும் பளிச்சிட்டு இருந்த அந்த சாலை ஒரே இருட்டாக காட்சியளித்தது. பிரியாவிற்கு உடல் குளிரெடுத்தது.

அதற்குள் மழைக்கு ஒதுங்குவது போல் எங்கிருந்து இரண்டு கயவாலிகள், பிரியா நின்ற நிழற்குடைக்குள் வந்து சேர்ந்தார்கள்.

இருட்டு, மழை, தனிமை, எல்லாம் சேர்ந்து பிரியாவை பயமுறுத்தியது. அந்த காடைப் பசங்கள் பார்வையாலேயே அவளை துகில் உரிப்பதை உணர்ந்து என்ன செய்வதென்று அறியாமல் திகைத்தாள்.

அம்மா சொல்லியது போல் அப்பாவுடன் வந்திருக்கலாமோ என்றாள். அவள் எண்ணத் தொடங்கையிலேயே மழை மேலும் வேகமாக கொட்டியது. காற்றும் பலமாக வீசினதால் நிழற்குடைக்குள்ளும் மழை அடித்தது.

## 2000

வஞ்சனைகளை உடைத்து
நட்புக்கு சுதந்திரம் கொடுப்போம்
இந்திய மண்ணின் தூய்மையை
கெடுக்கும் அந்நிய கலாச்சாரங்களை
அடிமைப்படுத்துவோம்!

இரண்டாயிரம் எனும் சூரியனில்
இந்திய மண்ணின்
அடிமைத்தனங்கள்
பனித்துளியாய் மறையட்டும்
மகிழ்ச்சி மண்ணில்
வண்ணத்துப் பூச்சியாய்
சிறகடித்துப் பறக்கட்டும்



அன்பு எனும் மலர்கள்
மலர்ந்து நம் மண்ணை
மணம்வீசச் செய்யட்டும்
வேற்றுமை எனும் தீ
நம் மண்ணில் பரவாமல்
நாம் அன்பு எனும்
மழையால் அணைப்போம்
சாதி மத பேய்களை
விரட்டியடிக்கும் போர்
வீரர்களாய் மாறுவோம்
சமத்துவம் நிறைந்த அழகிய
"இந்திய" திருநாட்டை
புதிய ஆண்டில் உருவாக்குவோம்!

—எஸ். ஜோயல், சென்னை.

முழுசாக சொட்டச் சொட்ட நனைந்துவிட்டாள் பிரியா. பட்டுச்சேலையை இழுத்து போர்த்திக்கொண்டவளின் பல் குளிரினால் தாளம் போடத் தொடங்கியது.

மீண்டும் மண்டபத்திற்கு போகலாம் என்றால் அதற்கும் வழியில்லை. நடந்து சென்றால் காற்று, அவளை தூக்கிக் கொண்டு போய்விடும் போல இருந்தது.

இருபது நிமிடம் அந்த பஸ் ஸ்டாண்டில் நின்றது இருபது யுகம் நின்றது போல் இருந்தது பிரியாவிற்கு.

"குட்டி... செம குட்டி இல்லைடா... சீண்டிப் பார்க்கலாமா?" என்று கயவாலிகளில் ஒருவன் இவள் காதுக்கு எட்டும் விதத்தில் கத்தி பேச பல்லை கிடுகிடுத்துக்கொண்டிருந்த குளிர் போய்விட்டது. பயத்தினால் உடல் நடுங்கியது. கண்களை மூடி முருகா... முருகா... என்னை பத்திரமா வீட்டுக்கு கொண்டுபோய் சேர்த்துடு என்று முருகனை மனம் உருக முணுமுணுத்தாள்.

கயவாலிகள், ஆதரவற்ற தனித்து நின்ற பிரியாவின் அருகில் தப்பு எண்ணத்துடன் நெருங்குவதற்கும், மழையில் வழுக்கிக்கொண்டு வந்த பியூகாட் சர் என்று சத்தத்துடன் பஸ் நிறுத்தத்தில் வந்து நின்றதற்கும் சரியாக இருந்தது.

காரின் உள்ளிருந்தபடி கதவை திறந்துவிட்டவன் விக்னேஷ்வரன்.




# கோலப் போட்டி

ஒவ்வொரு கோலத்துக்கும் ரூ. 100 பரிசு! அனுப்பவேண்டிய முகவரி: கோலப்போட்டி, "ராணி முத்து", சென்னை—600 007.

**பரிசுபெற்ற கோலம்:**

## நட்சத்திரக் கோலம்



**15** முதல் 8 புள்ளி வரை (ஊடுபுள்ளி).

—திருமதி. பிருந்தா ரமணி, மதுரை.

தீப கோலங்கள்



17 புள்ளி 9 வரை (ஊடுபுள்ளிகள்) கடை...
2 புள்ளி, 3 புள்ளி– 2 புள்ளி, 1 புள்ளி என முடிக்...

புத்தாண்டு கோலம்



12 புள்ளி 2 வரிசை 2–ல் நிறுத்தவும் (நேர்புள்ளி).



"பிரியா ஏறிக்கொள்" என்று வேகமாக கூறினான்.

தன்னை யாரோ அழைப்பதைக் கேட்டு இறுக மூடியிருந்த கண்களை திறந்த பிரியா, விக்னேஷ்வரனைப் பார்த்ததும் வாய் கொண்டு சொல்லமுடியாத நிம்மதியினை அடைந்தாள்.

ஆனாலும் அவனுடைய அழைப்பை ஏற்க முடியவில்லை: மழையில் இன்னும் நன்றாக நனைந்துகொண்டு, அவனை கவனியாதவள் போல தலையை திருப்பி பஸ் வருகின்றதா என்று பார்ப்பதாக பாவனைச் செய்தாள்.

ஆனால் உள்ளூர அவன் கோபப்பட்டு தன்னை தனியாக இந்த கயவர்களிடம் விட்டுவிட்டு சென்றுவிடுவானோ என்ற பதற்றத்தில் நெஞ்சு படபடவென்று வேகமாக அடித்தது. ஏனோ அவனுடன் செல்ல பாழாய்போன அவளுடைய தன்மானம் இடம் கொடுக்கவில்லை.

"ஏதோ பெரிய பார்ட்டி" என்று முணுமுணுத்தபடி அந்த கயவர்கள் கொஞ்சம் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார்கள்.

பிரியா மறுத்ததும் கோபத்தின் உச்சியை அடைந்தான் விக்னேஷ்வரன்.

அவள் மழையில் முழுக்க நனைந்து கசங்கி பயந்து நின்ற கோலமும், பக்கத்தில் துச்சாதனப் பார்வையுடன் நெருங்கிய கயவர்களையும் கண்டதும் அவன் நெஞ்சு பதைபதைத்தது.

'அறிவு கெட்டவள்... இவளும் இவளோட கோபமும் எந்த நேரத்தில் அதை வெளிபடுத்துகிறது என்கிற விவஸ்தை வேண்டாம்' என்று காது மடல்கள்கூட சிவந்துபோகும் அளவுக்கு கோபப்பட்டவன் காரின் கதவை திறந்து மழைக்குள் வேகமாக இறங்கினான்.

பிரியாவிடம் பேசிப் பயன் இல்லை என்பது போல் சட்டென்று அவளின் இடுப்பில் ஒரு கை வைத்து கால்புறமாக ஒரு கை கொடுத்து அவளை சுலபமாக தூக்கி வந்து, காரில் அமர்த்தினான்.

இவனின் திடீர் செய்கையை சற்றும் எதிர்பார்க்கவில்லை பிரியா. அவனிடம் இருந்து திமிறிவிடுபடுவதற்குள்ள தைரியமும் அந்த சமயத்தில் அவளிடம் இல்லை.


கை தொட்டு தூக்கும் அளவுக்கு எவ்வளவு தைரியம் என்று உள்ளூர ஆத்திரப்பட்டாலும் அவனிடம் வெளிக்காட்டிக்கொள்ள இயலவில்லை.

காரில் அமர்ந்தவர்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை.

குளிரில் பிரியா நடுங்குவதை கண்டதும் கார் சீட்டுக்கு பின்னால் இருந்த தன்னுடைய லெதர் ஜாக்கெட்டை அவள்மேல் எடுத்துப்

# வேடிக்கை மனிதர்!

தமிழ்நாட்டின் புகழ்பெற்ற தொழிலதிபர்– விஞ்ஞானியாக திகழ்ந்த ஜி.டி. நாயுடு சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். அவரது நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டு அவர் கோப்புகளை அடுக்கியாளும் முறையேயாகும். ஏறத்தாழ ஒரு இலட்சம் கோப்புகள்



ஜி.டி. நாயுடு

அவரது பார்வையில் இருந்தன. அந்த கோப்புகளின் சில பெயர்கள் மிகவும் விநோதமானவை.

நட்பு, போலீஸ், பாராட்டு, மரியாதை, முகஸ்துதி, உண்மை, எருமைகளை எங்ஙனம் வழிக்குக் கொண்டுவருவது, எனது தவறுகள், எனது முகமது-பின்-துக்ளக் என்று

---

போட்டான்.

ஒன்றும் பேசாமல் ஜாக்கெட்டை எடுத்து போத்திக்கொண்டவ பார்வையை வெளிப்புற காட்சியி வலுக்கட்டாயமாக பதித்தா ஆனால் நினைவெல்லாம் எங்கே இருந்தது.

வீடு வந்து சேரும் வரை விரோ களைப் போன்று முகத்தை திருப்பி கொண்டிருந்தார்கள்.

கார் சத்தம் கேட்டவுட வாசலுக்கு வந்து எட்டிப்பார்த் லெட்சுமி, சொட்டச் சொட் நனைந்து விக்னேஷ்வரனும், பிரிய வும் இறங்குவதைக் கண்டு வா விட்டு சிரித்தார்.

அம்மாவின் சிரிப்பின் காரணத்தை உணராமல் பிரியா முறைக்க,

"இரண்டு பேரும் நீச்சல்குளத்து குப் போனீங்களா? அதுக்குன் தனி டிரஸ் இருக்கு. பட்டுச்சேல கட்டிக்கிட்டு, பாண்ட் சர்ட்டோ நீச்சலடிக்க போகக்கூடாது" என் சொல்லி மீண்டும் சிரித்தார்.

ஏதோ தோன்ற இருவரும் தங்கள் சுற்றி பார்த்தார்கள். ஒரு சொட் மழை அங்கே பெய்திருக்கவில்லை சுள்ளென்று வெயில் காய்ந் கொண்டிருந்தது.

பின்னே, நல்ல வெயில் அடிக் யில் நனைந்துபோய் வருபவர்கள் கண்டால் சிரிப்பு வராதா என்ன?

இவரின் சிரிப்புக்குகூட சேர் சிரிக்காமல் 'உர்' என்று வீட் குள்ளே நுழையும் இருவரை அதிசயமாக பார்த்தாள் லெட்சுமி

---

ன்று கேட்க மறந்தே போனார்.

அன்று இரவு கொஞ்சம் உணவு சாப்பிட்டவள், மழையில் னைந்திருக்கிறோமே ஜுரம் வந்துவிடுமோ என்ற பயத்தில் குரோசின் ாத்திரை ஒன்று போட்டுக்கொண்டு தூங்கப் போய்விட்டாள்.

தூக்கத்தில் கடுமையான கனவு வந்து பயமுறுத்தியது. முகத்தை றுப்பு துணியால் மூடியபடி முரடர் கூட்டம் அவளிடம் மிரட்டுவது பாலவும் அவளை கடத்திக்கொண்டு பாழடைந்த இருட்டு பங்களா ில் அடைப்பது போலவும் அவர்களிடம் இருந்து அவள் தப்பிக்க யல்வது போலவும், முடியாமல் தன்னையே மாய்த்துக்கொள்ள னைத்த சமயம் ஆபத்தாண்டவன் போல் விக்னேஷ்வரன் வந்து வளை மீட்பது போன்றும்... சடக்கென்று எழுந்து உட்கார்ந்தாள் ிரியா.

உடம்பெல்லாம் வேர்த்துவிட்டிருந்தது. கண்டது கனவு என்று ரிந்ததும், அவள் உடலில் இனம்புரியாத ஓர் உணர்ச்சி மெல்லிய ல் இழை போன்ற இதத்துடன் பாய்ந்தது. அதன் அர்த்தம் புரிந்ததும் ன் மீதே வெறுப்பு உண்டாயிற்று.

அதன்பிறகு அவள் தூங்கவில்லை.

காலையில் வெந்நீரில் குளித்துவிட்டு வெள்ளை நிறச் சுடிதாரில் பன் சாப்பிட டைனிங் ஹாலுக்குள் நுழைந்தாள்.

"மழை பெய்ததுன்னா மண்டபத்திலேயே மழை விடறவரைக்கும் ருக்கவேண்டியதுதானே... அப்படி என்ன அவசரம் இரண்டு ருக்கும்? மழையிலே நனைந்துகிட்டு கார்லே ஏறினாங்களாம். கேட்க ரிப்பா இருக்கு. இப்ப அவதிபடறது யாரு" என்று புலம்பியபடி க்னேஷ்வரன் தட்டில் பூரியை எடுத்து வைத்தார், லெட்சுமி.

இரண்டு முறை தும்மியவன் பின் தொண்டையை கனைத்துக் காண்டு, பூரியை பிய்த்து சாப்பிடத் தொடங்கினான்.

பிரியா ஒன்றையும் கவனியாதவள் போல, அவனுக்கு எதிரில் ட்கார்ந்து கடமையே கண்ணாக தன்னுடைய இரண்டு பூரி காட்டாவையும், ஒரு தம்ளர் பாலையும் குடித்துவிட்டு நகர்ந்தாள்.

அவன் பார்வை தன்மேல் படர்ந்ததை உணர்ந்து அலட்சியமாக துக்கினாள்.

போகிற போக்கில் நானா உன்னை மழையில் நனையச் சொன்னேன் ன்கிறார் போல விக்னேஷ்வரனை ஒரு பார்வையும் பார்த்துவிட்டு பானாள். கூடவே அவள் குளிரில் நடுங்குவதைக் கண்டு போட்டுக் காள்ள லெதர் ஜாக்கெட் கொடுத்தது ஞாபகத்தில் வந்து மனசை ன்னவோ செய்தது.

செய்வது போல காலிங்பெல்

வந்திருக்கா பாரு...
அம்மாவிடம் அறிமுகப்படுத்தினாள்.

"வாம்மா, உன்னைப் பத்தி நிறைய சொல்லியிருக்கா பிரி... இருந்து மத்தியானம் சாப்பிட்டுட்டுதான் போகணும்" எ... சிரித்தபடி சொன்னார் லெட்சுமி.

"விக்கி, நம்ம பிரியாவோட பிரண்டாம். அவளைக் கண்ட... இவளோட குதூகலத்தை பார்த்தியா" என்று விக்னேஷ்வரனி... பேசினார்.

# கஞ்சா அரக்கன் !

**பு**கைபிடிப்பது உடல்நலத்துக்கு கேடு என்ற காலம் மலையே... விட்டது என்றே சொல்ல வேண்டும். ஆண்களுக்கு நிகராக பெண்களு... புகைக்கத் தொடங்கிவிட்டார்கள். புகை என்றால் சிகரெட் புகை அல்... கஞ்சா புகை. ஆமாம், இப்போதைய பெண்கள் கஞ்சாவு... அடிமையாகி வருகி...கள். கஞ்சா விற்... சட்டப்படி குற்... என்றாலும் சில கஞ்... விற்பன்னர்கள் சில பெ... புள்ளிகளின் துணையே... ஜாம் ஜாம் என்று கஞ்... விற்று வருகிறார்கள்.



முன்பெல்ல... சிகரெட்டில் இருக்... புகையிலைத் தூ... எடுத்துவிட்டு அ... கஞ்சா தூளை அடை... புகைப்பார்கள். ஆன... இன்று நிலைமை அப்படியில்லை. கஞ்சா சிகரெட் என்று சில இடங்க... விற்கிறார்கள். குறிப்பாக கல்லூரி மாணவர்கள்தான் இந்த பழக்கத்துக்கு அடிமையாகி வருகிறார்கள். கூடவே இளைஞிக... எண்ணிக்கையும் அதிகமாகி வருகின்றன.

மேற்கூறிய சமாச்சாரம் நடப்பது வெளிநாட்டில் எ... நினைத்துவிடாதீர்கள். சாட்சாத் நம்முடைய தங்கத் தமிழ்நாட்டில்... இந்த அலங்கோலம் அரங்கேறிக்கொண்டிருக்கிறது. கஞ்சா அரக்க... வளரவிட்டால் இளைஞர் சமுதாயம் குட்டிச்சுவராகிப்போவது உ... எனவே சம்பந்தப்பட்டவர்கள் கஞ்சா அரக்கனை வேரோடு ... எறிவது நல்லது.

...இழுத்துக்கொண்டு போய் உட்கார வைத்தாள்.

"அப்புறம் கீத்து வாட் இஸ் ஸ்பெஷல்?" என்று பேன் சுவிட்சை போட்டுக்கொண்டே கேட்ட பிரியா அப்போதுதான் கீதாவின் முக வாட்டத்தைக் கவனித்தாள்.

"கீத்து என்ன விஷயம், என்ன ஆச்சு, ஏன் ஒரு மாதிரி இருக்க?" என்று குரலில் கவலையுடன் பிரியா கேட்க–

பொலபொலவென்று அழுதுவிட்டாள் கீதா.

விஷயம் இதுதான்.

கீதாவை கல்யாணம் செய்வதாக வாக்களித்திருந்த அவள் காதலன் கவுசிக் அவளிடம் கோபித்துக்கொண்டு சென்றுவிட்டானாம்.

"அப்பா என்னிடம் கேட்காமல் என்னுடைய அத்தை மகனுக்கு என்னை கட்டிக்கொடுப்பதாக பேசியிருக்கிறார்கள். என் அத்தை மகனும் கவுசிக்கும் சிநேகிதர்கள் போல. அவன் போய் கவுசிக்கிடம் நான் கட்டிக்கப்போற அத்தை பொண்ணு அப்படின்னு என்னோட போட்டோவை காட்டியிருக்கான். அவ்வளவுதான். ஆபீஸ் போன் போட்டு பேசினால் என் குரல் கேட்டு சட்டென்று வைத்துவிடுகிறான்" என்று சொல்லிவிட்டு மீண்டும் கண்ணை கசக்கினாள் கீதா.

"சரி, அப்பாகிட்டே அத்தை மகனை கல்யாணம் செய்துக்க மாட்டேன்னு தைரியமா எடுத்து சொன்னியா? இல்லாட்டி பயந்து வாயை மூடிகிட்டியா?" என்று பிரியா விசாரிக்க...

"அப்பாகிட்டே சொன்னேன். அப்பா புரிஞ்சுகிட்டு சரி, அந்த பையனை கூட்டிட்டு வா. எனக்கு பிடிச்சிருந்தாதான் சரி சொல்லுவேன்னார்."

"அப்ப என்ன பிராப்ளம்? கவுசிக்கை நேரா கூட்டிட்டுபோய் அப்பா முன் நிப்பாட்ட வேண்டியதுதானே?"

"அதான் சொன்னேனே பிரியா, போன் போட்டா நான்னு தெரிஞ்சா பேசமாட்டேங்கறான். நேத்து நேரா ஆபீசுக்குப் போய் நின்னுட்டேன். என்னைப் பார்த்தவுடன், என்ன, ஏதுன்னுகூட கேட்காம ஒரு முறை முறைச்சிட்டு சட்டென்று பைக்கை ஸ்டார்ட் பண்ணி போயிட்டான். இதுக்குமேலேயும் என்னால் என்ன செய்ய முடியும் பிரியா?" என்று மூக்கை உறிஞ்சினாள் கீதா.

"சரி, மேலே என்ன பண்ணப்போறே?"

"தெரியவில்லை பிரியா. ஒன்றுமே புரியவில்லை. தலைசுத்தறாப்பல இருக்கு. பத்தாக்குறைக்கு அப்பா வேற ஏனம்மா அந்த பையனை கூட்டிட்டு வரேன்னியே என்ன ஆச்சுன்னு கேட்கறார். கிணத்துல போய் குதிச்சி உயிரை விட்டுறலாம் போல இருக்கு" என்று விரக்தியுடன் கீதா பேச

"பைத்தியம் மாதிரி பேசாதே கீத்து. கவுசிக் ஆபீஸ் அட்ரஸ் கொடு.

நான் பேசி பார்க்கறேன்" என்று பிரியா கேட்க, கீதா கண்களை துடைத்துக்கொண்டு ஒரு விசிட்டிங் கார்டை கைப்பையில் இருந்து எடுத்து நீட்டினாள்.

அதன்பிறகுதான் கொஞ்சம் கலகலப்புக்கு தாவினாள் கீதா.

அதன்பிறகுதான் கொஞ்சம் கலகலப்புக்கு தாவினாள் கீதா.

டைனிங் ஹாலில் விக்னேஷ்வரனை கவனித்திருந்த கீதா இப்பொழுது இவளிடம் அதைப்பற்றி கேட்க,

நாக்கை சுழற்றி தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாததுபோல் பாவனை செய்து தோளை குலுக்கினாள்.

மதியம் சாப்பிட வீட்டிற்கு வந்த ஜம்புலிங்கத்திடம் கீதாவை அறிமுகம் செய்து வைத்தாள், பிரியா.

அவர், கீதாவுடைய தகப்பனாரைப்பற்றிய விவரங்களை கேட்க, அவள் தந்த பதிலில்–

"ஓ... அவரா முதல்ல பெப்ஸிலே மார்க்கெட்டிங் கன்சல்டட்டா இருந்தாரில்லை. அப்ப கொஞ்சம் பழக்கம். நான் ரொம்ப கேட்டதா சொல்லும்மா" என்றார்.

அப்படி இப்படி என்று கீதா கிளம்பிச் செல்லும்போது மணி நாலை தாண்டிவிட்டது.

கிளம்பும் முன் "பிரியா உன்னைத்தான் நம்பியிருக்கேன்" என்று இரகசியமாக சொல்லிவிட்டு போனாள்.

"காலையிலேயே நல்லா சளி பிடிச்சிருந்தது விக்கிக்கு. இப்ப மத்தியானம் சாப்பிட கூட வீட்டுக்கு வரவில்லை. வெளியிலே சாப்பிட்டா உடம்பு என்னத்திற்கு ஆகும்" என்று ஜம்புலிங்கத்திடம் லெட்சுமி குறைபட்டுக்கொண்டிருந்தது பிரியாவின் காதிலும் விழுந்தது.

"சார் போஸ்ட்" என்று தபால்காரன் ஒரு வெளிநாட்டு தபால் உறையை கேட்டில் உள்ள பாக்ஸில் வைத்துவிட்டு சென்றான்.

அதைக் கண்டதும் தாமு அண்ணா லெட்டர் வந்திருக்கு என்று பாய்ந்து போய் எடுத்தாள், பிரியா.

அதை பிரித்து படிக்க முகத்தில் மகிழ்ச்சியை காட்டினாள்.

"அப்பா அண்ணன் அடுத்த மாதம் கடைசியிலே சென்னை வர்றதா எழுதியிருக்கான்" என்று சந்தோஷத்துடன் கூற, பெரியவர்கள் முகத்திலும் சந்தோஷ ரேகை பளிச்சென்று ஒட்டிக்கொண்டது.

## 8

அன்று காலையில் கவுசிக்கை பார்க்க கிளம்பிய பிரியா, அம்மாவிடம் எப்படி அனுமதி வாங்குவது என்று யோசித்தாள். விக்னேஷ்வரனிடம் மட்டும்தான் அம்மா இப்படி இலகுவாக



அவளை பழகவிடுகிறார்களே தவிர மற்ற ஆண்களுடன் பேசி பழக அவர் அனுமதித்ததில்லை.

"கவுசிக்கை பார்க்க போகிறேன் என்று உண்மையைச் சொன்னால், உனக்கெதுக்கு அந்த வேலையெல்லாம். இப்படி தனியா ஒரு பொண்ணு யாரோ ஒரு ஆணை சந்தித்து பேசினா ஊரு என்னச் சொல்லும்" என்று அவளை தடுத்துவிடுவார்.

> சமையல் அறையின் ஜன்னல்களுக்கு மஞ்சள் நிறத்தில் கண்ணாடிகள் பொருத்தினால் ஈக்களின் தொந்தரவு இருக்காது

அதனால் காலை டிபன் சாப்பிடும்போது அவரிடம் பொதுவாக சொன்னாள்.

"அம்மா, ஒரு பிரண்டை பார்க்கணும். டிபன் முடிச்சவுடன் போய் ஒரு இரண்டு மணி நேரத்திலே திரும்பி வந்திடறேன்" என்றாள்.

அது என்ன இரண்டு மணி நேரக் கணக்கு என்று அவளுடன் டிபன் சாப்பிட்டு கொண்டிருந்த விக்னேஷ்வரன் யோசித்தாலும்–

"நானும் வெளியே கிளம்பிட்டுதான் இருக்கேன். எங்கே போகணும் உனக்கு. நான் உன்னை டிராப் செய்கிறேன்" என்றான்.

முதலில் இருந்தது போல் பிரியாவால் அவனிடம் முகத்தில் அடித்தாற்போல் பேச முடியவில்லை.

"நானே போயிப்பேன்... உங்க லிப்ட் வேண்டாம்" என்று மெல்ல முணங்கினாள்.

அவளை ஒருமாதிரி வித்தியாசமாக பார்த்துவிட்டு டிபனை முடித்து, எழுந்து போய்விட, பிரியா அவன் வெளியில் கிளம்பிச் சென்றவுடன், அம்மாவிடம் சொல்லிக்கொண்டு கிளம்பினாள்.

அண்ணாசாலையில் இருந்த அந்த பெரிய மாடி கட்டிடத்தின் முன் ஆட்டோவை நிறுத்தி அதில் இறங்கினாள் பிரியா.

மஞ்சள் நிற சுரிதாரில், தோளில் கறுப்பு நிற லெதர் பேக் தொங்க அவள் கட்டிடத்தை நேர்க்கி நடக்க, பலர் அவளை விழிவிரிய பார்த்துவிட்டு பின் தங்கள் வழி நடந்தார்கள்.

மற்றவர்களின் பார்வையை பொருட்படுத்தாமல், கையில் வைத்திருந்த விசிட்டிங்கார்டை இன்னொருமுறை பார்த்தாள், பிரியா. 'கவுசிக், பப்ளிக் ரிலேஷன் ஆபீசர்' என்று அது சொல்ல, பிரியா ரிசப்சனிஸ்ட்டிடம் கார்டை காட்டி விவரம் கேட்டாள்.

பிறகு அந்த பெண் சொன்னதை போல கீழ்தளத்தில் வலது பக்கத்தில் உள்ள கடைசி அறையை நோக்கி நடந்தாள். அப்படி அவள் நடக்கும்போது கவுசிக்கிடம் என்னவெல்லாம் பேசவேண்டும். எப்படி பேசவேண்டும் என்று மனதில் ஒத்திகை பார்த்துக்கொண்டாள், பிரியா.

அறை கதவை தட்டி அனுமதி கிடைத்தவுடன் உள்ளே சென்ற

பிரியாவை கவுசிக் யோசனையுடன் பார்த்தான்.

முன்பின் அறிமுகமில்லாத அழகிய பெண்ணை கண்டதால் என்ன சொல்வது என்று தெரியாமல் எழுந்து நின்று, "அலோ ஐ எம் கவுசிக்" என்று தன்னை அறிமுகப்படுத்தி, பிரியா தன்னை அறிமுகம் செய்துக் கொள்ளும்வரை பொறுமையுடன் காத்திருந்தான்.

"ஐ எம் பிரியா..." என்றவள், அதற்குமேல் எப்படி தொடங்குவது என்று தெரியாமல் லேசாக சிரிக்க,

அவன் உட்காரச் சொன்னான்.

கவுசிக் வார்த்தையில், பார்வையில் கண்ணியத்தைக் கண்ட பிரியா, உள்ளுக்குள் கீதாவை வெகுவாக பாராட்டினாள். உருவத்தில் அவன் தன்னுடைய அண்ணன் தாமோதரனை ஒத்து இருப்பதைக் கண்டு இன்னும் சந்தோசமாக இருந்தது.

"நான் வந்தது கீதா விசயமாக. கீதாவின் தோழி நான்" என்று பிரியா சொன்னதுதான் தாமதம், கவுசிக்கின் முகபாவம் சட்டென்று மாறியது.

"பிளீஸ் அவளைப் பற்றிய பேச்சென்றால் தயவுசெய்து வேண்டாம்" என்று கண்டிப்பான தொனியில் பேசினான்.

"இல்லை மிஸ்டர் கவுசிக்... கீதாவை நீங்கள் தவறாக..." என்று பிரியா பேசியதை முடிக்க கூட விடவில்லை அவன்.

"நோ... நான் யாரையும் தவறாக நினைக்கவில்லை. சந்தோஷமா அவளோட அத்தை மகனையே கட்டிக்கட்டும். எனக்கு எந்த காரணமும் சொல்ல வேண்டாம் என்று போய் சொல்லுங்க. வேணும்னா அவள் கல்யாணத்திற்கே நான் வந்து வாழ்த்து சொல்றேன் போதுமா. ஆனா எதற்கு என்னை ஏமாற்றினாள் என்று நொண்டிச்சாக்கு எதுவும் சொல்ல வேண்டாம். இனிமே அவள் பேச்சு வேண்டாம். நீங்க என்ன சாப்பிடறீங்க ஹாட்டா அல்லது கோல்டா என்று சட்டென்று பேச்சை மாற்றினான்.

"கீதா அவங்க அத்தை..." மறுபடியும் அவளை பேசவிடாமல் அவன் இடைபுகுந்தான்.

"நான்தான் சொல்லிடேன்னில்லை... அவள் பேச்சை எடுக்க வேண்டாம்ன்னு... பிறகு என்ன திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கிட்டு இருக்கீங்க?" என்று சிடுசிடுத்தான், கவுசிக்.

பிரியாவிற்கு அவனைப் பார்த்தவுடன் தோன்றிய நல்லெண்ணங்கள் எல்லாம் காற்றில் பறந்தது.

இது என்ன, ஒரு மனுஷன் மத்தவங்க பேசறதை காது கொடுத்துக் கேட்காம தான் மட்டுமே பேசி முரட்டு பிடிவாதம் பிடிக்கிறானே என்று கோபம் வந்தது.

மேஜையில் வைத்திருந்த தன் பையை படக் என்று கோபத்துடன் எடுத்து தோளில் மாட்டிய பிரியா—

"உங்களை என்னோட அண்ணனா நினைச்சு உங்ககிட்டே கீதாவைப்



பற்றி பேசலாம்னு வந்தேன். ஆனா எனக்கு இந்த மாதிரி, குருட்டு பிடிவாதம், காரணமே கேட்காமல் முரட்டுத்தனம் காட்டுகின்ற அண்ணன் வேண்டாம்பா" என்று சொல்லிவிட்டு முகம் சிவக்க விறுவிறு என்று கதவை நோக்கி நடந்தாள்.

அவள் பேசுவதை கேட்டவுடன், அவள் கோபமாக போவதை கண்டு, "மிஸ் பிரியா..." என்று மெல்ல அழைத்தான். குரலில் மென்மையை கண்டு சற்று திரும்பி அவனை பார்த்தாள், பிரியா.

மருதமர இலையை பசும்பால் விட்டு அரைத்து தினமும் காலை எலுமிச்சை அளவு எடுத்து சாப்பிட்டு வந்தால் பித்தவெடிப்புகள் மறையும். பித்தசூன்மம், வயிற்று வலியும் குணமாகும்.

மேஜையில் கைகளை வைத்து அதில் முகத்தை மூடியிருந்தான்.

இந்த விஷயத்தை முடிக்காமல் போவதில்லை என்ற உறுதியோடு மீண்டும் சேரில் அமர்ந்தாள் பிரியா.

அவனாக பேசட்டும் என்று பிரியா அவனையே பார்த்துக்கொண்டு இருந்தாள்.

சில நிமிடங்களில் தலையை உயர்த்தியவன் கண்கள் கலங்கியிருந்தன.

"கீதா எப்படி இப்படி மாறினாள்?" என்று குரலில் பிசுறுதட்ட கேட்டான், அவன்.


"போச்சுடா" என்பது போல தலையில் கை வைத்தாள் பிரியா.

"உங்களுக்கு எப்படி புரியவைக்கறதுன்னே தெரியவில்லை. கீதா எங்கே மாறினாள். நீங்க இல்லாட்டி கிணத்துல குதிச்சிடுவேன்னு வந்து எங்கிட்டே புலம்பறா" என்று பிரியா சொல்ல—

நெஞ்சில் அடிப்பட்டது போல அவன் முகத்தை சுருக்கி, "என்னது கிணத்தில குதிப்பாளாமா" என்று அதிர்ந்தான்.

அவனுடைய அதிர்ச்சியை காண பிரியாவிற்கு சிரிப்பு வந்தது. அப்பப்பா இந்த காதல் படுத்தும்பாட்டை பாருங்களேன் என்று உள்ளூர எண்ணியவளுக்கு விக்னேஷ்வரனின் நினைப்பும் அதே சமயத்தில் வராமலில்லை. தன்னை அடக்கிக்கொண்டு, கீதா சொன்ன எல்லாவற்றையும் விளக்கமாக சொன்னாள், பிரியா.

"ஓ... அதனாலதான் என்கிட்டே பேசணும்னு துடிச்சாளா? நான் என்னமோ அத்தை மகனை ஏன் கல்யாணம் செய்ய சம்மதித்தேன் தெரியுமா? என்று சொல்லி என்னை சமாதானப்படுத்த வருகிறாளோ என்று எண்ணி ஒதுங்கினேன். ஆனால், பிரியா... கீதாவின் அத்தை மகன் பிரேம் வேறுமாதிரி சொன்னானே... அவளும் அவனும் சின்னவயசிலிருந்தே அவனுக்கு அவள், அவளுக்கு அவன் என்று வளர்ந்தார்களாம். கல்யாணத்தைகூட கீதா ரொம்ப சந்தோஷமாக சரின்னு சொன்னாளாம்" என்று கவலையுடன் சொல்ல,



"மிஸ்டர் கவுசிக் கண்ணால் காண்பதும் பொய்... காதால் கேட்பதும் பொய்... தீர விசாரிப்பதே மெய்... கீதா உங்களை நினைச்சு உருகி உருக்குலைந்து போய்விடுவா போலிருக்கு... முதல்லே அவகிட்டே போய் பேசுங்க" என்று பிரியா சொன்னாள். உபதேசம் பிறருக்கு என்றால் சகட்டுமேனிக்கு அள்ளி தந்த பிரியா, தான் அதை பின்பற்றினோமா என்று கொஞ்சம் கூட யோசிக்கவில்லையே.

அவன் கடகட என்று பேப்பரில் விடுப்பு கடிதம் எழுதினான்.

சரஸ்வதி என்றாலே கையில் வீணை வைத்திருப்பார். ஆனால் வேதாரண்யம் கோவிலில் உள்ள சரஸ்வதிக்கு கையில் வீணை இல்லை. ஏன் என்றால், 'யாழைப் பழித்த மொழியாள்' என்ற அம்பிகையை நோக்கி சரஸ்வதி தவம் இருப்பதால் கையில் வீணை இல்லாமல் இருக்கிறார்.

பிரியா கிளம்ப அவனும் அவளுடன் வந்தான்.

கவுசிக் முகம் நன்கு தெளிவடைந்து இருப்பதைக் காண சந்தோஷமாக இருந்தது. பிரியாவிற்கு.

தற்செயலாக அந்த அலுவலகத்திற்குள் காண்ட்ராக்ட் வேலை விசயமாக வந்த விக்னேஷ்வரன் பிரியாவையும் கூட பேசியபடி வந்த ஆடவனையும் கண்டு திகைத்தான்.

## 9

**சா**யங்காலம் போல பிரியாவைத் தேடி வந்து நின்றாள் கீதா.

அவள் முகம் பளிச்சென்று இருப்பதைக் கண்டு கவுசிக் அவளிடம் பேசிவிட்டான் என்று புரிந்து அவளை பார்த்து கண்சிமிட்டினாள், பிரியா.

பிறகு இருவருமாக ஷாப்பிங் என்று கிளம்பி போனார்கள்.

ஒவ்வொரு கடையாக ஏறி கைநிறைய ஏதேதோ பொருட்களை இருவரும் வாங்கினார்கள். போதாக்குறைக்கு ஆட்டோவில் வரும் வழியில் ஒரு இடத்தில் நல்ல மாதுளைபழம் குவிக்கப்பட்டிருப்பதைக் கண்டு, இருவரும் ஒரு டஜன் கூடையில் வாங்கிக்கொண்டார்கள்.

இவள் ஷாப்பிங் முடித்து வீட்டிற்குள் நுழைகையில் ஹாலில் விக்னேஷ்வரனும், லெட்சுமியும் சுவாரசியமாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

பிரியா தூக்க முடியாமல் பொருட்களை தூக்கிக்கொண்டு வருவதைப் பார்த்து, விக்னேஷ்வரன், லெட்சுமியிடம் பேசியபடி நகர்ந்து பிரியாவின் கையில் இருந்த பையையும், பழக் கூடையையும் வாங்கி

டைனிங்ஹாலுக்கு போய் டேபிளில் வைத்துவிட்டு வந்து மீண்டு
அவரிடம் விவாதித்தான்.

தினம் தினம் நடக்கும் சாதாரண நிகழ்ச்சியை போல் அவ
பிரியாவிற்கு செய்த உதவியை கண்டு லெட்சுமி அவன் பேசுவதைகூ
கேட்காமல் அவனையே இமைக்காமல் பார்த்தார்.

அவன் செய்தது சின்ன உதவிதான். ஆனால் பிரியாவை அ
பெரிதும் பாதித்துவிட்டது.

என்மேல் அளவில்லாத பிரியம் வைத்திருப்பது போல் எதற்கு இந்
நடிப்பு என்று எண்ணிய பிரியாவிற்கு கண்களை கரித்துக்கொண்
வந்தது.

செய்கிறதையும் செய்துவிட்டு அதை சிறிதும் பொருட்படுத்தாம
அம்மாவிடம் போய் சிரத்தையாய் பேசுவதைப் பார் என்று மனசுக்கு
புழுங்கினாள்.

**ம**றுநாள் காலையில் டைனிங் ஹாலுக்கு வந்து டிபன் சாப்பிட
உட்கார்ந்தவள், விக்னேஷ்வரனைக் காணாமல் யோசித்தாள்.

அவள் வீட்டில் இருந்த நாள்வரை காலை அவனும் அவளும்தான்
சேர்ந்து உணவருந்தும் வழக்கம். ஜம்புலிங்கம் தினமும் காலை 7 மணிக்கே
கிளம்பிவிடுவதால் இவர்களுக்கு முன் சாப்பிட்டுவிட்டு
சென்றுவிடுவார்.

இவள் விக்னேஷ்வரனைப் பற்றி கேட்கும் முன் லெட்சுமி அவளாகவே
சொன்னள்.

"விடிய காலை பிளைட்டில் மதுரைக்கு கிளம்பி போயிட்டான் விக்கி.
அவன் அம்மா காசிலேயிருந்து நேத்துதான் மதுரை வந்தாங்களாம்.
நேத்து போன் போட்டு பேசினான். அம்மாவை பார்க்கணும்னு கிளம்பி
போய்விட்டான். நாளைக்கு வந்துடுவான். ஆபீஸ் வேலை நிறைய
இருக்காம்" என்று சொல்ல.

அம்மாவை பார்க்கவா, இல்லை பெற்ற பிள்ளையை போய் பார்க்கவா
என்று எண்ணியபடி இட்லியை சட்னியால் துவைத்து வாயில்
போட்டாள், பிரியா.

எப்பொழுதும் குறைந்தது இரண்டு இட்லியாவது சாப்பிடும்
பிரியாவிற்கு அன்று ஒன்றுக்கு மேல் இறங்கமாட்டேன் என்றது.

அவன் வீட்டில் இல்லை என்று தெரிந்தவுடன் வீடே வெறிச்சென்று
இருந்தது போல் தென்பட்டது பிரியாவிற்கு.

அந்த நினைப்பு தோன்றியவுடன் திகைத்தாள், பிரியா.

"நோ" என்று தலையை சிலுப்பியவள், அந்த ஏமாற்றுக்காரனிடம்
பிரியமாவது ஒன்னாவது, அப்பாடி அவன் வீட்டில் இல்லை
என்றவுடன்தான் வீடு, வீடு மாதிரி இருக்கு. இவளாகவே தன்னை
குஷிபடுத்திக்கொண்டாள்.



அது என்ன ரொம்ப உரிமையுடன்
கையிலிருப்பதை வாங்கிக்கொண்டு உள்ளே
வைக்கிறது. அவனுக்கு ரொம்பத்தான் இடம்
கொடுத்திட்டேன்.

**அ**ருகம்புல்லில் சாறு
எடுத்துச் சப்பாத்தி மாவில்
கலந்து ரொட்டி செய்து
சாப்பிடலாம். அந்தச்
சாற்றில் தாது உப்புகளும்
வைட்டமின் களும்
அதிகம் உள்ளன.

இனிமே என் வழியில் வரட்டும் உண்டு,
இல்லைன்னு ஆக்கிடறேன்.

எவ்வளவுதான், அம்மா அப்பாகிட்டே
நல்லவன் மாதிரி வேடம் போடறான்னு
நானும் பார்த்திடறேன் என்று தனக்குள்
சொல்லிக்கொண்டாள்.

ஏனோ அவனை முழுசாக நம்ப மட்டும் மனசே வரவில்லை. இந்த
வீட்டில் தங்கியிருப்பதுகூட என்ன காரியத்தையோ சாதிப்பதற்குத்தான்
என்று எண்ணத் தொடங்கினாள்.

சும்மா வெறுமனே வீட்டில் உட்கார்ந்திருந்தால் அவன்
நினைவுகள்தான் அதிகம் வருகின்றன என்று புரிந்ததும், அதற்கு என்ன
செய்வது என்று புரியாமல் விழித்தாள் பிரியா.

ரிசல்ட் வந்தாலாவது வேலைக்கு முயற்சி எடுக்கலாம். அதுவும்
அடுத்த மாசம் போல்தான் வரும். அதுவரை இவன் மூஞ்சியைத்தான்
பார்த்துகிட்டு இருக்கணுமா?

எங்கயாவது இவன் கண்காணாத தேசத்திற்கு போய் தொலைந்தால்
என்ன, எதற்கு என்னை இப்படி நிம்மதியாக இருக்கவிடாமல்
அலைக்கழிக்கிறான்.

அவனை பாராமல் இருந்த இரண்டு வருடத்தில் ஓரளவு மறந்திருந்த
பழைய நினைப்புகள் அச்சுப் பிரளாமல் நினைவுக்கு வந்தன.

"பிரியா... பிரியா... எத்தனை வாட்டி கூப்பிடறது உன்னை. இந்த
போர்வைகளை வாஷ்ங்மெஷின்லே கொஞ்சம் வாஷ் பண்ணிடு" என்று
நாலைந்து போர்வைகள் மெஷின் முன் போட்டார் லெட்சுமி.

பிரியா அதில் கொஞ்சம் கவனம் செலுத்த கொஞ்ச நேரம் நிம்மதியாக
கழிந்தது.

மீண்டும் அவன் நினைவு வர மெல்ல, அவன் தங்கி இருந்த அறைக்குள்
காலடி எடுத்து வைத்தாள்.

தாமோதரன் இருந்தவரை அவன் பயன்படுத்திய அறை. இப்போது
நிறைய வித்தியாசம் தெரிந்தது. தாமோதரனுக்கு எடுத்த பொருளை
எடுத்த இடத்தில் வைக்கத் தெரியாது. அப்படி அப்படியே சாமான்கள்,
புத்தகங்கள் என்று அங்கொன்று இங்கொன்றாய் சிதறி கிடக்கும்.

இப்போதோ அறை வெகுதுப்புரவாக இருந்தது. மேஜை
ஸ்டாண்ட்டில் அவனும், அம்மாவும் இருக்கும் போட்டோவை
...ர்த்தை பார்த்தாலே வில்லனைப் போல் இருக்கு என்று

பழித்தாள்.

“பிரியா விக்கி ரூம்லே போய் என்னத்தை குடைஞ்சுகிட்டு இருக்கே...” என்று அம்மாவின் குரல் கேட்க, திடுக்கிட்டு வெளியே வந்தாள், பிரியா.

“படிக்க ஏதாவது புத்தகம் இருக்குமான்னு போய்ப் பார்த்தேன். போர் அடிக்குது” என்று அம்மாவிடம் உளறி வைத்தாள்.

**ம**றுநாள் இரவு விக்னேஷ்வரனின் வரவிற்காக ஜம்புலிங்கமும், லெட்சுமியும் இரவு பதினொன்று வரை காத்திருந்தார்கள்.

“மதுரை பிளைட் ஒன்பதரைக்கு வந்துடுமில்லை. இன்னமும் காணுமே... ஒரு வேலை இன்னிக்கு வரமாட்டான் போல” என்று லெட்சுமி சொல்ல.

“ஆமா லெட்சுமி, கதவை பூட்டிடு... நாளைக்குத்தான் வருவானாயிருக்கும்” என்று சொல்லியபடி ஜம்புலிங்கம் தன்னுடைய அறைக்குள் செல்ல, கதவை உள்புறமாக பூட்டிய லெட்சுமியும் கணவனை தொடர்ந்தாள்.

படுக்கையில் கொட்ட கொட்ட விழித்திருந்த பிரியாவிற்கு அவன் இன்று வரவில்லை என்றதும் நெஞ்சில் படர்ந்தது ஏமாற்றமா, இல்லை நிம்மதியா என்று விளங்கவில்லை. ஊகூம்... என்று தன்னைத் தானே உலுப்பியபடி எழுந்து படுக்கை அறை கர்ட்டனை முழுவதுமாக இழுத்து மூடிவிட்டு கையில் புத்தகத்துடன் படுக்கையில் படுத்த பிரியா புத்தகத்தோடு மனம் ஒன்ற முடியாமல் நினைவுகள் எங்கோ வழுக்கிச் சென்றன.

**கா**லையில் செய்தி தாளில் கொட்டை எழுத்தில் நேற்று இரவு மதுரையில் இருந்து சென்னைக்கு கிளம்பிய விமானம் இஞ்சின் கோளாறால் வெடித்து சிதறியது என்று அச்சிடப்பட்டு இருந்ததைப் பார்த்த பிரியாவிற்கு மயக்கம் வராத குறைதான்.

லெட்சுமியோ பேப்பரை படித்ததில் இருந்து சொன்னதையே திருப்பி திருப்பி சொல்லிக்கொண்டிருந்தாள்.

“அவன் கட்டாயம் இந்த விமானத்தில் வந்திருக்கமாட்டான். இன்னைக்கு இராத்திரிதான் கிளம்புவான்” என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஜம்புலிங்கமோ, விமான நிலையத்திற்கு போன் போட்டு விசாரிக்க பயந்து இறுகிபோய் உட்கார்ந்திருந்தார்.

மகனைப் போல் பாசத்துடன் இருந்த பிள்ளையை பறிகொடுப்பது என்பது சும்மாவா?

பிரியா மனசுக்குள்ளே அழுதாள். அவன் மேல் தான் வைத்திருந்த காதல், அவன் அயோக்கியன் என்று தெரிந்த பின்னும்கூட ஒரு மாற்றுக்கூட குறையவில்லை என்று புரிந்து அழுதாள்.



சிறிது நேரம் கழித்து, காலிங்பெல் சத்தம் கேட்க, கதவை திறக்க தைரியம் இல்லாமல், மூவரும் இருந்த இடத்திலேயே ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க—

துக்க செய்தி கொண்டுவருபவனா என்று பயத்தில் லெட்சுமி முகம் வெளிறி போய் அமர்ந்திருக்க—

பிரியாதான் மெல்ல நடந்து கதவை திறந்தாள். வெளியில் நின்றவனைக் கண்டதும் முகம் பளீர் என்று மலர்ந்தது.

தன்னையும் அறியாமல், குரலில் குதூகலத்தைக் காட்டினாள், பிரியா.

> **அ**வரைக்காயை அரைத்து, தண்ணீர்விட்டுச் சட்டியில் கொதிக்க வைத்து, சிறிதளவு மிளகுத்தூள், சுக்குத்தூள் சேர்த்துக் கிண்டிவிட்டு குழம்புப் பதமாக எடுத்துக்கொண்டு இளம்சூட்டுடன் மூட்டு வலியுள்ள இடங்களில் பற்றுப் போட்டு வந்தால் மூட்டுவலி குணமடையும்!

“அம்மா விக்கி வந்தாச்சு... இங்கே பார்” என்று வெளியே அசந்துபோய் அவளையே பார்த்துக்கொண்டு நின்ற விக்னேஷ்வரனை கைபிடித்து உள்ளே இழுத்தாள், பிரியா. பிரம்மிப்புடன் விக்னேஷ்வர் தன்னுடைய கரத்தை பற்றியிருந்த அவள் கரத்தை பார்க்கவும் தான் செய்த தவறெல்லாம் உரைத்தது பிரியாவிற்கு.

“விமானம் விபத்து அது இது என்று அம்மா அப்பா இரண்டு பேரும் அப்படியே உறைந்துபோய் உட்கார்ந்துவிட்டார்கள் அதுதான்” என்று தன்னை அழகாக சமாளித்துக்கொண்டுவிட்டாள்.

இனி உங்கள் பாடு, அம்மா அப்பா பாடு என்பதுபோல் தோளை குலுக்கிவிட்டு தன்னுடைய அறைக்குள் மறைந்தாள், பிரியா.

“ஆண்ட்டி நான் நெல்லை எக்ஸ்பிரஸ்சில் வந்தேன். பிளைட்டில் வரவில்லை. பிளைட் என்றால் ராத்திரி சென்னை வருகிறது. உங்களை இரவு நேரத்தில் தொந்தரவு செய்ய வேண்டாம்ன்னுதான் ரெயிலில் வந்தேன்” என்று விளக்கிச் சொன்னான்.

“விக்கி, உன்னை முழுசா பார்த்தவுடன்தான் உயிர் எனக்கு திரும்பியிருக்கு” என்ற ஜம்புலிங்கம் அவன் கைகளை இறுக பற்றிக்கொண்டார்.

அதிர்ச்சியில் இருந்து இருவரும் மீளவில்லை என்று புரிந்தது விக்னேஷ்வரனுக்கு.

அவர்கள் அவன் மீது வைத்திருக்கும் பாசத்தைக் கண்டு நெஞ்சு நெகிழ்ந்தது. சிறிது நேரம் அவர்களுடன் அமர்ந்து பேசி சமாதான படுத்தியபின், தன் அறைக்குச் சென்றான் அவன்.

“பிரியா... இந்த தம்ளர் பாலை விக்கி கிட்டே போய் கொடுத்திட்டு வா” என்று லெட்சுமி, பிரியாவை அழைத்தாள்.

பழையபடி உற்சாகம் அவரைத் தொற்றிக்கொண்டிருப்பதைக் கவனித்த பிரியா, ஏன் மகாராஜா இங்கு வந்து குடிக்கமாட்டாரோ

என்று உள்ளுக்குள் பு[illegible]

ஆனால், அம்மா கொடுத்த தம்ளரை கையில் வாங்கிக்கொண்டு அவன் இருந்த அறையை நோக்கி நடந்தாள்.

ஜன்னல் திரைசிலையை ஒதுக்கிவிட்டுக்கொண்டிருந்த விக்னேஷ்வரன், பிரியாவைக் கண்டதும் இது என்ன புது வழக்கம் என்பதுபோல் புருவத்தை உயர்த்தி ஆச்சரியம் காட்டவும் பிரியா அதை காணாதது போல் முகத்தை திருப்பிக்கொண்டாள்.

அவன் பால் குடித்து முடிகிறவரை தம்ளருக்காக நின்றவளின் மனதில் நேரம் காலம் பார்க்காமல் பழைய நினைவுகள் வந்தன. அவன் மோதிரம் அணிவித்து முத்தமிட்டது ஞாபகம் வந்ததும் அவளையறியாமலேயே முகம் சிவந்தாள். இவன் ஏன் நல்லவனாகவே இருந்திருக்கக்கூடாது. இந்த கஷ்டம் எல்லாம் இல்லாமல் போயிருக்குமே என்று கவலையுடன் எண்ணினாள்.

பாலை அருந்திக்கொண்டிருந்தவன் பார்வையில் இருந்து பிரியாவின் திடீர் முகச் சிவப்பு தப்பவில்லை. கிட்டதட்ட இரண்டு வருடங்களுக்கு பிறகு அவன் முன்னால் முகம் சிவப்பது இதுதான் முதல்தடவை.

"பிரியா என்ன யோசித்துக்கொண்டு இருக்கிறாய்" என்று ஆச்சரியமாக ஒற்றை புருவத்தை உயர்த்தியபடி கேட்டுக்கொண்டே அவளை நெருங்கினான்.

பிரியாவிற்கு தன் தலையில் 'ணங்' என்று குட்டிக்கொள்ள வேண்டும் போல் இருந்தது.

அடுத்தது காட்டும் கண்ணாடிப்போல் தன் முகம் அவனுக்கு ஏதேனும் சைகையை காட்டியிருக்க வேண்டும். அதனால்தான், வெற்றிச் சிரிப்புடன் தன்னை நெருங்குகிறான் என்று புரிந்தது. அதனை உடைக்கும் முயற்சியாக—

"இல்லை... நேற்று இரவு ஆக்ஸிடெண்ட் ஆன பிளைட்லேயே நீங்க வந்திருக்க கூடாதான்னு நினைச்சுக்கிட்டு இருந்தேன்" என்று சொல்லிவிட்டு அவன் கையில் இருந்த தம்ளரை பிடுங்கிக்கொண்டு ஓடிவந்துவிட்டாள்.

வாய் வழியே அந்த சுடு சொற்கள், அவள் நெஞ்சிலிருந்து வந்தவை அல்ல என்று உணர்ந்த விக்னேஷ்வரன்—

இவள் மனசில் என்னைப்பற்றி என்ன வெறுப்பு, எதையோ மறைக்கிறாள், முண்டம் என்னவென்று சொன்னால்தானே புரிந்து நிவர்த்தி செய்யலாம். பேச்சு மட்டும் வாய் கிழிய வந்துடும் என்று எரிச்சல்பட்டான்.

பொறுமைக்கும் ஒரு அளவு உண்டல்லவா?

தன்னுடைய அறையில் வந்து படுக்கையில் அமர்ந்த பிரியாவிற்கு வயிற்றை புரட்டியது.



மீண்டும் இந்த வெட்கம்கெட்ட மனசு அவன்மேல் படருவதை அறிந்து செய்வதறியாமல் திகைத்தாள்.

"இப்படியே இருந்தால் சீக்கிரம் பைத்தியம் பிடித்திடும்" என்று மெல்ல முணங்கினாள். சிந்தனையில் நாட்கள் மெல்ல கரைந்தன.

## 10

சாயங்காலம் மணி ஆறரை. டைனிங்ஹால் சேரில் எதிர் எதிர் உட்கார்ந்து லெட்சுமி ஒரு பீங்கான் கிண்ணத்தில், விக்னேஷ்வரன் சொல்ல எதையோ போட்டு மெல்ல மரக்கரண்டியால் கிண்டிக்கொண்டிருந்தார்.

"இதை எல்லாம் எப்படி கத்துகிட்டே விக்கி, தாமு சமையல் அறை பக்கம் வரதுக்கே சோம்பல்படுவான். நீயானால் எனக்கு தெரியாத கேக்குகளுக்கு கூட ரெசிபி தரே" என்று கைபாட்டுக்கு வேலை செய்துகொண்டே வாய் பேசினார் லெட்சுமி.

"அமெரிக்காவில் படிக்கும்போது ஒரு பிரண்ட், அவன் கேட்டரிங் படித்தான். ஒருநாள் அவன் செய்யும்போது வேடிக்கை பார்த்ததுதான் இப்ப நான் உங்களுக்கு சொன்ன ரெசிபி..." என்று பதில் சொன்னான், விக்னேஷ்வரன்.

அதே சமயம் பிரியா ஒரு பேப்பரை தூக்கிக்கொண்டு ஓடிவந்தாள்.

"அம்மா இங்கே பாருங்கள்... ரஞ்சன் அங்கிள்ளோட போட்டோ பேப்பர்லே வந்திருக்கு..."

"பிரியா... அங்கே தண்ணி கொட்டியிருக்கு... பார்த்து வா" என்று வேகமாக லெட்சுமி சொல்வதை கவனிக்காமல் வந்த பிரியா, தண்ணியில் கால் வைக்க, மார்பிள் தரை சர்... என்று அவள் காலை வழுக்கிவிட்டது.

பொத்தென்று விக்னேஷ்வரன் மேல் படர அவன்மேல் விழக்கூடாது என்று டைனிங்டேபிளில் இடதுகை வைத்து அழுத்தி தாங்கிக்கொள்ள நினைத்தது முடியாமல் கை முறிந்துவிட்டிருந்தது.

போயும் போயும் அவன்மேல் விழுந்தோமே என்று வெட்கி சிவந்த பிரியாவிற்கு, உயிரே போய்விடும் போல் கை வலித்தது கூட பெரிசாக தெரியவில்லை. அவன்மேல் விழுந்ததுதான் அவமானமாக இருந்தது. போதாகுறைக்கு அவன் அவளை அணைத்தாற்போல தாங்கி பிடித்திருக்கவும் நெஞ்சு தடதடத்தது.

ஒன்றும் பேசாமல், அவன் கைகள் மிகப் பாதுகாப்பாய் அவளை நிமிர்த்தி நிலைக்கு கொண்டுவருவது பிரியாவிற்கு நன்கு புரிந்தது.

"அப்படி எதுக்கு கண்முன் தெரியாமல் ஓடிவரணும்? என்மேலும் தப்புதான். தண்ணியை நான் துடைச்சிருக்கலாம். பெரிய பொண்ணா அடக்கமா நடந்தாதானே, சின்ன குழந்தையாட்டம் ஓட்டம்" என்று

சொன்னவர், பிரியாவின் வேதனைமிகுந்த முகத்தை பார்த்தவு
பயந்துவிட்டாள்.

"என்ன ஆச்சு... கையை ஏன் அப்படி தூக்கி வைச்சிருக் அடிபட்டிருச்சா?" என்று பதற்றத்தோடு அவளருகே வந்தார்.

லெட்சுமியை முந்திக்கொண்ட விக்னேஷ்வரன் மடங்கியிருந்த அவ கையைப் பிடித்து ஆராய்ந்தான்.

அவனுடைய தொடுதலில் இருந்து பிரியா விலக முயற்சிக் விக்னேஷ்வரன் வலுக்கட்டாயமாக அவளின் கையை மெதுவா மடக்கி சோதனை செய்ய பிரியா தாளமுடியாத வலியில் பற்களா உதட்டை கடித்து வேதனையை அடக்க முயன்று, முடியாமல் போகவே மெல்ல முணங்கினாள்.

நிமிர்ந்து அவளுடைய வேதனையான முகத்தை பார்த்து புருவத்தை சுருக்கினான் விக்னேஷ்வரன்.

"வலித்தால் சொன்னால் என்ன? உன் கஷ்டத்தை வாய்விட் சொன்னால்தானே எங்களுக்கு புரியும். அப்போதுதானே திருத் முடியும்" என்று இரு பொருள்பட பேசியவனின் முகத்தில் கவலை ரேகைகள் அதிகம் தெரிந்தன.

"ஆன்ட்டி பிராக்சர் ஆகியிருக்காப்பல இருக்கு. டாக்டர்கிட் கூட்டிட்டு போறேன்."

"நான் உங்களோட வரமாட்டேன்" என்று பிரியா இந்த வலியிலு மறுக்க—

"பிரியா, இது ஆபீசிலேயிருந்து அப்பா வர்றநேரம். நீ இப்படி கையை ஒடைச்சுகிட்டு கண்கலங்கி, முகம் வெளுத்துப்போய் இருக்கறதை பார்த்தால் என்னமோ ஏதோன்னு பயந்திடப் போறார். விக்கியோட போ. நான் அப்பாகிட்ட மெதுவா விஷயத்தை சொல்லி தயார்படுத் வைக்கறேன். திடீர் அதிர்ச்சியை அப்பாவால் தாங்க முடியாது" என்று தொண்டை கரகரக்க லெட்சுமி பேச—

மேலே முரண்டுபிடிக்காமல் பிரியா அவனுடன் சென்றாள்.

பிரியாவின் வலியை உணர்ந்து தன்னுடைய டியூகாட்டை மி வேகமாக ஓட்டினான் அவன்.

குறிப்பிட்ட ஆஸ்பத்திரியை பத்து நிமிடத்தில் அடைந்தான் விக்னேஷ்வரன்.

அந்த ஆர்தோபிடிக்ஸ் டாக்டர் அவனுக்கு ஏற்கனவே நன்கு அறிமுகமானவர் போலும். அவனைப் பார்த்ததும் எழுந்து வரவேற்றார்.

"ஹலோ, மை யங் டைகர், இஸ் எனி திங் ராங்" என்றவர் பின்னோடு முகம் சுளிக்க கையை தூக்கிக்கொண்டு வந்து நின்ற பிரியாவைக் கண்டதும் புரிந்துபோய் அவள் கையை எக்ஸ்ரே எடுப்பதற்கான வேலைகளை துரிதமாக செய்தார்.

பத்து நிமிடத்தில் பிரியாவின் எக்ஸ்ரே ரெ



உடைஞ்சிருக்கு விக்னேஷ். ஆபரேஷன் வேண்டாம். ஆனா சுளுக்கு எடுத்துவிட்றேன்" என்றார். அதற்குள் நர்ஸ் பிரியாவை ஒரு ஏசி அறையில் ஒரு மெத்தையில் படுக்க வைத்தாள். பின்னே வந்த டாக்டர் பிரியாவிற்கு மயக்க ஊசி போட்டு, மெல்ல அவள் வலியை உணராமலேயே சுளுக்கு எடுத்துவிட்டு பிறகு அவரே கவனமாக கையில் மாவுக்கட்டு போட்டுவிட்டார்.


"வேற ஒன்றும் கஷ்டம் இல்லையே" என்று குரலில் கவலையுடன் விக்னேஷ்வரன் கேட்க—

"டோண்ட் ஒர்ரி மை பாய். இனி வலியிருக்காது. ஆனா கட்டு ஒரு மாசத்திற்கு அவிழ்க்கக் கூடாது. திருப்பி கையில் அடிபடாமல் பார்த்துக்கொள்" என்றவர் மயக்கத்தில் இருக்கும் பிரியாவை ஒரு கணம் பார்த்தவர், பின் விக்னேஷ்வரனின் கண்களில் தெரிந்த காதலையும் பார்த்துவிட்டு—

"உன் அம்மாவிற்கு இவளைப் பற்றி தெரியுமா விக்னேஷ்?" என்று

---

பெண்கள் 45 வயதுக்குமேல் கருத்தரிப்பது இங்கு அவ்வளவாக நடைமுறையில் இல்லாவிட்டாலும் வெளிநாடுகளில் 45 வயதுக்கு மேலும் குழந்தை பெற்றுக்கொள்கிறார்கள். இங்கிலாந்து பிரதமர் டோனிபிளேயரின் மனைவி செரி பிளேயர், இப்போது தன் 45-வது வயதில் 4-வது குழந்தைக்கு தாயாகியிருக்கிறார். 11 ஆண்டு இடைவெளிக்குப் பிறகு செரி பிளேயர் கருவுற்றிருக்கிறார். வெளிநாடுகளில் ஆண்டுக்கு 12 ஆயிரம் பெண்கள் 45 வயதில் கருத்தரிக்கிறார்கள்.



45 வயதுக்குமேல் குழந்தை பெற்றுக் கொள்வது சிக்கலான ஒன்று. இவர்களுக்கு சுகபிரசவத்தில் குழந்தை பிறக்க வேண்டுமென்றால் நல்ல உணவும், கட்டாய உடற்பயிற்சியும், நல்ல உறக்கமும் தேவை. புகைபிடிக்கும் பழக்கம் கூடவே கூடாது. தாய்க்கு புகைப்பிடிக்கும் பழக்கம் இருந்தால் குழந்தைக்கு எடை குறைய வாய்ப்பு உண்டு. எடை குறைந்த குழந்தை பிறந்தால் அதற்கு இரத்த அழுத்த நோயும், இதய நோயும் தாக்கும் அபாயம் உள்ளது என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

உதட்டோரத்தில் சிரிப்பு எட்டிப்பார்க்க கேட்டார்.

"தெரியும்" என்று கூச்சப்படாமல் சொல்லிவிட்டு, "இவளை இனி கூட்டிட்டு போகலாமா டாக்டர்?" என்றான்.

"மயக்கம் இன்னும் அரை மணி நேரத்திற்கு இருக்கும். இப்பவே கூட்டிட்டு போறதா இருந்தாலும் ஓகே."

விக்னேஷ்வரன் பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டு பர்ஸ்ஸை எடுக்க முயற்சிக்க,

"நோ நோ... பீஸ் எல்லாம் வேண்டாம்" என்று மறுத்தார்.

அவர் உறுதியாக இருக்கவே விக்னேஷ்வரன் மெல்ல தலையசைத்து விட்டு, சின்ன குழந்தையை தூக்குவது போல் பிரியாவை தூக்கிக் கொண்டான்.

நர்ஸ் கார் கதவை திறந்துவிட இவன் பிரியாவை பூப்போல உட்கார வைத்தான். பின் தானும் உட்கார்ந்து அருகில் பிரியாவை இழுத்து அவள் விழுந்துவிடாதபடி, தன்னுடைய ஒரு கையை அணைவாக அவள் தோளில் போட்டு காரை மெதுவாக ஓட்டினான்.

அரை மயக்க நிலையில் இருந்த பிரியாவிற்கு அவனுடைய செய்கையெல்லாம் கனவில் காண்பது போல் இருந்தது.

இனிமையான இந்த கனவில் இருந்து நான் கலைந்து எழும்பவே கூடாது என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் பிரியா.

## 11

பிரியா கை கட்டு போட்டு நாட்கள் பத்து கடந்துவிட்டன. உடைந்தது இடது கையாகிபோய்விட்டதால், மற்ற வேலைகளைப் பார்க்க சிரமப்படவில்லை பிரியா.

வீட்டைவிட்டு கை கட்டோடு எங்கும் வெளிச் செல்ல பிரியா விருப்பப்படாததால் வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தாள்.

இடையே தாமோதரன் இந்த மாதம் சென்னை வரவில்லை. லீவு கிடைக்கவில்லை. அடுத்த மாதம் வருகிறேன் என்று லெட்டர் போட்டது மிகவும் வருத்தமாக இருந்தது.

கீதா இரண்டு நாட்களுக்கொருமுறை வந்து பிரியாவை பார்த்தாள். "அப்பாவிற்கு கவுசிக்கை மிகவும் பிடித்துவிட்டது. கல்யாணத்திற்கு சம்மதம் சொல்லிவிட்டார்" என்று பிரியாவின் கழுத்தை கட்டிக் கொண்டு குதித்தாள் அவள்.

அதைக் கேட்டதில் இருந்து பிரியாவிற்கு சந்தோஷமாக இருந்தது.

அவளுக்கு பிடிக்காத விஷயம் என்னவென்றால் விக்னேஷ்வரன் அவளுடைய மனதில் சுதந்திரமாக அடிக்கடி உலா வந்த...



தடுக்க முயற்சித்தவள் முடியாமல் மனதை அதன் போக்கில் விட்டுவிட்டாள்.

அன்று பொழுதுபுலர்ந்தவுடன் வழக்கம் போல் தூக்கம் கலைந்தது பிரியாவிற்கு. ஆனாலும் கண்முழிக்க சோம்பல்பட்டு சும்மா படுத்திருந்தாள்.

தலையில் உள்ள பேன் நீங்க, படிகாரத்தைத் தண்ணீரில் விட்டு அரைத்துத் தலையில் தேய்த்துக் குளிக்கலாம்.

அவள் சற்றும் எதிர்பாராமல் அந்த வேளையில் விக்னேஷ்வரன் அவள் அறைக்குள் நுழைந்து "பிரியா" என்று அழைக்கவும் திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

அவன் கையில் பூச்செண்டு இருந்தது.

"பிறந்த நாள் வாழ்த்துக்கள்" என்று சொல்லி பூச்செண்டை அவளிடம் நீட்டினான்.

இவனுக்கு எப்படி எனக்கு இன்று பிறந்த நாள் என்று எப்படி தெரியும் என்று எண்ணியபடி, கை நீட்டி மலர் செண்டை வாங்கிக்கொள்ளவும், விக்னேஷ் அவள் கன்னத்தில் முத்தமிட்டுவிட்டு நகர்ந்தான்.

விக்கித்துப்போனாள் பிரியா. நெஞ்சு வேலை செய்வதை நிறுத்தி விட்டது போல் இருந்தது. எவ்வளவு நேரம் அப்படி அவள் சிலையென அமர்ந்திருந்தாள் என்று அவளுக்குத் தெரியாது.

"ஹாப்பி பர்த் டே பிரியா" என்று அப்பாவும் அம்மாவும் சொல்லிக்கொண்டு வர, தன் நிலை உணர்ந்து தலையை சிலுப்பினாள் பிரியா.

அம்மாவும், அப்பாவும் அவள் கையிலிருந்த மலர்ச்செண்டை பார்த்தவுடன், ஒருவரை ஒருவர் ஆச்சரியத்துடன் பார்த்துக்கொள்வது புரிந்தது. பிரியா அதை கண்டும் காணாதது போல் இருந்தாள்.

"பிரியா! கையில் தண்ணி படாம சீக்கிரம் போய் குளிச்சிட்டு வந்திரு. கோயிலுக்கு ஒரு அர்ச்சனை முடிச்சிட்டு வரலாம்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்கள் இருவரும்.

அவன் உதடு பட்ட இடம் இன்னும் சூடாக இருந்தது பிரியாவிற்கு. தன்னுடைய கன்னத்தை வலது கையால் தொட்டு பார்த்த பிரியாவிற்கு அந்த நேரத்தில் உள்ளத்தில் தோன்றிய உணர்ச்சியை அவளாலேயே அடையாளம் காண முடியவில்லை.

அதன்பிறகு தொடர்ந்து வந்த இரண்டு நாட்களிலும் பிரியா அவனை பார்க்கவில்லை.

"புது காண்ட்ராக்ட் வந்திருக்கலாம். அதனால் சீக்கிரமா போயிட்டான்" என்று ஒருநாள் யோசித்து யோசித்து பிரியா விக்னேஷ்வரனை பற்றி லெட்சுமியிடம் கேட்டபோது அவர் சொன்னார்.

தினமும் பார்த்து பழகிய கண்களுக்கு, அவனை காணாமலும் வெறுப்பாக இருந்தது.

பாழும் மனசுக்கு விவஸ்தை என்பது கிடையாதா?

சில காய்ந்த மிளகாய்களைப் புத்தக அலமாரிகளில் போட்டு வைத்தால் பூச்சி, புழு சேராமல் இருக்கும்..

விக்னேஷ்வரனை நெஞ்சில் வைத்துக் கொண்டு, வேறு யாரையும் கணவனாக வரிக்க தன்னால் முடியாது என்று எண்ணிய பிரியாவிற்கு எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாக இருந்தது.

நம்பிக்கை துரோகம் செய்தவனுக்கு மாலையிடுவது என்பது கனவிலும் நடக்கமுடியாத விஷயம். ஆனால் அவனை மறந்துவிடுவது என்பதும் அவள் உயிருடன் இருக்கும்வரை நடவாத விஷயம்.

இந்த இரண்டு எண்ணங்களுக்கிடையே போராடிக்கொண்டு பித்துப் பிடித்தவள் போல் இருந்த பிரியாவை, லெட்சுமி கவலையுடன் கவனித்துக்கொண்டிருந்தார்.

பிரியாவிற்கும், விக்னேஷ்வரனுக்கும் இடையில் ஏதோ விஷயம் நடந்திருக்கிறது என்று அவள் தாய் உள்ளம் கண்டுபிடித்தது. ஆனால் அது என்ன என்று மட்டும் புரியவில்லை.

பிரியாவை கை கட்டு அவிழ்க்க என்று ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றான் விக்னேஷ்வரன்.

கட்டவிழ்த்துவிட்டு காரில் வரும்போது இரண்டுமுறை விக்னேஷ்வரன் சாலையில் இருந்து பார்வையை விலக்கி, பிரியாவை பார்த்தான்.

அவளாகவே ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தவன் போல் அவன் முகம் காட்சியளித்தது.

இவனிடம் பேச என்ன இருக்கிறது என்பதுபோல் பிரியா அலட்சியம் காட்டி, வெளிப்புறக் காட்சியில் கண்பதித்தாள்.

கடந்த ஒரு வாரமாக அவன் தன்னிடம் முகம் கொடுத்து பேசாதது பிரியாவை உறுத்தியது. "இன்று கை கட்டு பிரிக்க டாக்டர்கிட்டே கூட்டிட்டு போகணும் ஆன்ட்டி, பிரியாவை தயாராயிருக்க சொல்லுங்க" என்று லெட்சுமியிடம்தான் சொல்லிவிட்டு சென்றான்.

ஒரு மாதமா மதுரைக்கு போகவில்லை இல்லையா? ஆசைநாய்கி ஞாபகம் வந்திருக்கும் என்று உள்ளூர புகைந்தாள். வேறு என்ன செய்ய முடியும் அவளால்.

ராஜாஜி ஹால்லே "ஆர்ட் எக்ஸிபிஷன் நடக்கிறது. இன்றுதான் லாஸ்ட் டேட் அம்மா. நான் போய்விட்டு வரேன்" என்று ஒரு மத்தியான வேளையில் கிளம்பினாள் பிரியா.

"வெயிலாயிருக்கே, வெயில் தணிஞ்சபிறகு போயேன் பிரியா."

"குடை பிடிச்சுப்பேன்ம்மா" என்றாள் பிரியா.

"பட்ட எடத்திலேயேதான் அடிபடும். கையை கொஞ்சம் பத்திரமா





பார்த்துக்கோ. கட்டவிழ்த்து இரண்டு நாள்தான் ஆகுது. ஜாக்கிரதை" என்று லெட்சுமி சொல்ல,

"ம்ம்ம்...' கொட்டிவிட்டு போனாள் பிரியா.

'ஆர்ட் எக்ஸிபிஷன்' சென்னையில் எங்காவது நடக்கிறது என்று கேள்விப்பட்டால் உடனே அதை பார்க்க கிளம்பிவிடுவாள்.

பிரியாவிற்கு பெயிண்டிங் மேல் சின்ன வயசிலிருந்தே விருப்பம் உண்டு. அவளைவிட தாமோதரன் அழகாக வரைவான். நிறைய கலை நுணுக்கங்களை அவளுக்கு தாமோதரன் சொல்லிக் கொடுத்திருக்கிறான்.

தாமோதரன் சென்னையில் இருந்தவரை பிரியாவை நிறைய ஆர்ட் எக்ஸிபிஷனுக்கு அழைத்துச் சென்று பழக்கப்படுத்திவிட்டதால் பிரியாவும் கலையை ரசிக்க கற்றுக்கொண்டுவிட்டாள்.

தாமோதரன் அழைத்துச் செல்ல இப்போது அருகில் இல்லை என்றாலும், பிரியா தனியாக செல்ல பழகிவிட்டாள்.

ஒண்ணரை மணி நேரமாக ஒரு பிக்சரையும் விடாமல் ரசித்து முடித்து பிரியா வெளியே வரவும்,

"ஹலோ பிரியா" என்று முகம் முழுக்க சிரிப்பாக கவுசிக் அவள் முன் வந்து நின்றான்.

கவுசிக்கை பார்த்தவுடன் "என்ன சமரசமாயாச்சா?" என்று நமுட்டு சிரிப்புடன் பிரியா கேட்க,

"எல்லாம் உங்களால்தான். உங்களுக்குதான் தேங்ஸ் சொல்லணும். அப்புறம் உங்க கை பிராக்சர் எப்படியிருக்கு? சரியாயிடுச்சா? கீதா அதைப்பற்றிச் சொன்னாள். ஆனால் உங்களை வீட்டுக்கு வந்து பார்க்க கொஞ்சம் தயக்கமா இருந்தது" என்று கவுசிக் விசாரித்தான்.

அவன் முன் தன்னுடைய இடது கையை நீட்டினான்.

"நீங்களே பாருங்களேன். கட்டுகூட அவிழ்த்தாச்சு. ஐ எம் பெர்பக்ட்லி ஆல் ரைட்."

அவள் கையை பற்றி பார்த்தவன், "பரவாயில்லை சீக்கிரமா குணமாயிடுச்சா, மாவு கட்டு போட்டீங்களா? என்னோட தங்கைக்கு சின்ன வயசுலே பிராக்சர் ஆனப்ப நாட்டு கட்டு போட்டோம். கொஞ்சம் பிரச்சினை ஆயிடுச்சு. ஒழுங்கா குணமாகவே மூணு மாசம் ஆச்சு" என்று அவன் சொன்னான்.

அதேசமயம், ஒரு வெளிநாட்டு நண்பர், ஆர்ட் எக்ஸிபிஸன் பார்க்க வேண்டும் என பிரியபட, அவரை அழைத்துக்கொண்டு வந்த விக்னேஷ்வரனின் கண்களில் பிரியாவும், அவள் கையைப் பிடித்துப் பேசிக்கொண்டிருந்த ஆண்மகனும் தென்பட அவன் இதயத்தில் எரிமலை வெடித்தது. கண்கள் கோபத்தில் சிவந்துபோயின.

பிரியாவும், விக்னேஷ்வரனை பார்த்துவிட்டாள்.

அவன் கண்களில் தெரிந்த கனலை கண்டு புரியாமல் உதட்டை

> நரம்புத் தளர்ச்சி நோய் நீங்க, அரைக்கீரையை நெய்யில் வதக்கித் தினமும் சாப்பிட்டு வரலாம்.

கடித்தவள், அவனிடம் பேச விரும்பாதவள் போல கவுசிக்கிடம் இழைந்து குழைந்து பேசினாள்.

கூட இருந்த வெளிநாட்டு நண்பனை முன்னிட்டு, தன்னை கட்டுப்படுத்திக் கொண்ட விக்னேஷ்வரன், அவளை பார்வையால் எரித்துவிட்டு அவளை தாண்டி ஆர்ட் எக்ஸிபிஷன் ஹாலில் நுழைந்தான்.

விக்னேஷ்வரன் பார்வையில் இருந்து மறைந்தவுடன் பிரியா, கவுசிக்கிடம் விடைபெற்று ஆட்டோ பிடித்து வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டில் லெட்சுமியும், ஜம்புலிங்கமும் அவளுக்காகவே தயாராக காத்து இருந்தார்கள்.

"பிரியா! கிருஷ்ணமூர்த்தி அங்கிளுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சாம். விஜயா ஆஸ்பத்திரியில் அட்மிட் செஞ்சிருக்காங்களாம். நானும் அப்பாவும் ஆஸ்பத்திரி போய் பார்த்துவிட்டு வர்றோம். ஆண்டிக்கு ஆறுதலா கொஞ்ச நேரம் இருந்து வருவோம். நீ பத்திரமா இரு" என்று சொல்லிவிட்டு இருவரும் பியட்டில் ஏறி சென்றார்கள்.

## 12

அம்மாவும், அப்பாவும் வெளியே சென்றவுடன் வீடே வெறிச் என்று இருந்தாற்போலிருந்தது பிரியாவிற்கு.

சோபாவில் அமர்ந்து, எதிர்காலத்தைப் பற்றி தீவிரமாக நகம் கடித்தபடி யோசித்தாள். விரல் புண்ணானதுதான் மிச்சம். வேறு ஒன்றும் விடியக் காணும். எதிர்காலம் பெரிய கேள்விக்குறியாக இருந்தது.

ரிசல்ட் இன்னும் இரண்டு நாட்களில் வந்துவிடும். எதிர்பார்க்கும் வேலையும் சுலபத்தில் அமைந்துவிடும். சந்தோஷம்தான்.

அதன்பிறகு...

வாழ்க்கை சுவாரசியமற்று செல்வதை அவளால் உணர முடிந்தது. உப்பு சப்பற்ற வாழ்க்கை.

எல்லாவற்றுக்கும் காரணம் விக்னேஷ்வரன். உதட்டை பற்களால் கடித்து தன்னை நிதானப்படுத்த முயன்றாள்.

பலன், உதட்டில் இரத்தம் கசிந்ததைத் தவிர வேறில்லை.

விக்னேஷ்வரன் அவளுடைய இரத்தத்தின் ஒவ்வொரு அணுவிலும் கலந்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

கண்ணில் கண்ட அத்தனை பொருட்களையும் ஆத்திரத்தில் கீழே போட்டு உடைக்க வேண்டும் போல் பிரியாவிற்கு வெறி உண்...



தன்னிடமே கோபம் உண்டானது. அவனின் நினைப்பை மனதில் இருந்து முதலில் விலக்க வேண்டும் என்று புரிந்து மாற்றுடையுடன் குளியலறை புகுந்தாள்.

> கர்ப்பிணிப் பெண்கள் திராட்சைப் பழத்தை அடிக்கடி சாப்பிட வேண்டும். பிரசவ வலியையும் கஷ்டத்தையும் குறைப்பதற்கு இப்பழம் மிகவும் உதவுகிறது.

குளித்தது மனதை ஓரளவு நிலைப் படுத்தியது.

டைனிங் டேபிளில் இருந்த பிளாஸ்க்கில் இருந்து டீயை கப்பில் ஊற்றி மறுபடியும் சோபாவில் அமர்ந்து சிறுக சிறுக குடித்தாள்.

மனசு முழுவதும் நிதானம் பெற்றது மாதிரி இருந்தது.

அதற்குள் காலிங்பெல் சத்தம் கேட்க யாராக இருக்கும் என்று யோசித்தபடி கதவை திறந்தாள் பிரியா.

விக்னேஸ்வரனைக் கண்டதும், என்ன மகாராஜா இன்று இவ்வளவு சீக்கிரமாக வீடு வந்து சேர்ந்திருக்கிறான் என்று நக்கலாக நினைத்துக் கொண்டாள்.

அவனாக அம்மாவைப் பற்றி கேட்குமுன், "அம்மாவும் அப்பாவும் வெளியே போயிருக்காங்க" என்று சொல்லி வைத்தாள்.

அதற்குள் ஷூவை கழற்றிவிட்டவன், பிரியாவின் எதிரே நின்று, தன்னுடைய கூர்மையான விழிகளால் அளந்தான். பின்— "யார் அது பிரியா?" என்று மிக அமைதியாக கேட்க,

வந்ததும் வராததுமாக அவன் கேட்ட கேள்வி புரியாமல் "யார் என்னது" என்று பிரியா புருவத்தை உயர்த்த,

"நான்கு பேர் பார்ப்பார்கள் என்கிற நினைப்புக்கூட இல்லாமல் நடுவீதியில் உல்லாசமாக கைபிடித்து பேசிக்கொண்டிருந்தாயே அவன்" என்று உறுமலாக அவன் கேட்க,

பிரியா அவனை உறுத்து கோபமாக பார்த்தாள். அவளை தவறாக எடைபோடுகிறான் என்று புரிந்து முகம் குப்பென்று சிவந்தது. எவ்வளவு தைரியம் என்று வெகுண்டவள், இவனிடம் நான் எதற்கு ஒழுங்காக பதில் சொல்ல வேண்டும்? புத்தியை பார்... குறுகின புத்தி. அவனைப் போல் எல்லோரையும் நினைச்சுட்டான் போல என்று கடுகடுத்தவள், முகத்தை நன்றாக நிமிர்த்தி, "நான் யார்கிட்டேயும், எப்படி வேண்டுமானாலும் பேசுவேன். ஈது நடுவீதியாயிருந்தாலும் சரி, நான் நான்கு பக்கமும் எழுப்பியிருக்கிற அறையை அதைக் கேட்க உங்களுக்கு உரிமை கிடையாது. உங்க வேலையை பார்த்துவிட்டு போங்க" என்று அழுத்தம்திருத்தமாக சொல்ல,

பிரியா சற்றும் எதிர்பாராத வண்ணம், அவள் கன்னத்தில் பளார் என்று ஒரு அறை அறைந்தான் விக்னேஷ்வரன்.

"என் உயிர் சிநேகிதனின் தங்கை தறிகெட்டு அலைவதை கண்டு ...ம்மா இருக்க முடியாது" என்று தாடை இறுகச் சொன்னான்.

விக்னேஷ்வரன் அறைந்ததில் சோபாவில் போய் விழுந்த பிரியா அவன் பேசியதைக் கேட்டதும் பொங்கி எழுந்தாள். அதுநாள் வரை அடக்கி வைத்திருந்த ஆவேசம் பெருக, "தாலி கட்டாமல் பெண்டாட்டி வைத்துக்கொண்டு, பிள்ளையை பெற்று, போதாதற்கு என்னை வேறு திருமணம் செய்துகொள்வதாக கூறி சல்லாபம் புரிந்த நீங்கள் தறிகெட்டு அலைகிறீர்களா? இல்லை நானா?"

அவள் பேசபேச அவளையே வெறித்துப் பார்த்தான் விக்னேஷ்வரன்.

"இல்லையென்று சொல்லாதீர்கள். நானே என் கண்ணால் பார்த்தேன். அப்படியே உங்களை உரித்துக்கொண்டு இருக்கிறான் அந்த பையன். எங்கப்பா பெயர் விக்னேஷ்வரன் என்று அழுத்திச் சொல்றான். அறியா வயசில் காதல் போதையில் நான் செய்த தவறு என்று சோகபிம்பமாய் சொல்கிறாள் அந்தப் பெண்" என்று மூச்சிரைக்க, தொண்டையடைக்க பேசினாள் பிரியா.

விக்னேஷ்வரன் அவள் சொன்னதை நம்பமுடியாமல் அதிர்ந்து போய் நின்றவன், பிறகு சுதாரித்து, "என்னை என்ன பொம்பளை பொறுக்கி என்றா நினைத்தாய்?" அடிபட்ட புலியாய் சீறினான்.

"ஊர் உலகத்தில் என்னைத் தவிர வேறு விக்னேஷ்வரன் கிடையாதா? என் அண்ணன் மகன் என் சாயலில் இருக்கக் கூடாதா? எவ்வளவு சுலபமாக என்னை கெட்டவனாக தூக்கி எறிந்து இருக்கிறாய் நீ" என்று உறுமினான்.

"ஆனால் உங்க வீட்டுக்கு வந்து, நான் என் விக்னேஷை பார்க்க வந்தேன் என்று அந்த பெண்தான் தெளிவா சொன்னாளே. உங்க வீட்டுக்கு வந்தவள் ஊர் உலகத்திலே இருக்கிற விக்னேஷ்வரனை பத்தியா பேசுவா? உங்களைத்தான் குறிப்பிட்டாள்" என்று காட்டமாக கேட்டாள் பிரியா.

"நீ எப்பொழுது அந்த பெண்ணைப் பார்த்தாய்?" என்று சினம் பெறுக கேட்டான் விக்னேஷ். செய்யாத தவறுக்கு பழிசுமக்க அவன் தயாராகவில்லை.

"என்னை மதுரை வீட்டில் விட்டுவிட்டு நீங்களும், தாமு அண்ணா வும் பொள்ளாச்சிக்கு யாரையோ பார்க்கப் போனப்போ, அவள் வந்து நான் யார் என்று தெரியாமல், வெகுளித்தனமாக நீங்கள் அவளை மணம்புரிவதாக அவளை ஏமாற்றி பிள்ளையுடன் கைவிட்ட கதையைப் பற்றி பிழிய பிழிய அழுது சொன்னாள். பக்கத்தில் உட்கார்ந்த சின்ன பையன், "அப்பாவை காட்டறேன்னு கூட்டிட்டு வந்திட்டு, காட்டாம, இந்த ஆன்ட்டி கூடவே எவ்வளவு நேரம் பேசிகிட்டு இருப்ப என்று தொண தொணத்தான். எவ்வளவு அழகான குழந்தை... என் தாமு அண்ணா நண்பனாக இருந்தும் உங்களுக்கு எப்படி இந்த மாதிரி கேவலமான புத்தி போச்சி... அவனுக்கு நீங்க துரோகம் பண்ண எப்படி மனசு வந்துச்சு... அதோட என்னையும் என் மனசையும்..."





என்று இடைவிடாமல் பேசிய பிரியாவின் குரல் அழுகையில் உடைந்துபோனது.

**து**ளசி இலையை நன்றாகக் கசக்கித் தண்ணீரில் கொதிக்க வைத்து, வாயில் விட்டுத் தினமும் கொப்பளித்தால் வாய் நாற்றம் நீங்கும்.

"ம்... ம்... ம்... மதுரையை விட்டு என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் சென்னைக்கு ஓடி, டெல்லிக்கு மறைந்து என்னை விரோதியைப் போல் பார்த்த காரணம் இதுதானா?" என்று நெஞ்சை கையால் பிடித்தவண்ணம் நெடிய பெருமூச்சை விட்டான் விக்னேஷ்வரன்.

அது மிகுந்த நெஞ்சின் வலியால் வந்த வார்த்தைகளா அல்லது நெஞ்சின் நிம்மதியாய் பிறந்த வார்த்தைகளா என்று பிரியாவால் இனம் கண்டுகொள்ள முடியவில்லை.

அவளிடம் இருந்து விலகி தள்ளியிருந்த சோபாவில் போய் மெல்ல அமர்ந்த விக்னேஷ்வரன்–

"எங்கள் குடும்பம் கூட்டு குடும்பம் என்பது உனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு குழப்பத்திற்கும் மன வருத்தத்திற்கும் காரணம்– என் பெரியப்பாவின் மகன்– அதாவது எனக்கு ஒன்றுவிட்ட அண்ணன்– அவன் பெயரும் விக்னேஷ்வரன் என்பதுதான் உனக்கு தெரியாத விஷயம்" என்று சின்ன குரலில் விக்னேஷ்வரன் பேசப் பேச–

பிரியாவிற்கு தலை கிறுகிறுத்தது. எவ்வளவு பெரிய முட்டாள்தனம். எவ்வளவு பெரிய தவறு. ஐய்யோ என்று வாய்விட்டு கதறத் தோன்றியது. இரு கைகளாலும் முகத்தை மூடி பொத்தென்று சோபாவில் சாய்ந்தாள் பிரியா.

ஆனால் விக்னேஷ்வரன் நிறுத்தாமல் அவள் கேட்ட கேள்வி களுக்கு எல்லாம் பதிலை விளக்கியபடி இருந்தான்.

"என்னுடைய தாத்தாவின் பெயர் விக்னேஷ்வரப்பிள்ளை. அவர் பெயர் தாங்கி பேரன் வாரிசு வரவேண்டும் என்று அவர் ஆசைப்பட, பெரியப்பா உடனே தன் மகனுக்கு விக்னேஷ்வரன் என்று என்னுடைய தாத்தாவின் பெயரிட்டார். என்னுடைய அப்பாவும் ஒரு வருடம் கழித்து நான் பிறந்ததும் இவனும் உங்களுக்கு பேரன் வாரிசு. இவனுக்கும் உங்கள் பெயரைத்தான் வைக்கணும் என்று விக்னேஷ்வரன் என்று பெயர் வைத்தார்.

வீட்டில் அவனை கணேஷ் என்றும் என்னை விக்கி என்றும் அழைப்பதால் பெரிய பெயர் குழப்பம் ஒன்றும் ஏற்படவில்லை. ஆனால் நீ..." என்று நிறுத்தியவன் பின்தொடர்ந்து, "நீ சொன்ன அந்தப் பெண் இப்பொழுது என் அண்ணி... ஏதோ சின்ன தவறு செய்த கணேஷ், பெரியப்பாவுக்கு பயந்து இந்தப் பெண் விஷயத்தை மூடி மறைத்து அவனை மன்னித்து பிறகு பெரியப்பா



அவனுக்கும் நீ பார்த்த அதே பெண்ணிற்கும் திருமணம் செய்து வைத்துவிட்டார். நானும் கணேஷும் முகச் சாடையில் என் தாத்தா வைக் கொண்டு பிறந்தோம். அதனால் அவன் குழந்தையும் என் தாத்தாவுடைய முகச்சாடை ம்ம்ம்..." என்று நிதானமற்று நெற்றியை தேய்த்துவிட்டுக்கொண்டான்.

பிரியாவிற்கு முகத்தை நிமிர்த்தி அவனை பார்க்கும் தைரியம் கொஞ்சமும் இல்லை.

எப்படி அபாண்டமாக அவன்மேல் பழி போட்டிருக்கிறேன் என்று தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.

"ஒரு உப்பு பெறாத விஷயத்திற்காக என்னை இரண்டு வருடம் அலைக்கழித்திருக்கிறாய் நீ..."

பதில் பேசாமல் அமர்ந்திருப்பதை கண்டவுடன் ஒரு நிமிடம் அவளையே கண் இமைக்காமல் பார்த்தான்.

"இப்போதே சொல் பிரியா. உனக்கும், அவனுக்கும் என்ன சம்மந்தம்? எப்படிப் பிரியா என்னை இவ்வளவு சுலபத்தில மறந்து, வேறொருவனை நாடினாய்? நான் இடம்பிடித்திருந்த உள்ளத்தில் மற்றொருவனை குடியேற்ற உனக்கு கடினமாக இல்லையா?" என்று கண்களில் கனல்தெறிக்க கேட்டான் விக்னேஷ்வரன்.

அவன் பேசிய பேச்சுகள் ஒவ்வொன்றும் ஈட்டிமுனையால் அவள் நெஞ்சைத் தாக்கியது. கண்கள் இரண்டையும் இறுக மூடி, "அவன் கவுசிக். உங்களுக்கு கீதா தெரியுமில்லை? அவளோட வருங்கால கணவன்" என்று சொன்ன பிரியா விக்னேஷ்வரன் முகத்தில் இறுக்கம் மெல்ல மெல்ல குறைவதைக் கண்டு, அதுவரை அடக்கி வைத்திருந்த விம்மல் வேகமாக வெடிக்க எழுந்து அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள் பிரியா.

"இரண்டு வருடம் ரொம்ப பெரிசு பிரியா" என்று குரல் கரகரக்க சொன்னவன், தன்மேல் விழுந்தவளை தன்னுடன் பிணைத்துக் கொண்டான்.

"நான் எவ்வளவு பெரிய தப்பு பண்ணிட்டேன். என்னை மன்னிச்சேன்னு ஒருமுறை சொல்லுங்க...சொல்லுங்க" என்று கண்களில் நீர் வழிய அழுதபடி திரும்ப திரும்ப அதையே சொன்னாள் பிரியா.

அவளின் முகவாயை தொட்டு நிமிர்த்தி அவளின் கண்களை ஊடுருவிப் பார்த்தான், விக்னேஷ்வரன்.

"கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய் என்று நீ கேள்விப்பட்டதில்லையா பிரியா?" என்று விக்னேஷ்வரன் கேட்டபோது, இதே வாக்கியம்தான் கவுசிக்கிடம் சொன்னது ஞாபகத்தில் வந்து அவளை கூசச் செய்தது.

அவமானத்தில் முகம் சிவக்க அவன் அணைப்பில் இருந்து விலக முயற்சித்தவளை, விக்னேஷ்வரன் பிடி மேலும் இறுக்கியது.

"இனி ஒரு கணமும் என்னிடம் இருந்து நீ பிரிய முடியாது பிரியா. இரண்டு வருடம் என்னை தண்டித்ததற்கு காரணமே இல்லாமல் நான் தரும் தண்டனை" என்று குனிந்து அவளின் சிவந்த உதட்டில் முத்தமிட பிரியாவிற்கு உலகமே மறந்துபோனது.

சில நிமிடங்களில் அவளை விடுவித்த விக்னேஷ்வரன், வெட்கத்தில் குழித்திருந்த கன்னங்களையும், முகச்சிவப்பினையும் கண்டு அதிசயித்தான்.

"எவ்வளவு அழகாக இருக்கிறாய் பிரியா. என்னை விட்டால் இப்பொழுதே உன்னை என்னுடையவளாக்கிக்கொள்வேன். ஆனால், அப்படி செய்தால் தாமு என்னை உண்டு இல்லை என்று ஆக்கி விடுவான். அவன் வந்தவுடன்தான் உன்னை கல்யாணம் செய்ய வேண்டும் என்று ஆர்டர் போட்டுவிட்டு சென்றான். உம்ம்ம்... இன்னும் ஒரு மாதம் காத்திருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு பெருமூச்சு விட்டான் விக்னேஷ்வரன்.

ஆச்சரியமாக, முகம் சிவக்க அவனைப் பார்த்த பிரியா "தாமு அண்ணாவுக்கு எப்படி....?" என்று வார்த்தையை முடிக்காமல் கேட்க...

அவளுடன் தானும் சோபாவில் உட்கார்ந்து, "உன்னை முதன் முதலாக பார்த்த அன்றே என் விருப்பத்தை, அவனிடம் சொல்லி விட்டேன்.

மாப்பிள்ளை, என்று என்னை ஒருநாள் சீண்டினானே ஞாபகமிருக்கா பிரியா? உன்னை நான் கல்யாணம் செய்துக்க விரும்பறேன்னு அவனிடம் சொன்னதில் இருந்தே அதே கேலிதான். கண்டதும் காதலா? என்று என்னை ஒரு வழி பண்ணிவிட்டான். மதுரையில் இருந்து வந்தபிறகு நீ என்னிடம் முகம் கொடுத்து பேசாத விஷயம் அவனுக்குத் தெரியும். என்னவென்று கேட்டான். எப்படியும் உன்னை சரியாக்கிவிடும் என்ற எண்ணத்தில் 'சின்ன லடாய்' என்று சொல்லி வைத்தேன்."

"தாமு அண்ணா என்னிடம் ஒரு வார்த்தைகூட இதைப்பற்றி கேட்கவில்லை" என்று கண்கள் மின்ன உரிமையுடன் விக்னேஷ்வரனின் தோளில் சாய்ந்தாள் பிரியா.

**(முடிந்தது)**

ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: ர. பாஸ்கரன், சிண்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.





# பெண் ஒரு புரியாத புதிர்



சூரியன் உதயமாகி, லேசாக மழை தூறிக்கொண்டிருந்தது. சூரியோதக் காட்சியும், அந்த ரம்மியமான காலை நேரத்து குளிரையும், பூக்களில் படிந்துள்ள நீர்த்துளிகளையும் ரசிப்பதற்காகவே ஜெயந்தி விடிவதற்கு முன்பே எழுந்து குளித்து, புத்துணர்ச்சியோடு தோட்டத்திற்கு உலாவப் போவாள்.

ஆனால் இன்று மணி பத்தாகியும் படுக்கையைவிட்டு எழமுடியாத மனநிலையில் குழம்பிப்போய்க் கிடந்தாள்.

உள்ளம் தீயாய் எரிந்தது. கண்களிலிருந்து வழிந்தோடும் நீரை துடைக்கக்கூட தோன்றாமல் கார் டிராவர் ராஜாக்கண்ணு கொடுத்துவிட்டுப் போன கார் சாவியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதன்முதலாக தன் கணவன் ஜெகதீஷுக்கு அவள் அளித்த காதல் பரிசு அது. இரண்டு லவ்பேர்ட்ஸ்கள் ஒன்றையொன்று முத்தமிட்டுக்கொள்ளும் பொம்மை கீ–செயினுடன் கூடியது. அன்று ஜெயந்தி கீ–செயினை பரிசாக அளித்தபோது சட்டென்று அவள் உதடழுந்த ஜெகதீஷ் கொடுத்த முத்தத்தின் ஸ்பரிசம்கூட இன்னும் மறையவில்லை. அதற்குள்... இப்படி ஒரு துரோகத்தை செய்ய ஜெகதீஷுக்கு எப்படி மனம் வந்தது?

வேலைக்காரி கொண்டுவந்து வைத்துவிட்டுப்போன ஹார்லிக்சை ஈக்கள் மொய்த்துக் கொண்டிருந்தன. இப்படித்தானே ஜெகதீஷும் என்னை மொய்த்துக் கொண்டிருந்தார். காணும் பொருட்கள் அனைத்திலும் காதல் கணவன் ஜெகதீஷைப் பற்றி நினைக்காமல் அவளால் இருக்க முடியவில்லை.

காலிங்பெல் சத்தம் கேட்டு